1817
52-2

# ஸ்ரீமத் ஆண்டவன்

## ஆச்ரம வரலாறு

KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA

1126

ஆதீனம்
307

1967

http://acharya.org

இவ்வரலாற்றை எழுதி உதவியவர்கள் :

ஸ்ரீ உ.ப. வே. நெடுங்தெரு, வித்வான் ஸ்ரீநிவாஸாசார் ஸ்வாமி

ஸ்ரீ உ.ப. வே. நடாதூர், கல்யாணவேங்கடேசாசார் ஸ்வாமி

கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்-630 307

http://acharya.org

கோவிலூர் ஆதீனம்
A-No: 1126
21-3-32
கோவிலூர்-630 307
52-2

ஸ்ரீ:
ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீரங்கநாத மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே பாதுகாஸேவக ராமாநுஜ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹாதேசிகாய நம:
ஸ்ரீரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

# ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம்

நாமெல்லாரும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் எனப்படுகிறோம். விஷ்ணு என்றால் உடலுள் உயிர்போல் (திடவிசும்புஎரி வெளிநீர் நிலமிவைமிசை உயிரென கரந்து எங்கும் பரந்துளன்) என்கிறபடி, எல்லாவற்றையும் வ்யாபித்தும் தரித்தும் நியமித்தும் இதுகளால் வரும் பெருமையை அடைந்து சேஷியாயும் ஸ்வாமியாயும் ஆத்மாவுமாகவும் இருப்பவன். நாமெல்லோரும் அவனால் தார்யர்களாயும் நியாம்யர்களாயும் சேஷராயும் தாஸர்களாயுமிருப்பதால் அவனுக்குச் சரீரமெனப்படுவோம். விஷ்ணோ: இமே வைஷ்ணவாள் என்று சரீர சரீரிபாவ சம்பந்தமுடையவர்கள். விசிஷ்டாத்வைத மதத்தில் பிரம்மம் என்று சொல்லப்படுபவனும் நாராயணனே. இன்னும் மாதா பிதா என்கிறபடி பல சம்பந்தமுடையவர்கள். நமக்கு இவனே ஈச்வரன், ஸ்வாமி, பரதேவதை. இந்த மதத்தில் ஈச்வர என்பது போல் ஈச்வரி என்றும் சொல்லப்படுகிறபடியால், நமக்குத் தாயார் மஹாலக்ஷ்மி, இருவர்களும் யஜமானர் யஜமானிகள். தாய்தந்தைகள் குழந்தைகளை ரக்ஷிப்பதற்கும், நாம் அவர்களை அவர்களிஷ்டப்படி பெருமைப் படுத்தவும், கார்யம் செய்வதற்கும் கடமைப்பட்டிருக்கிறோம். அவைகளை நாம் இப்பொழுது செய்துகொண்டிருக்கவில்லை. அநாதியாய் நாம் செய்த அபராதத்தால் கோபம் கொண்ட தகப்பன் தப்புச் செய்யும் பிள்ளைகளை அவர்களின் நன்மைக்காக சிறைச்சாலையில் போடுவதுபோல், நம்மை இந்த பிரகிருதி மண்டலத்தில் தள்ளியிருக்கிறான். இந்தப் பாழும் பிரகிருதியோ உள்ள ஸ்வரூபத்தை மறைத்தும், விபரீத ஞானத்தை விளைவித்தும் தன் விஷயத்தில்

http://acharya.org

போக்கியதையை உண்டுபண்ணக் கூடியது. அதனுடைய சம்பந்தத்தால் நாம் ஸ்வரூபத்தை மறந்து நமக்கு கர்மபந்தங்களான தேஹங்களில் போக்கியத்வ புத்தியை உண்டுபண்ணிக்கொண்டு இந்த ஸம்ஸாரத்தில் பிறப்பும் இறப்பும் உள்ளவர்களாய் இருந்து கொண்டு கரை ஏற வழி தெரியாதவர்களாக யிருக்கிறோம்; நாம் இப்படி யிருந்தும் பரமகாருணிகனும் குடல்துவக்கு சம்பந்தமுள்ள வனுமான ஸர்வேச்வரன், கெட்ட பிள்ளைகளை நல்ல வழி நடத்தப் பாடுபடுவதுபோல் நாம் அறியாமல் செய்த தப்புகளைத் தள்ளியும் மற்றவைகளை மன்னித்தும் அறியாமல் செய்ததும், தற்செயலாய் நேர்ந்ததும் ப்ராஸங்கிகமும் நேர்ந்தவைகளுமான சுகிருதங்களை முன்னிட்டு இந்த நல்ல ஜன்மத்தைக் கொடுத்ததுபோல் நற்கதியை அளிக்கவும் வழி பண்ணுகிறான்.

இந்த ஸம்ஸார மென்பது எட்டிமரம் போல், அண்டினவனை அழியச் செய்யக்கூடியது. அதிலும் பிழைப்பிக்கும் பலம் இரண்டு உண்டு. ஒன்று பகவத்பக்தி. இன்னொன்று ஸத்ஸங்கம். ஸத்ஸங்கத்தை மோக்ஷவாசலாய்ச் சொல்லுவார். அந்த ஸத்ஸங்கத்தை உண்டுபண்ணியும் அவர்களிடம் அத்வேஷம், ஆபிமுக்கியம், ஸம்பாஷணம் இவைகளையும் உண்டுபண்ணி நல்ல ஆசார்யர்களை அடைவிப்பிக்கிறான்.

ஆசார்யர்கள் என்பவர்கள் பகவதவதாரங்களே. முன் யுகங்களில் ஹிரண்ய கசிபு ராவணாதிகள் தேஹபலத்தால் சாதுக்களை ஹிம்ஸித்து வந்தார்கள். இந்த யுகத்தில் அவர்களே புத்தி பலத்தால் வேதபாஹ்யர்களாயும் வேதத்துக்குச் சரியான அர்த்தம் தெரியாதவர்களாயும் பிறந்து கெட்ட மதங்களை உண்டுபண்ணி நம் புத்தியைக் கெடுப்பார்கள் என்று எண்ணி காணாதாள், சாக்கியாள், பாஷண்டாள், இவர்களால் வேதமார்க்கம் முன்பு அழிக்கப்பட்டது. அவர்களைப் பகவான் திருதண்ட தாரியாய் தத்தாத்ரேயராய் அவதரித்து அந்த மதங்களை நிரஸித்து அந்த வேதமார்க்கத்தை ரக்ஷித்தார். இன்னும் கிணற்றில் விழுந்த குழந்தையைக் கையால் எடுப்பதுபோல், ஸம்ஸாரத்தில் விழுந்த நம்மை சாஸ்திரமென்கிற கையால் எடுப்பதற்காக பல ஆசார்யர்கள் ரூபியாக அவதரித்தவன். இப்படி அவதரித்தும் நாம் ஏற்கனவே கொடுத்த வேதம் சாஸ்திரம் முதலியவை விஸ்தாரமுள்ளன. இவர்களோ அல்பஞர்கள், அல்ப சக்திகள், அல்ப ஆயுஸ் உள்ளவர்கள். அதற்காக அந்த வேதங்களுக்குள் ஒன்றான அதர்வ வேதத்தின் சிரஸான உப

http://acharya.org

52-2



நிஷத்தில் பிரியச்சொல்லி, ஒன்ருகச் சேர்க்கப்பட்ட அஷ்டாக்ஷரம் என்னும் மந்த்ரத்தை நரநாராயண ரூபியாய் அவதரித்து குரு சிஷ்ய ரூபியாய் உபதேசித்து நாரதாதிகளையிட்டுப் பரவச் செய்தான். இம்மந்த்ரம் சிறிய கண்ணடி பெரிய உருக்களைக் காட்டுவதுபோல் நாம் அறியவேண்டிய எல்லாச் சங்கதிகளையும் காட்டக்கூடியது. இதனுல் ஸ்வரூப ஞானம் தெரிந்து நமக்கு வேண்டிய புருஷார்த்தத்தையும் அதற்கு வேண்டிய மார்க்கத்தைத் தெரிந்து அனுஷ்டிக்க வேண்டியதற்காக பாஞ்சராத்ராதிகளில் சொல்லப்பட்டிருக்கும் த்வயம், சரமச்லோகம், ஆக இந்த மூன்று மந்த்ரங்களையும் ஸத்குருவை அடைந்து உபதேசம் பெற்றுக்கொள்ள வேண்டியது. இப்படிப் பெற்ருலும் நமக்கு நல்ல புத்தி உண்டாவது கஷ்டம், ஏனெனில் நாம் பூர்வ ஜன்மங்களில் ஆசுரஸ்வபாவத்தை அடைந்து பகவத்விட்டுகளாயிருந்தபடியால், நம்மை நரகாதிகளில் தள்ளியும் இவர்கள் நம்மை அறியக்கடவர்களில்லை, இவர்கள் நம்மை வசீகரிக்கக் கடவர்களில்லை, என்று ஈச்வரன் பூர்வாபரத்தால் இட்ட நினைப்பு ஈடுமாறுவதற்காக அஸ்துமே என்ருல் அஸ்துதே, தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே, என்ற திருமுகப்பாசுரமும் ஸதாசார்யன் அனுக்கிரஹமும் ஸத்ஸம்ப்ரதாய சுத்தி என்றும் மூன்று ப்ரதான காரணங்கள். தாயார் கடாக்ஷமில்லாவிடில் நல்ல புத்தி, நல்ல நடவடிக்கை உண்டாகாதாதலால் அவள் கடாக்ஷம் வேணும். கூடியவரையில் ஸாத்வீகர்களாயும் ஆவச்யக விஷயத்தில் ஞானக் குறைவு இல்லாதவர்களும், டம்பம், அசூயை ஏமாற்றல் இவைகள் இல்லாதவர்களுமான நல்ல ஆசார்யர்கள் இவருக்கு நல்ல க்ஷேமங்கள் உண்டாக வேண்டுமென்று அவர்கள் நினைப்பிருக்கிற அனுக்கிரஹமும் வேண்டும். பிறகு, தான் ஸத்வோத்தரனும் ஸம்யத்புஸங்கனும் ஸாவதானனுமாய் இருக்கும் அவஸ்தையில் ப்ரக்யாதி லாப பூஜா நிரபேக்ஷகர்களாய்ப் பரமகாருணிகர்களான ஸதாசார்யர்கள் அநபேக்ஷித விஸ்தரமும் அபேக்ஷித ஸங்கோசமுமில்லாதபடி ஸர்வலோகங்களுக்கும் பிதாவும் மாதாவுமாயிருக்கும் ஸ்ரீய: பதி நாராயணன் அவன் எல்லார்களையும் காக்கும் இயல்பினன் என்றபடி, சரண்யபூதன், அவனையே சரணமடையுங்களென்று சுருங்கிய உபதேசத்தையும் பெறவேண்டும். இப்படி நாம் குருபதேசத்தைப் பெற்ருல்தான் நமக்கு நன்மை விளையும். அவர்கள் நமக்கு உபதேசம் பண்ணும் முன்பு ஜன்மத்தால் சூத்திரனுய்ப் பிறந்து பிரம்மோபதேச மென்றும் கர்மத்தால் பிராமணனுக ஆகியிருக்கும் நம்மை பிரம்மோபதேசத்துக்கு முன்பு ஜாதகர்மம், நாமகரணம் அன்னப்ராசனம், சௌளம், உபநயனம் என்கிற கர்மங்களால் ஸம்ஸ

http://acharya.org

ரிக்கப் பட்டிருப்பதுபோல், காயத்திரீயிலும் பெரியதும் ஸகல வேதம் முதலியவைகளை தன்னிடம் அடக்கிக்கொண்டுள்ளதும் அதை ஜபிப்பதால் அசூயை முதலிய ஆந்தரவ்யாதிகளையும் ஜ்வரம் முதலிய பஹிர்வ்யாதிகளையும் ஸ்வரூபஞானமில்லாமையாகிற பஞ்சத்தையும் பணப்பஞ்சத்தையும் 'நான், என்னுடையது' என்கிற அஹங்கார ஆத்மாபஹார சௌர்யாதிகளையும் தேஹாத்மவிவேகம் ஆத்ம பரமாத்ம விவேகம், உபாய விவேகம், பலவிவேகம் இவைகளைத் தெரிவிக்கக்கூடியதுமான . இம்மந்த்ரத்தினுடைய உபதேசத்தைப் பெறுவதற்கு தாபம், புண்ட்ரம், நாமம், மந்த்ரம், யாகம் என்கிற ஐந்து ஸம்ஸ்காரங்களையும் செய்வித்து, உபதேசிக்க வேணும். தாப மென்றால், நாம் ஸத்வம். ரஜஸ். தமஸ். என்று மூன்று குணமுள்ள பிராகிருத தேஹமுடையவர்கள். இம்மந்த்ரங்களோ சுத்த ஸத்வமயங்களும் பஞ்சோபநிஷந் மந்த்ரங்களால் ப்ரதிபாத்யமான பரமாத்மா விஷயமானதால் அவனுடைய மந்த்ரங்களால் இந்தப் பாஞ்ச பௌதிக தேஹத்தை லயாதிக்ரமத்தால் ஸம்ஹரித்தும், மறுபடி ச்ருஷ்டியாதி க்ரமத்தால் ச்ருஷ்டிப்பதுமாகிய பூத சுத்தியைச் செய்து, அதில் அவர் சிங்நங்களான சங்கசக்ராதிகளை ஹோமாதிகளைச் செய்து சுத்தீகரித்து அந்தந்த மந்த்ரங்களைச் சொல்லித் தரிப்பிக்கச் செய்யவேணும். பிறகு நமக்கு, பாபத்தை போக்குவதும் ஆயுஸ்ஸை வளர்ப்பதுமான சுவேதமிருத்திகை (திருமண்) மந்த்ரங்களைச் சொல்லிக்குழைத்து பகவத் பாதாக்ருதியாய்நெற்றி முதல் 12 இடங்களில் ஊர்த்வமுகமாய், ஸச்சித்ரமாய் தரித்துவைக்க வேணும், நம் மதத்துக்குத்தாயாரும் பரதைய்வதமாகையால் அவளுடைய சிங்நமான ஸ்ரீசூர்ணத்தை நடு இடங்களில் அவருடைய மந்த்ரங்களைச் சொல்லி தரிக்கவைக்கவேணும். நாம் அவர்களுக்கு தாஸனானதால் ராமதாஸன், கிருஷ்ணதாஸன் என்று பேரும்வைக்கவேணும். பிறகு தன்னுடைய குரு பரம்பரையைச் சிஷ்யனுக்குச் சொல்லிவித்துத் தாங்களும் அனுசந்தித்துக் கொண்டு மூன்று மந்த்ரங்களையும் உபதேசிக்கவேணும். ஸ்ரீமத் ராமாயணம், பாதுகாஸஹஸ்ரம் இவைகளையும் உபதேசித்து ஸங்க்ரஹமாக பகவதாராதனக்ரமத்தையும் உபதேசிக்கவேணும். ஆகையால் நாமும் நல்ல குருக்களை அடைந்து பஞ்ச ஸம்ஸ்காராதிகளைச் செய்துகொண்டு உஜ்ஜீவிக்க வேண்டும். மந்த்ர மந்த்ரார்த்தங்களை கிரஹித்து உபதேசித்துக்கொண்டு, 'நாம் யார், நமக்கு யஜமானன் யார், அவரை அடைவதனால் வரும் பயன், அடைவதற்கு விரோதி, அதைப் போக்கும் வழி' இவைகளாகிற அர்த்த பஞ்சகத்தை (நாம் பெருமாளுடைய கோபத்தைப் போக்கிப் பெரு

http://acharya.org

மாளிடம் போய், பெருமாளுக்குக் கார்யம் செய்யவேணுமென்று நம்மாண்டவன் எப்பொழுதும் இந்த புத்தி நமக்கு வரவேண்டியதற்காக ஸாதித்தாகும். இதை அறிந்தால்தான் வைஷ்ணவனுவோம். இவைகளை உபதேசிக்கிற ஆசார்யாளிடத்திலும் அவர்களுடைய பரம்பரையிலும் விசேஷப் பிரதிபத்தி வேணும். அதற்காக அந்த குரு பரம்பரையைப் பற்றிக் கொஞ்சம் எழுதுகிறேன்.

இந்த ஸம்பிரதாயத்துக்கு ஆதியில் பிரதமாசார்யன் பெருமாள். அவர் வேதம் முதலியதைக் காப்பாற்றி வ்யாஸாதி ரூபிகளாய் அவதரித்து வேதங்களைப் பிரித்து அதின் உபயபாகத்திலுள்ள அர்த்தங்களைச் சுருக்கி பிரம்ம ஸூத்தமென்றும் தர்மஸூத்தமென்றும் செய்தருளினர்; ஸ்ரீ பாஞ்சராத்ரசாஸ்த்ரத்தை நேராகவே உபதேசித்தார். பிறகு 2வது ஆசார்யர் தாயார். அவர் பெருமாளிடமிருந்து பாஞ்சராத்ர்சாஸ்த்ரத்தைக்கேட்டு லக்ஷ்மீதந்த்ரம் முதலியவைகளால் வெளியிட்டருளினுள்.

3வது விஷ்வக்ஸேனர். இவருடைய அனுமதியன்றி ஒரு சாஸ்திரம் ப்ரவர்த்திக்காததாலும், நம்மாழ்வார் என்பவருக்கு ஸமாச்ரயணம்—மந்த்ரோபதேசம் இவைகளைச் செய்தார்.

4வது நம்மாழ்வார், இவர் தாம்பிரபர்ணீதீரத்தில் அவதரித்தவர். அவதரித்ததுமுதல் உலக வழக்கப்படி ஸ்தந்யபானம் முதலியவை இல்லாமல் எழுந்தருளியிருந்தார்.

இவர் தகப்பனுர் இவரை எடுத்துப்போய்ப் பக்கத்திலுள்ள பொலிந்து நின்றபிரான் ஸன்னிதியின் முன்னுல்விட்டு விட்டு, பெருமாள் ஸேவித்துக் கொண்டிருக்கையில் குழந்தை நகர்ந்து பக்கத்திலுள்ள புளியமரப் பொந்துக்குப் போய்விட்டது. குழந்தை காணவில்லை. பொந்துக்குள் பத்மாஸனமிட்டுக்கொண்டு ஜோதிர் மயமாய் விளங்கிற்று. இப்படியிருக்கையில் திருக்கோளூரில் மதுர கவி என்கிற பெரிய மஹான் அவதரித்து ஸகல சாஸ்திர வல்லவராயும் விரக்தராயுமுள்ள அவர் வடதேசத்தில் யாத்திரைகளைச் செய்து கொண்டிருக்கையில் தென் தேசத்தில் பெரிய ஜோதிஸ் ஒன்று தென்பட அதைக் கண்டுபிடிக்கத் திரும்பத் திருநகரிவரும் வரையில் தென்பட்டுக் கொண்டிருந்த ஜோதிஸ் காணுமையால் இவ்விடம் தான் இருக்கவேணுமென்று விசாரிக்கையில், தெரிந்து குழந்தையைப் போய்ப் பார்த்தார். அவர் பார்த்தபடியே குழந்தை ஜோதி ரூபமாய்க் காணப்பட்டது. அசைவு-பேச்சு மூச்சு இல்லாததால்

http://acharya.org

அது அறிவு உள்ளதோ. அறிவு இல்லாததோ, என்று தெரிந்து கொள்ள, அவர் முன்னிலையில் பெரிய குண்டுக்கல்லைப் போட்டார். அந்த சப்தத்தைக் கேட்டு, குழந்தை கண்விழித்துப் பார்க்க ப்ரக்ஞை இருக்கிறது, பேசுமோ. பேசாதோ. என்று தெரிய, செத்ததின் வயிற்றில் பெரியது பிறந்தால் அது எத்தைத்தின்று எங்கே கிடக்கும்? என்றார். அதற்கு அவர் அத்தைத்தின்று அங்கே கிடக்குமென்றார். இதற்கு அர்த்தம். செத்து என்றால் அறிவு இல்லாத ப்ரகிருதியால் ஆக்கப்பட்ட தேஹத்தில் அறிவு உள்ள ஜீவன் ப்ரவேசித்தால், எத்தை அனுபவித்துக் கொண்டிருப்பான் என்பது கேள்வி. அவன் அந்த ப்ராகிருத பதார்த்தங்களையே போக்யமாக எண்ணி அதை அனுபவித்துக் கொண்டிருப்பான், என்பது பதில், இன்னொன்று-செத்து என்றால்-இந்த ஜீவன் தான் யார் என்கிற தன்னைப்பற்றின அறிவு இல்லாததால் அவன் செத்தவனே, அவனுக்கு, தான் தாஸனென்றும், ஈச்வரன் தனக்கு யஜமானனென்றும் ஞானம் பிறந்தால் அதுதான் பெரிய ஞானம். அதுதான் இவனுடைய தர்மபூத ஞானத்தை ஈச்வர அனுகிரஹத்தில் பெருகச் செய்யும்; அவனைப்போல் எல்லாவற்றையும் ஸாக்ஷாத்கரிப்பவனுதால் அந்த ஞானம் பெரியது. அந்த ஞானம் உண்டானால் பகவானுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை அனுபவித்துக் கொண்டிருப்பான் என்பது அர்த்தம். இதைக்கேட்டதும் அந்த ஸ்வாமி இவர் பெரிய மஹான் என்று அவர் திருவடிகளிலே விழுந்து நல்ல உபதேசம் செய்யவேணுமென்று பிரார்த்திக்கையில், அவரும் உகந்து இவர் பட்டோலை கொள்ளச்செய்து அவர் தியானத்திலே ஸேவை ஸாதிக்கும் எம்பெருமானை அனுபவித்து, அவ்வனுபவ பரீவாஹமாய் திவ்யப் பிரபந்தத்தை, (முன்பு பெருமாள் பிரம்மா மூலமாக வேதத்தை வெளியிட்டாற்போல்) இந்த திராவிட வேதத்தையும் இவர்மூலமாக வெளியிட்டதால் இவரும் ஆசார்யர்-இவர் கலி பிறந்த 40 வது நாள் அவதரித்தார். சிலர் 30 திருநக்ஷத்திர மென்கிறார்கள். சிலர் 40 திருநக்ஷத்திரமென்கிறார்கள். கொஞ்ச நாளில் பரமபதமடைந்து விட்டார். கீழ்ச்சொன்ன மதுரகவி கண்ணிநுண் சிறுத்தாம்பு என்று 10 பாசுரங்கள்செய்து மதுரகவி என்று பெயர் வைத்து அதை இந்தப் பிரபந்தத்துக்கு பிரணவம்போல் முன்னும் பின்னும் அனுஸந்தித்துக்கொண்டு திவ்யப் பிரபந்தத்தை, ஸேவிக்கும்படி செய்து எளிவிட்டார், அதுவும் கலி மஹிமையாலும் கால விபரீத்தாலும் மறைந்துவிட்டது. அவைகளில் ஆராவமுதன் விஷயமாக 10 பாசுரங்கள் மட்டும் ஜீவித்திருந்தது. உடனே கலியில் நல்ல பிரபந்தம் வீணாகப்போய்விட்டதே என்று பெருமாள்

http://acharya.org

விஷ்ண்ணராய் சோளதேசத்தில் (வீரநாராயணபுரம்) காட்டுமன்னார் கோவிலில், சடமர்ஷண கோத்ரத்தில் நாதமுனிகள் என்றும் மஹானை அவதரிப்பித்து வைத்தார். சடரிபு என்றால் நாம் கர்ப்பத்தில் ஈச்வ ஞானம் உள்ளவராக யிருக்கிறோம். அதை நாம் பிறந்து பூமி ஸ்பர்சமானதே (சடன்) என்கிற வாயு ஈச்வரஸங்கல்பத்தால் மறைத்து விடுகிறது. அதனால் நாம் அஞ்ஞானிகளாகி விடுகிறோம், ஈச்வர கிருபையிருந்தால் அந்த சடனைவென்று ஞானிகளாகி விடலாம்; நம்மாழ்வார் ஈச்வர அனுகிரஹத்தால் இதை வென்றவர். அதனால் சடாரி, என்று பெயர்பெற்று, பகவானை அனுபவித்துக் கொண்டு எழுந்தருளியிருந்தார், சடமர்ஷணர் என்றாலும் சடாரி என்று அர்த்தம். அவரும் ரிஷி-முனி. அதனால் இந்த நாதமுனி என்பவரும் ஸம்ஸார விரக்தராய் யோகாப்பியாஸம் செய்து கொண்டும் ஆழ்வாரைப்போல் பகவானை அனுபவித்துக்கொண்டும் வந்தார். அவர் மூலமாக இவைகளைப் புநருத்தாரணம் பண்ணத் திருவள்ளம்பத்தி அவரை திவ்யதேச யாத்ராமூலமாகத் திருக் குடந்தைக்கு எழுந்தருளச் செய்தார். அவரும் அங்கே எழுந்தருளி ஸன்னிதியில் (ஆராவமுதே) என்னும் அனுஸந்திக்கும் 10, பாசுரத் தைக்கேட்டு ஆச்சர்யப்பட்டு, ஆயிரத்துள் இப்பத்துமென்றிருப் பதால், இன்னும் ஆயிரமிருக்கிறது; அதை வெளிப்படுத்துவேணு மென்பதற்காக உடனே திருநகரிக்கு எழுந்தருளினார். அங்கு விசாரித்ததிலும் மற்றப் பிரபந்தம் கிடைக்கவில்லை. ஆழ்வார் விஷய மான கண்ணிநுண் சிறுத்தாம்பு என்னும் 10 பாட்டுமட்டும் கிடைத்தது. அதைப் பன்னீராயிரம் ஆவிருத்தி அனுஸந்திக்கவே, அவரும் யோகியுமானதால் அவருக்கு யோக தசையில் ஆழ்வார் ஸேவை ஸாதித்துத் தான் அருளிச்செய்த ப்ரபந்தங்களையும் தன் அவயவபூதர்களான மற்றும் ஆழ்வார்கள் செய்த ப்ரபந்தங்களையும், மற்றும் வ்யாஸர் அருளிச்செய்த வ்யாஸ ஸூக்தாதிகளையும் மந்த்ர-மந்த்ரார்த்தங்களையும் விசதமாக அருளிச்செய்தார். இப்படி திவ்ய ப்ரபந்தம் கிடைத்தவுடன் ஸந்துஷ்டராய் இக்கலியிலோ பகவான் கிருத-த்வாபர த்ரேதா யுகங்களில்தான் ராமகிருஷ்ணாதி களான விபவாவதாரம் செய்வார்-கலியுகத்தில் அர்ச்சா ரூபியாயும் அநேக தேசிகர்கள் ரூபியாயும் அவதாரம் செய்வார். அவருடைய பெருமையை பகவான் ராமகிருஷ்ணாதிகளாக அவதரித்தபோது வால்மீகி-வ்யாஸர்கள் வெளியிட்டதுபோல் இந்த அர்ச்சா ரூபியான பெருமாளுடைய பெருமைகளை ஆழ்வார்கள் திவ்ய ப்ரபந்தமூலமாக வெளியிட்டார்கள். ஸந்நிதியில் பகவத் ஸாந்நித்தியத்துக்காக வேத பாராயணாதிகள் செய்வதுபோல் இவ் வாழ்வார்களையும்

http://acharya.org

ப்ரதிஷ்டை செய்து அவாளுடைய ப்ரபந்தங்களையும் ஸேவிக்க வேண்டும். இன்னும் உப நிஷத்துக்கள் பகவானுடைய ஸ்வரூப விபவாதிகளையும், அவனை அடையவேண்டியதற்காக வித்யா ரூபமான வழிகளையும் சொல்லியிருந்தாலும் இப்படி ஒருவர் பிறந்தது முதல் அஞ்ஞான கந்தமில்லாமல் பகவானை அனுபவித்துக்கொண்டும் பகவானும் அவருக்கு ஸேவை ஸாதித்துவந்தும் ஸர்வாதிகாரமாய் சரணாகதியினால் நினைத்தபோது முக்தி அடைவதும் அர்ச்சிராதி மார்க்கத்தால் போகும் பிரகாரங்கள் விசதமாகக் காட்டியிருப்பதால் இப்பிரபந்தத்துக்காக அத்தியயனோத்ஸவம் ஒன்று செய்து வைஷ்ண வர்களுக்கு விசதமாகக் காட்டுவதற்காக திவ்யதேசங்கள் தோறும் அத்தியயனோத்ஸவத்தை ஏற்படுத்தினார். இந்தப் பிரபந்தம் ஆராவ முதனால் ஏற்பட்டதால் ஆராவமுதனுக்கு ஆராவமுதாழ்வார் என்று பெயர் வந்தது. இப்படி ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்துவிட்டு யோகியாகயிருந்தாலும், சரணாகதி பலத்தால் ஒரு நாள் முக்தியை அடைந்துவிட்டார். இவருக்குப் பிறகு உய்யக்கொண்டார்.

அவர் தன் சிஷ்யாளுக்கு ப்ரவசனம் செய்துகொண்டு நாதமுனிகளின் பேரனுக்கு ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்யும்படி நியமித்திருந்ததால், வெகு காலம் காத்திருந்தும் அவருக்கு அந்த கைங்கர்யம் நேரவில்லை. இந்த கைங்கர்யத்தை நடத்தும்படி தன் சிஷ்யரான மணக்கால் நம்பிக்கு நியமித்துவிட்டு அவரும் முக்தி அடைந்துவிட்டார். இவரும் நாதமுனிகளின் திருக்குமாரரான ஈச்வர பட்டருக்குக் குமாரரான ஆளவந்தாருக்கு உபதேசிக்க எதிர் பார்க்கையில் அவரும் ஆக்கியாழ்வானை ஜயித்து அர்த்த ராஜ்ய ஸம்மானம் பெற்று ராஜ்ய போகத்தில் இருந்தமையால் அவருக்குத் தூது வளங்கீரையைக் கொடுத்து ஸத்புத்தியை உண்டுபண்ணி அவரை அழைத்துவந்து அவருக்கு 'உம்முடைய பிதாமகதனம் என்னிடம் இருக்கிறது. அதை ஒரு ஐந்துதலை நாகம் சுற்றிக் கொண்டிருக்கிறது. அவை ஒரு ராக்ஷஸன் வந்து பார்த்துப் பார்த்து விட்டுப் போகிறான். அது உபயகாவேரி மத்தியில் இருக்கிறது அதை உமக்குக்காட்டுகிறேன்' என்று சொல்லி, ஸ்ரீரங்கத்துக்கு அழைத்து வந்து, பெரிய பெருமாளை ஸேவிக்கவைத்து ஸம்ப்ரதா யார்த்தங்களை உபதேசித்து, ஸம்ப்ரதாய ப்ரவசனத்துக்கு நியமித் தார். அவரும் உடனே ஸர்வ ஸங்கபரித்யாகம் செய்து ஸந்நியாஸம் செய்துகொண்டு ஸ்ரீரங்கத்திலேயே எழுந்தருளியிருந்து பெரிய நம்பி முதலிய ஸச்சிஷ்யர்களுக்கு ப்ரவசனம் செய்து கொண்டிருந் தார். அவருக்குப் பிறகு ஸம்ப்ரதாயத்தை நடத்திவர ஒருவரைத் தேடி வந்தார்.

http://acharya.org

அங்குள்ளார் 'பெருமாள் கோவிலில் ஸ்ரீ பெரும்பூதூர் கேசவாசார்யருக்குப் புத்திரரும் நமது திருமலை நம்பிகளுக்கு மருமானுமான ராமாநுஜன் என்பவர் அங்குள்ள யாதவப்பிரகாசனென்னும் அத்வைத ஸந்நியாஸிடம் அத்வைத வேதாந்தம் கேட்டுக்கொண்டிருக்கிறார். அவர் ரொம்பவும் மேதாவி, இதை ரக்ஷிக்கவும் விருத்தி செய்யவும் வல்லவர்' என்று சொன்னார்கள். அதைக்கேட்டு உடனே ஆளவந்தார் சொல்ப சிஷ்யாளுடன் பெருமாள் கோவிலுக்கு ஏளி, பெருமாள் ஸன்னிதியில் பெருமாள் ஸேவித்துவிட்டுக் கோவில் ப்ராகாரத்தில் அநேக சிஷ்யாளுடன் யாதவப்பிரகாசன் போய்க்கொண்டிருப்பதையும் அவர்கள் மத்தியில் நம்ம ராமாநுஜன் போய்க்கொண்டிருப்பதையும் கடாக்ஷித்து (ஆம், முதல்வன்) என்று திருவுள்ளம் உகந்து, இப்பொழுது நாம் அவர் பூர்வபக்ஷம் வாசித்துக் கொண்டிருப்பதைத் தடுக்கக்கூடாது. இன்னொரு ஸமயம் பார்த்துக்கொள்வோம், என்று திரும்ப ஏளியாயிற்று. இங்கு நம் இராமாநுஜனுக்கும் யாதவப் பிரகாசனுக்கும் பேததர்சன விஷயமாக மனஸ்தாபம் ஏற்பட, அவரால் விலக்கப்பட்டு மறுபடியும் தாயார் நியமனத்தால் தேவப்பெருமாளுக்குத் தீர்த்த கைங்கர்யம் செய்து கொண்டிருந்தார். இதற்குள் ஆளவந்தாருக்குத் திருமேனி தளர்ந்துவிட்டது. நம் கார்யம் தலைக்கட்டவில்லையே என்று கவலையுற்றிருக்கையில் பெருமாள் கோவிலிலிருந்து வந்த ஸ்ரீ வைஷ்ணவர் மூலமாக யாதவப் பிரகாசனிடமிருந்து நம்ம இராமானுஜன் விலக்கப்பட்ட ஸமாசாரம் கேள்விப்பட்டு, ஸந்துஷ்டராய் இதுதான் ஸமயம் என்று அவரை அழைத்துவர, தன் சிஷ்யரான பெரிய நம்பிகளை நியமிக்க அவரும் அங்குசென்று சாலைக்கிணற்றிலிருந்து தீர்த்தம் கொண்டு வரும் வழியில் அவரை நோக்கிக்கொண்டு, ஆளவந்தார். ஸ்தோத்திரத்தை அனுஸந்தித்துக் கொண்டிருக்கையில். 'பிரம்மா-சிவ:' என்கிற ச்லோகம் வர, அவரும் கிட்டவந்து அதைக்கேட்டு 'இதுயார் செய்தது' என்று இவரை ப்ரச்னம் செய்ய, இது ஆளவந்தாரால் அனுக்கிரஹிக்கப்பட்டதென, அவர் 'அவரை எனக்குக் காண்பிக்கலாமோ' என்று சொல்ல 'அவரை இப்பொழுதே காண்பிக்கிறேன்' என்று சொல்ல, அதைக்கேட்டு ராமானுஜரும் அவருடன் உடனே ஸ்ரீரங்கத்துக்கு யாத்திரையாக ஏளிவிட்டார். அங்கு வட திருக்காவேரியில் கரையில் கூட்டமாயிருக்க 'இது என்னவோ', என்று அதிசயித்துக் கொண்டுபோய்ப் பார்க்கையில் ஆளவந்தார் திருநாட்டை அலங்கரித்து விட்டதாயும் அவர் திருமேனியைத் திருப்பள்ளிப்படுத்த முயற்சிக்கிறதாயும் சொல்ல, ராமானுஜரும் அவர் திருமேனியை ஸேவித்து அதில் மூன்று விரல், மடங்கியிருப்பதைக்

http://acharya.org

கண்டு 'இப்படித்தான் ஸ்வாமிக்கு எப்பொழுதுமுள்ளதோ' என்று விசாரிக்க 'முன்பு இல்லை, இப்பொழுதுதான் இப்படி இருக்கிறது' என்று அவர்கள் சொல்ல, 'ஏதாவது தனக்கு அபீஷ்டம் தலைக் கட்ட வேணுமென்று நினைத்தாரோ என்றும் கேட்க' (ஆம்) உண்டு பிர்மஸூத்திரத்துக்கு போதாயன விருத்தியை அனுஸரித்து விசிஷ்டாத்வைதபரமாய் ஒரு பாஷ்யம் செய்யவேண்டும்' என்றும் 'திருவாய்மொழிக்கு ஸ்ரீ விஷ்ணு புராண ஸங்கதிப்படி ஆறுயிரம்படி என்று ஒரு வ்யாக்கியானம் செய்யவேணும், இந்த ஸம்ப்ரதாயத் துக்கு வ்யாஸரும் பராசரும் பரமோபகாரிகளானதால் அவர்க ளுடைய திருநாமத்தையிட்டு இரண்டு பேர்களை அழைக்கவேணும்,' என்றார்கள். இப்படித் திருவுள்ளமாயிருப்பதைக் கேட்டு, தான் அதை நிறைவேற்றுவதாக ராமானுஜர் ஸாதித்தருள விரல்கள் நிமிர்ந்துவிட்டன. உடனே எல்லாரும் ஆளவந்தார் கைங்கர்யத்தை நடத்தினார்கள். இவரும் முழுவதும் கூடயிருந்து நடத்திவந்தார். அங்குள்ளவாள் இவரை தர்சனப்ரவர்த்தனத்துக்கு ப்ரார்த்திக்கவே மறுபடியும் பெருமாள் கோவில் எழுந்தருளித் திரும்பவந்து அங்கீ கரிப்பதாகச் சொல்லிக் காஞ்சீபுரம் ஏளிவிட்டார். மறுபடியும் தீர்த்த கைங்கர்யமும் வரதன் ஸன்னிதியில் அந்தரங்கமாகத் திருவால வட்ட கைங்கர்யம் புரியும் திருக்கச்சி நம்பிகள் என்னும் ஸ்ரீ வைஷ் ணவரிடம் அனுவர்த்தித்துக்கொண்டு நல்வார்த்தைகள் கேட்டுக் கொண்டு எழுந்தருளியிருந்தார்.

ஒருநாள் தனக்குச் சில ஸந்தேகங்கள் இருப்பதாயும் அதைப் பெருமாளிடம் விண்ணப்பம் பண்ணி, அதற்கு உத்தரம் நியமனம் வாங்கித் தரவேணுமென்று அவரைப் பிரார்த்தித்தார். அவரும் வாங்கித் தருவதாக ஒப்புக்கொண்டு பெருமாளிடம் விண்ணப்பம் செய்து நியமனம் வாங்கிக் கொடுத்தார்.

1. எந்த தர்சனம் ப்ராமாணிகம்?
   பேததர்சனம் ப்ராமாணிகம்
2. யார் பர தேவதை?
   ஸ்ரீமந் நாராயணன் பரதேவதை.
3. மோக்ஷத்துக்கு வழி எது?
   சரணாகதிதான் மோக்ஷத்துக்கு வழி.
4. அந்திமஸ்மிருதி. ஆவச்யகமா?
   ஆவச்யகமில்லை. மோக்ஷம் கொடுப்பவனே அதை யும் கொடுப்பான்.

http://acharya.org

5. நாம் நல்வழியை அடைய யாரை ஆச்ரயிக்க வேண்டும்?
பெரிய நம்பிகளை ஆச்ரயிக்க வேணும்.

6. மோக்ஷம் எப்பொழுது கிடைக்கும்?
தேஹாவஸனத்தில் கிடைக்கும்.

இவைகளைக் கேட்டு, ஸந்துஷ்டராய்ப் பெரிய நம்பிகளை ஆச்ரயிக்க ஸ்ரீரங்கம் ஏள்ளினார். இங்கு ஸ்ரீரங்கத்திலுள்ளவர்கள் ராமானுஜனை அழைத்து வரப் பெரிய நம்பியை அனுப்பினார்கள். மத்தியில் ஸ்ரீ மதுராந்தகத்தில் இருவரும் சந்தித்தார்கள். ராமானுஜர் அவரைக் கண்டு சந்தோஷித்து, நான் தேவரீர்களை ஆசார்ய வரணம் செய்ய வருகிறேன். இப்பொழுதே மந்த்ரோபதேசங்கள் செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்க அவரும் பஞ்ச ஸம்ஸ்காரம் மந்த்ரோபதேசங்களைச் செய்தார். இருவரும் காஞ்சீபுரத்துக்கு எழுந்தருளி ஒரு வருஷம் சுமார் அவ்விடம் இருந்து காலக்ஷேபங்கள் செய்து வைக்க வரதன் முன்பு திருக்கச்சி நம்பிகள் நியமனத்தால் ஸந்நியாஸத்தையும் பண்ணிவைத்து, ஸ்ரீரங்கத்துக்கு ஏளப்பண்ணி வந்து ஸம்ப்ரதாயப்ரவசன ஆசார்யராக ஏற்பாடு செய்துவிட்டார். பிறகு ராமானுஜன் தனக்கு மாதுலரும் ஆளவந்தாரால் திருமலையில் திருவேங்கடமுடையான் தீர்த்த கைங்கர்யத்துக்கு நியமிக்கப்பட்டவரான திருமலை நம்பிகள் ஸன்னிதியில் திருவாய்மொழி பகவத் விஷயம் ஸ்ரீமத்ராமாயணம் இவைகளைக் காலக்ஷேபம் செய்து வந்தார். மறுபடி திருக்கோஷ்டியூர் நம்பிகள் ஸன்னிதிக்கு 18 தடவை சென்று சரமச்லோகார்த்தம் கேட்டருளி வந்து இதற்குள் கூரத்தாழ்வான் திருமலை நம்பிகள் குமாரன் திருக்குருகைப்பிரான் பிள்ளான் இவர்கள் வந்து ஆச்ரயிக்க அவர்களுடன் காசிக்குச் சென்று ஸரஸ்வதீபீடத்தில் லைப்ரரியிலிருந்து போதாயன விருத்தியை கடாக்ஷித்து அதை அனுஸரித்து ஸ்ரீ பாஷ்யம் செய்தருளி அதற்குச் சுருக்கமாய் தீபம், ஸாரம், கத்தியத்ரயம், வேதாந்த ஸங்க்ரஹம் நித்தியம் முதலிய க்ரந்தங்களையும் செய்தருளினார். இதற்குள் பன்னீராயிரத்துச் சொச்சம் சிஷ்யர்கள் ஆச்ரயிக்க அவர்களுடன் திவ்யதேச யாத்திரை சென்று ஸந்நிதிகளில பாஞ்சராத்ரோக்த விதமாய் திருவாராதனம் உத்ஸவாதிகளை நடத்தவும் ஏற்பாடு செய்துகொண்டும் ப்ரவசனங்கள் செய்துகொண்டும் இதர மதங்களை நிரஸித்துக்கொண்டும் கடைசியாக ஸ்ரீரங்கத்துக்கு வந்து எழுந்தருளியிருந்தார். அப்பொழுது கலிபுருஷன் வந்து நேரில் 'ஆழ்வார் கலியும் கெடுமென்றார், நீர் கெடுத்துவிட்டீர். இது என் யுகம். நான் எப்படி இருக்கிறது?', எனவே 'முன்பு பரீக்ஷித்து

http://acharya.org

மஹாராஜன் உன்னை வெட்ட வரவே அவருக்குப் பயந்து அவர் சொன்ன நல்ல இடங்களில் ப்ரவேசிக்காததுபோல் என் மதத்திலும் ப்ரவேசியாதே' என்றார். அவன் 'முடியாது. உம் மனத்திலேயே புகுந்து உம் மதத்தையே கலக்குகிறேன் என்றான், உடனே சிலரிடம் புகுந்து சில விருத்தார்த்தங்களைச் சொல்லச் செய்து, சில சிஷ்யர்களை ஒரு கோஷ்டியாகச் சேர்த்துவிட்டான். இதை ராமானுஜர் கேட்டு காதைப் பொத்திக்கொண்டு ரொம்பவும் வருத்தப்பட்டாயிற்று. அது இன்னும் ஸ்ரீரங்கம் கோவிலில் கைங்கர்யங்கள் சரியாக நடக்காததால் அவர்களை விலக்கவே அவர்கள் கோபங்கொண்டு இவர் பிக்ஷை செய்துவரும் கிருஹத்தில் மாதூகரத்தில் விஷமிச்ரான்னத்தை பிக்ஷையிடச் செய்தார்கள். அந்த பிக்ஷையில் ஸ்வாமிக்கு சந்தேகம் வர முதலில் ஜந்துகளுக்குப் பிக்ஷையிடவே அவைகள் இறந்துவிட்டன. இதைக் கண்டு ஸ்வாமி இனி நாம் பூலோகத்தில் இருக்கக் கூடாதென்று எண்ணி மாதூகரம் செய்யாமல் உபவாஸமாக எழுந்தருளியாயிருந்தார். இதைக் கண்டு ப்ரணதார்த்திஹரர் என்னும் கிடாம்பி ஆச்சான் வருத்தமடைந்து திருக்கோஷ்டியூர் சென்று நம்பிகளுக்கு விண்ணப்பம் செய்ய, அவரும் உடனே ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளிக் காவேரியில் அனுஷ்டானம் செய்து கொண்டிருக்கையில் பாஷ்யகாரர் கேட்டு அவரைப் போய்த் தெண்டம் ஸமர்ப்பித்தார். அப்பொழுது நல்ல வெய்யில் காலம். வெய்யில் கொளுத்துகிறது. நம்பிகள் ஒன்றும் சொல்லவில்லை. இவரும் எழுந்திருக்கவில்லை. இதைக் கண்டு ஸஹியாமல் ஆச்சான் 'என்ன அன்னியாயம். இது என்ன சிஷ்யக்ரமம்? கருமுகில் மாலை வாடுகிறதே' என்று தபிக்க, நம்பிகள் சந்தோஷப்பட்டு ஆச்சானைப் பார்த்து 'இந்த மாதிரி ஸ்வாமி திருமேனி ப்ரியமுள்ளவனைக் கண்டதில்லை. இனிமேல் நீரே இவருக்குத் திருமடப்பள்ளி கைங்கர்யம் செய்து பிக்ஷை சாதிக்கவேணு'மென்றும் சொல்லி இவரையும் பார்த்து 'இவரே திருவாராதனம் பண்ணி, இவரிடமே ஏக மாதூகரமாக பிக்ஷாசரணம் செய்துகொண்டும் இவருக்கு ரஹஸ்யார்த்தங்களை சொல்லிக்கொடுத்து இவரையே ஸம்ப்ரதாயப்ரவசனம் பண்ணும்படிக்கும் நியமியும்' என்றும் நியமித்தார். பாஷ்யகாரரும் அப்படியே செய்துகொண்டிருந்தார். இவரால் வைஷ்ணவ மதம் ஓங்கி வளர்ந்துவிட்டது. அது அழியக்கூடாது. ஒருவராலேயே ஸமாச்ரயண மந்த்ரோபதேச கிரந்தகாலக்ஷேபாதிகள் செய்து வைத்து ஸம்ப்ரதாயத்தை ரக்ஷித்துக்கு விருத்தியாக்க முடியாது. ஆதலால் தன் சிஷ்யர்களுள், ஞாதாக்களாயும் அனுஷ்டானமுள்ளவர்களாயுமுள்ள 74 திருநாமங்களைப் பொறுக்கி

http://acharya.org

அவர்களுக்கு ஸிம்மாஸனுதிபதிகள் என்று பெயரிட்டு அவர்களை ஆசார்யகம் பண்ண நியமித்திருந்தார். அவர்களில் விசேஷசாஸ்திரஜ்ஞாளாய்ப் பிரதிவாதி நிரஸனம் பண்ணக்கூடியவாளாயும் பகவதனுபவ பரமுமுள்ளவாளுக்கு ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷய உபய ஸிம்மாஸனாதி பத்தியமும் மற்றும் சாஸ்த்ரமறியாதவாளும் நல்ல வித்பங்நாளாயும் ஆசாரனுஷ்டான முள்ளவாளுக்கு ஸமாச்ரயண, மந்த்ர மந்த்ரார்த்த சரணுகதி இவைகளைப் பண்ணிவைக்கும்படி அருளிச் செய்துள்ளார். நமக்கும் ஸமாச்ரயண மந்த்ர மந்த்ரார்த்த சரணுகதிகள் முக்கியம். சாஸ்த்ரஞானம் முழுக்லேசம். புத்தி சாஞ்சல்யத்துக்கு இடமுள்ளது. ஆதலால் உபதேசமும் உபயுக்த வைசத்யமும் திரிவர்க்க நைரபேக்ஷமும்கரணத்ரய ஸாரூப்பியமும் சௌக்கியரஸாயனமென்று இருப்பவாளுக்குப் போதுமானதாதலால், இந்த ஸ்ரீ பாஷ்யகாரருக்கு அபிமதமாயும் அவரால் நியமிக்கப் பட்ட பரம்பரையையே எழுதுகிறேன், மற்றதையும் பின்பு விவரிக்கிறேன்; இதில் ப்ரணதார்த்திஹரனென்றும் கிடாம்பி ஆச்சான், 1. அவர் குமாரர் ராமானுஜாச்சாரியார் 2. அவர் குமாரர் ரங்க ராமானுஜாச்சாரியார் 3. அவர் குமாரர் ராமனுஜாச்சாரியர் என்கிற அப்புள்ளார் 4. இவர் நடாதூர் அம்மாள் ஸன்னிதியில் ஸ்ரீ பாஷ்ய, கீதாபாஷ்ய பகவத் விஷயம் இந்த மூன்று கிரந்தங்களையும் கிரஹித்துத் திருதக்கப்பணுரிடம் ரஹஸ்யார்த்தங்களை கிரஹித்தும் பிரதிவாதிகளை நிரஸித்ததால் வாதிஹம்ஸாம்புவாஹரென்றும காஞ்சி கடாம்பூ என்றும் சொல்லப்படுவர். காஞ்சியில் புண்டரீகாக்ஷஸூரிக்கு அனந்தஸூரி என்ற குமாரர் அவதரித்தார். அவர் அப்புள்ளார் உடன் பிறந்தாளாகிய தோதாரம்பையை விவாஹம் செய்து கொண்டிருந்தார். இத்தம்பதிகளுக்கு ஸந்தானமில்லாததால் திருவேங்கடமுடையானைப் பிரார்த்திக்க, அவருடைய அனுக்கிரஹத்தால் அவருடைய கண்டாம்சமாய் ஒரு குமாரர் அவதரித்தார். அவருக்கு வேங்கடநாதாச்சார் என்று திருநாமம். அநந்தஸூரி என்பவர் 74 ஸிம்மாஸனுதிபதிகளுக்குள் ஒருவராய் ஆசார்யபுருஷராய் இருந்தும், தன்னுடைய குமாரனுக்குத் தான் ஆசார்யம் செய்யாமல், அவர் அசுர ராக்ஷசர்களை நிரஸிக்கவும் தேவர்களை வரவழைக்கவும் ஸ்வபாவமாயுள்ள கண்டையின் அவதாரமானதால், ப்ரதிபக்ஷநிரஸன பூர்வகமாய் ஸன்மதஸ்தாபனம் செய்ய வேண்டுமென்று எண்ணி, இவர் மாதுலரானவும் உபயஸிம்மாஸனுதிபதியுமான அப்புள்ளாரிடம் ஆச்ரயிக்கச் செய்தார். அவரும் இவரை அழைத்துக் கொண்டு தன்னுடைய ஆசார்யரான நடாதூர் அம்மாள் கோஷ்டிக்கு ஏளினர். இவருடைய மூர்த்தியையும் தேஜஸ்ஸையும் கண்டு அம்மாள் விசாரிக்க, இவர்

http://acharya.org

இன்னுரென்று விக்ஞாபித்தார், இதற்கிடையில் காலக்ஷேபம் நிறுத்திய இடம் தெரியாமல் எல்லாரும் ஆலோசித்துக் கொண்டிருக்க, இவர் நிறுத்தின இடம் இதுவோ, என்று விக்ஞாபிக்க ஸ்வாமியும் போர உகந்து இவர் ப்ரதிஷ்டாபித வேதாந்தரென்றும், ப்ரதிக்ஷிப்த பஹிர்மதரென்றும் த்ரைவித்யாளால் மான்யரென்றும் ஆகக்கடவரென்று அனுக்கிரஹித்து, அவருக்குத் தன் சிஷ்யரான அப்புள்ளாருக்கு ஸகல வித்தைகளேயும் உபதேசிக்கும்படி நியமித்தருளினுர். அவரும் அப்படியே நியமனப்படி இவருக்கு ஸமாச்ரயணம் மந்த்ர மந்த்ரார்த்த ரஹஸ்யங்கள் ஸ்ரீபாஷ்ய பகவத் விஷயாதி க்ரந்தங்கள், சரணுகதி, கருடமந்த்ரம், ஹயக்ரீவ மந்த்ரம் இவைகளே உபதேசித்துச் சரணுகதியும் செய்வித்தருளினுர். இவர் மந்த்ராதி பலத்தால் கருத்மத் ஸாக்ஷாத்காரம் அடைந்து, அந்த அனுக்கிரஹத்தால் ஹயக்ரீவனே ஆராதித்துக்கொண்டும் எழுந்தருளியிருந்துகொண்டு ஸ்ரீ பாஷ்யகாரர் செய்யாத மந்த்ர மந்த்ரார்த்த ரஹஸ்யக்ரந்தங்களேயும் வேதாந்த விஷயமாய் காவ்ய, நாடக, வாதக்ரந்தங்கள் இன்னும் ஸம்ஸ்கிருத த்ராவிட ரூபமாக அநேக க்ரந்தங்கள் செய்தருளினுர். இப்படிக்யாதி வாய்ந்த இவரை ஸ்ரீரங்கத்திலுள்ளார் பிரதிவாதி நிரஸனுர்த்தம் அழைக்க, இவரும் எழுந்தருளி பிரதிவாதி நிரஸனம் செய்தருளியதை ஸ்ரீரங்கனுதனும் ஸ்ரீரங்கநாச்சியாரும் கேட்டு ஸந்துஷ்டராய் வேதாந்த தேசிகரென்றும் ஸர்வஸ்வதந்த்ரரென்றும் ஒரே ராத்திரியில் ஒரேவ்யாஜத்தால் பாதுகாஸஹஸ்ரமென்கிற ஆயிரம் ச்லோகங்கள் அடங்கிய க்ரந்தத்தைக் கேட்டும் கவிதார்க்கிக ஸிம்மனென்றும் பிருதான திருநாமங்களேச் சூட்டவே, வேதாந்த தேசிகன், நிகமாந்த மஹா தேசிகனென்றும் விளங்கலானுர். இவைகள் இருந்தாலும் சிஷ்ய குணபூர்த்திபுள்ள கூரத்தாழ்வானுக்குப்போல ரிஷிகளாலும் சாஸ்த்ரங்களாலும் சொல்லப்பட்ட ஸதாசார்ய குணங்கள் இவரிடமே பூர்ணமாக இருந்ததால் இவருக்கு தேசிகனென்ற திருநாமமே அஸாதரணமாக விளங்கிற்று. இவருக்குப் பிறகு பிரம்மதந்திர ஸ்வதந்திர ஜீயர் ரொம்பவும் தேசிக பக்தர். தேசிகன் விஷயமாக (ராமாநுஜதயாபாத்ரம்) என்னும் தனியன் செய்தவர், பரகாலஸ்வாமி மடத்துக்கு முதல் ப்ரவர்த்தகர். ஸ்ரீமான் வெங்கடநாதார்யர் என்ற தனியனே ஸ்வாமி குமாரர் நயினுராச்சார்யர் செய்தருளினுர். இவருக்குப் பிறகு கடிகாசலம் அம்மாள். இவரிடம்தான் அஹோபிலமடம் ஆதிவண் சடகோப ஸ்வாமிக்கு காலக்ஷேபாதிகள். அதற்குப் பிறகு வரதவிஷ்ணுவாச்சாரியர். இவர் கடிகாசலம் அம்மாள் குமாரர். பிதாவினிடம் ரஹஸ்யத்ரயஸாரம் தவிர மற்ற பாஷ்யாதி

http://acharya.org

க்ரந்தங்களையும் இன்னும் சில க்ரந்தங்களையும் தனக்கு ஸதீர்த்தரான் ஆதிவண் சடகோபஸ்வாமியிடம் சிந்தனை பண்ணி, பெருமாள் கோவிலில் ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்து கொண்டிருந்தார். இவரிடம் வரதாச்சாரென்று ஒருவர் ஆச்ரயித்திருந்தார். அவருக்கு இந்த ரஹஸ்ய பரம்பரையில் அன்வயமில்லை. அன்வயமுள்ளதாக நாவல் பாக்கம் கேதானப் பட்டியிலுள்ளவாள் சொல்லுகிறாள். பாஷ்ய பகவத் விஷயாதிகளில் எல்லாரும் அன்வயமுண்டு. வரதவிஷ்ணுவாச்சாரியருக்குப் பிறகு மஹாதயாதீசர். அவருக்குப் பிறகு அஹோபிலாசார். அஹோபிலாசார்யருடைய சிஷ்யர். ஷஷ்டபராங்குச ஸ்வாமி, இவர் அஹோபிலாசார்யரிடத்தில் ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யங்களையும், ஸ்ரீ ரஹஸ்யத்ரய ஸாரார்த்தத்தை அஹோபிலாசார் தம்பி வரதாச்சாரிடமும் பகவத் விஷயத்தை த்ருதீய பராங்குச ஸ்வாமியிடமும் கிரஹித்தவர். த்ருதீய ஷஷ்ட, என்பது அஹோபிலமட ஸ்வாமிகளின் பட்டக் கணக்குப்படி. இவர் அஹோபில மடத்தில் வ்யாபகராய் ஆஸ்தான நிர்வாஹம் செய்து கொண்டிருந்ததாயும் அஹோபிலத்தில் நரசிம்மனை இன்னும் ஆராதித்துக்கொண்டிருப்பதாயும் கேள்வி. இவருக்குப் பிறகு பஞ்சமத பஞ்சனதாதாச்சார்யர். இவர் பராங்குச ஸ்வாமிக்கு பாகினேயர். இவர் தகப்பனார் நரஸிம்மன் சம்பந்தம் தன் பிள்ளைக்கு வேண்டுமென்று அவரிடம் ஆச்ரயிக்கச் செய்தார். இவர் ப்ரதிவாதி நிரஸனபூர்வக ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்யக்கூடியவர். அவருக்குப் பிறகு வாத்ஸ்யானந்தாச்சார். அவருக்குப் பிறகு ராமானுஜாச்சாரியார். அவருக்குப் பிறகு வெங்கடேசாச்சார். அவருக்குப் பிறகு வீரராகவாச்சாரியார். அவர் ஸ்ரீ ரங்கநாத ஸ்வாமி ஸன்னிதியில் ஸ்ரீ பாஷ்யம் கீதாபாஷ்யம் வெங்கடேசாச்சாரிடம் ரஹஸ்த்ரய ஸாரபகவத் விஷயமும் கிரஹித்தவர். அடுத்தபடி ஸ்ரீரங்கபதி தேசிகர். இவர் வீரராகவாச்சாரின் குமாரர். பிதாவிடம் கிரந்த சதுஷ்டயங்களும் காலக்ஷேபம் செய்தவர். அவருக்குப் பிறகு ஸ்ரீரங்கபதி தேசிகர். அவருக்குப் பிறகு ரங்கநாத ஸ்வாமி. அவர் ஸ்ரீரங்கபதி தேசிகரிடம் ரஹஸ்யங்களும் சந்த்ரகிரி வேங்கடாச்சாரியாரிடம் பகவத் விஷயமும் பரகால ஸ்வாமியிடம் துரீயாச்ரமம் பெற்ற மன்னார் ஸ்வாமியிடம் துரீயாச்ரமும் பெற்றவர். இவருக்குப் பிறகு ஸாக்ஷாத் ஸ்வாமி என்கிற வேதாந்தராமானுஜ ஸ்வாமி. இவர் திருநாராயணபுரத்தில் அவதரித்தவராவர். பாஷ்யகாரர் வீதியில் ஏள்ளி இவர் திருமாளிகை வாயிலில் ஏள்ளும் ஸமயத்தில் அவதரித்தாயிற்று. 'வாயிலில் ஒரு ஸ்வாமி' 'உள்ளே ஒரு ஸ்வாமி' ஸாக்ஷாத்

http://acharya.org

உடையவரோ என்று திருத்தகப்பனுர் ஸாதித்தார். அவதாரத்தாலும் காவேரிக்கரைப் புதர்களில் உட்கார்ந்துகொண்டு அனுஷ்டானம் செய்துகொண்டிருக்கும்போது த்யானத்தில் மெய்மறந்திருக்கும் போது காதில் கொசு கூடு கட்டியிருப்பதைப் பார்த்து என்ன உம்மைப் பார்த்தால் (ஸாக்ஷாத் ஸ்வாமி மாதிரியாக) யிருக்கிறதே என்று சொன்னபடியால் ஸாக்ஷாத் ஸ்வாமி என்று பெயர் வந்தது. ஸாக்ஷாத் ஸ்வாமி யென்ருல் கல்யாணாவஹ ஸ்வாமி என்று மற்ருெரு திருநாமம் வாய்ந்த இவர் ஆசார்யர் ரங்கனுத ஸ்வாமியே. இவர் ரங்கனுத ஸ்வாமியிடம் க்ரந்த சதுஷ்டயம், துரீயாச்ரமம் கிரஹித்து ஞான வைராக்யானுஷ்டான சேவதி என்று பிரஸித்தி பெற்று ஸ்ரீ ரங்கனுதனுடையவும் ஸ்வ ஆசார்யனுடையவும் நிய மனத்தால் திருவாருயிரப்படி அனுசரித்து இருபத்தி நாலாயிரப்படி வியாக்கியானமும், திருவாய்மொழிக்கு இருபத்து நாலாயிரப்படி சப்தார்த்தமும் இரண்டு வ்யாக்கியானமும் ரஹஸ்யத்ரயஸாரம் 12 அதிகாரத்துக்கு பூர்வ ஸாராஸ்வாதனீ என்று வ்யாக்கியானம். பிருஹத் குருபரம்பராஸாரா ஸ்வாதனீ வ்யாக்கியானம், ஸ்ரீ தத்வ ஸித்தாஞ்சனம், ந்யாஸவித்யா தர்ப்பணம், முதலிய க்ரந்தங்களைச் செய்தும் ஸ்ரீ திருகுடந்தை தேசிகன் பாதுகாஸேவக ஸ்வாமி முதலானவர்களுக்கு காலக்ஷேபாதிகள் ஸாதித்து எழுந்தருளி யிருந்தவர். இவருடைய திருப்புக்குழி வடுவூரில் இருப்பதாகத் தெரி கிறது. பிற்கு கோபால தேசிகர் என்கிற திருக்குடந்தை தேசிகன் இவர் சோள தேசத்தில் திருக்கண்டியூர் ஸமீபத்தில் காவேரி தீரத்தில் ராயம்பேட்டை என்னும் ஸ்ரீ கிராமத்தில் கிருஷ்ணஸூரி என்கிற ப்ரம்மவிதக்ரேஸரிடம் அவதரித்தவர்-கிருஷ்ணஸூரி என்பவர் சந்ததியில்லாமையால் திருக்குடந்தைக்குக் கீழ்புரமுள்ள திருவிண்ணகரம் க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருந்து கொண்டு திரு விண்ணகரப்பனை ஸந்ததிக்காகப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கை யில், திருவேங்கடமுடையான் முன்பு அனந்தஸூரியிடம் தன் கண்டாம்சமாய் தூப்புல் தேசிகனை அவதரிப்பித்தாப்போல் தன்னுடைய அபராவதாரமான திருவண்ணகர் ஸ்ரீநிவாஸன் கிருஷ்ணஸூரியன் ஸ்வப்னத்தில் எழுந்தருளி பாயஸத்தைக் கொடுத்து அவர் பத்னியை ப்ராசனம் செய்யச் செய்து தன் மூலமாக ஒரு புத்திரனை அவதரிப்பித்தார். இப்படி ஸ்வாமி அவதா ரத்தை ஸ்ரீ தேசிகன் (ஜகதிபவிதா தெய்வாத் கச்சித் ஜிகாஸித ஸம்ஸ்ருதி:) என்றும் ஸத்வர்த்தனீம் அனுவிதாஸ்யதி சாச்வதீம்ந: என்று ஸூசித்திருப்பதாகச் சொல்லுகிருர்கள். ஸ்ரீ கிருஷ்ண ஸூரி யும் இவருக்குத் தன் ஆராத்ய தெய்வமான கோபால தேசிகன்

http://acharya.org



ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்

மாசி—புஷ்யம்

ஸ்ரீரங்கேசபதே ஸமர்ப்பிதபரம் ச்ருத்யந்தராமாநுஜ
ஸ்ரீயோகீந்த்ரகுருத்தமோ யமிந: ச்ருத்யந்தவித்யாத்மந: ।

ப்ராப்தச்ருத்யவதம்ஸயுக்மஹ்ருதயம் ஸ்ரீவாஸராமாநுஜாத்,
ஸ்ரீஸ்ரீவாஸ முநீந்த்ர தேசிகமணிம் ச்ரேயோநிதிம் ஸம்ச்ரயே ॥

http://acharya.org

என்று திருநாமமிட்டு யதாவத்தாய் உபநயநாதி ஸம்ஸ்காரம் பஞ்ச ஸம்ஸ்காரம் வேதாத்யயனம் இவைகளைச் செய்வித்தருளினார். இவர் அதிமேதாவியாய் கிரஹித்தும் தர்க்கம் வ்யாகரணம் மீமாம்ஸா முதலிய சாஸ்த்ரங்கள், பெரியாழ்வார் திருப்பல்லாண்டு துடங்கி திவ்ய ப்ரபந்தம், தேசிக ப்ரபந்தம் இன்னும் தேசிக ஸ்தோத்திரம் முதலியவைகளையும் அதிகரித்து அதி மேதாவியாய் வேதாந்த க்ரஹண ஸாபேக்ஷராயிருக்குமளவில், இவருடைய பிதா அப்பொழுது ஸ்ரீ ரங்கத்தில் ஸ்ரீ பாஷ்யகார, வேதாந்த தேசிகசடாரி மூர்த்தியாய் சமதமாதி குண ஸம்பந்நராய் எழுந்தருளியிருக்கும் ஸாக்ஷாத் ஸ்வாமியை ஆச்ரயித்து க்ரந்த காலக்ஷேபங்கள் செய் என்று நியமித்தார். அதைக்கேட்டு இவரும் உடனே திருவிண்ண கரப்பன், அபர்யாப்தாமிருதன், இவர்களை ஸேவித்து நியமனம் பெற்றுக்கொண்டு ஸ்ரீரங்கம் எழுந்தருளி அனுஷ்டானம் செய்து கொண்டு ஸாக்ஷாத் ஸ்வாமியிடம் விநீதராய் தெண்டம் ஸமர்ப்பித்து சிஷ்ய ஸ்தேஹம் சாதிமாம் த்வாம் ப்ரபந்நம் என்கிறபடி, தன்னைச் சிஷ்யனாக அங்கீகரித்தருள வேணும், க்ரந்த காலக்ஷேபாதிகள் செய்து வைக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார். ஸ்வாமியும் ஏற்கனவே தனக்கு ஸ்வப்னத்தில் ஸ்ரீநிவாஸன் 'கோபால தேசிகன் என்று ஒருவர் வருவார். அவருக்கு எல்லா க்ரந்தங்களையும் உபதேசியு'மென்று நியமித்திருந்ததால், இவரைக் கண்டதும் சந்தோஷித்து இவருடைய சிஷ்ய குணபூர்த்தியைக்கண்டு ரொம்பவும் திருவுள்ளம் உகந்து நல்ல நாளில் நித்யக்ரந்த, பாஞ்சராத்ரரக்ஷை, ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம் முதலான ரஹஸ்யங்கள், ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்ய, சுருதப்ரகாசிகா, தாத்பர்ய சந்திரிகா, சததூஷணி, தத்வ முக்தாகலாப, ந்யாஸ வித்யாதர்ப்பண, ஸ்ரீதத்வ ஸித்தாஞ்சன க்ரந்தங்களையும், பகவத் விஷயம் இருபத்திநாலாயிரப்படியைத் தன் ஆசார்யரிடத்திலும் தம்மிடத்திலும் ஸேவித்தவருமான ஸ்ரீ பாதுகா ஸேவக ஸ்வாமி ஸன்னிதியில் காலக்ஷேபம் செய்வித்தும், ஸ்ரீ ரங்கநாதன் ஸன்னிதியில் ஆசார்ய நிஷ்டையாய் பர ஸமர்ப்பணமும் செய்துவைத்தார். பிறகு இவருக்கு ஸ்வப்னத்தில் ஆராவமுதன் எழுந்தருளி, செழுமாமணிகள் சேறும் திருக்குடந்தை என்று ஆழ்வார் மங்களாசாஸனம் செய்தருளியதும் திவ்ய ப்ரபந்த ப்ரவர்த்தகரான ஆராவமுதாழ்வான் நித்யவாஸ ஸ்தலமானதுமான திருக்குடந்தையில் நீர் எழுந்தருளியிருந்துகொண்டு ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்யும் என்றும் நியமித்தருளினார். இவரும் (தன்யோஸ்மி) என்று திருவுள்ளம் பற்றி, அங்கீகரித்து, இதைத் தன்னுடைய ஆசார்யன் ஸந்நிதியில் விஜ்ஞாபித்தருளினார்.

2

http://acharya.org

அவரும் இதைக்கேட்டு, போர உகந்து இவரை அழைத்துக் கொண்டு ரங்கனுதன் ஸன்னிதிக்கு எழுந்தருளி இவர் மூலமாக ஸம்ப்ரதாயம் தழைத்தோங்க வேணுமென்பதற்காகவும் ஸத் ஸம் ப்ரதாய ப்ரவசனத்துக்கும் க்ரந்த கரணங்களுக்கு ஞான ஸம்ருத் திக்கு உபயுக்தமான தேசிகபரம்பராகத ஹயக்ரீவ மந்த்ரத்தை உப தேசித்து ரங்கனுதன் நியமனத்தையும் பெற்றுக்கொள்ளச் செய்து, திருக்குடந்தைக்கு அனுப்பிவித்தருளினுர். ஸ்வாமி நியமனம் பெற்றுத் திருக்குடந்தைக்கு எழுந்தருளி ஆராவமுதன் துளஸீவனமாகிய கர்ணக்கொல்லை அக்கிரஹாரத்தில் ஒரு குடிசையில் எழுந்தருளி யிருந்து கொண்டு தேஹயாத்ரைக்காக ஸ்ரீ தேசிகன் போல் உஞ்ச விருத்தியை ஸ்வீகரித்துக் கொண்டும் பரமத நிரஸனபூர்வகமாக ஸ்வமத ப்ரவசனம் செய்துகொண்டும் எழுந்தருளியிருந்தார். அப்படி யிருக்கையில் ஸ்ரீரங்கத்தில் ஸாக்ஷாத் ஸ்வாமி ஆதியில் தயார் செய்த ஸாராஸ்வாதனீ அவசிஷ்டபாகத்தை இவரைக் கொண்டு செய்விக்கும்படி ஸ்ரீ ரங்கனுதன் தனக்கு நியமித்ததாய் நியமிக்க, அந்த நியமனம் பெற்றுக்கொண்டு அந்த கைங்கர்யத்தைச் செய்தருளி அதில் த்வயாதிகார வ்யாக்கியானத்தைத் தன் ஆசார் யாரிடம் காண்பிக்க அவரும் ஆச்சர்யப்பட்டு, பாக்கியையும் செய்யும்படி நியமித்தருளினுர். அதன்படி பாக்கியையும் பூர்த்தி செய்துவிட்டு, மற்றும் சரணுகதி ஸாரமான நிக்ஷேப சிந்தாமணி, நித்யக்ரந்த ஸங்க்ரஹமான ஆந்நிகம், ஜயந்தீ நிர்ணயம், திருப் பல்லாண்டு, கண்ணிநுண் சிறுத்தாம்பு வ்யாக்கியானங்களும் ஸ்ரீ பாஷ்ய ஸங்க்ரஹ வ்யாக்கியானமும் செய்து ப்ரவசனம் செய்து கொண்டிருக்கையில் ஸ்ரீ ஆராமுதாழ்வான் ஸ்ரீமந் நாதமுனிகள் மூலமாக, திருவாய்மொழியை வெளிப்படுத்தி விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை ப்ரவர்த்திக்கச் செய்தும், அவர் பேரனுன ஆளவந் தாரால் ஸித்தித்ரயம் ஸ்ரீ கீதார்த்தஸங்க்ரஹம் முதலியதுகளால் ஸம்ப்ரதாயத்தை வளர்த்தும், ஸ்ரீ ராமானுஜ முனியால் பஹுவாய் வ்யாபரிக்கச் செய்து காக்கப்பட்டும் ஆக இந்த மூன்று முனிகளால் ப்ரவர்த்திக்கப்பட்டு ஸ்ரீ தேசிகனுல் (நாதோபக்ஞம் ப்ரவ்ரித்தும்) என் கிற ச்லோகத்தால் பிரசம்ஸிக்கப்பட்ட ஸ்ரீ முனித்ரய ஸம்ப்ரதாயம் கீழ்ச்சொன்ன குருக்கள் மூலமாய் ஓரான் வழியாக வந்திருக் கிறது. இன்னும் இவர் தூப்புல் தேசிகன், கிடாம்பி அப்புள்ளார் மூலமாகத் தனக்குச் சகல வைபவங்களும் உண்டாயிற்று, தனக்கு அந்த வம்சத்தில் அன்வயம் நேரவில்லை, அதற்காக மறுபடி இந்த வம்சத்தில் அவதரித்தும் தான் செய்தருளின ரஹஸ்யாதி க்ரந்தங் களுக்கு அர்த்தங்களையும் க்ரந்த மூலமாகச் செய்து கொண்டிருப்ப

http://acharya.org

தால் இவர் தேசிகன் அவதாரமே, இவரைக்கொண்டு அந்த ஸம்ப்ர தாயத்தை விருத்தி செய்யத் திருவுள்ளம்பத்தி வடக்கே செய்யானம், தாம்பரபர்ணீ தீரத்தில் வத்திராயிருப்பு, திருக்குடந்தைக்கு மேல் புரமாயுள்ள வழுத்தூர் கிராமத்திலும் அவதரித்த மூன்று ஸ்வாமிகளை நீங்கள் துரீயாச்ரமத்தை கிரஹித்துக் கொண்டு, திருக்குடந்தை தேசிகனை ஆச்ரயித்து ஸம்ப்ரதாயார்த்தங்களை கிரஹித்துக் கொண்டும் உஜ்ஜீயுங்கள் என்று ஸ்வப்னத்தில் நியமித்தருளினுர், அதைக் கேட்டு மூன்று ஸ்வாமிகளும் துரீயாச்ரமத்தை கிரஹித்து ஸ்ரீ நிவாஸ மஹா தேசிகன், ரங்கனுத மஹா தேசிகன், வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன் என்று மூன்று திருநாமங்களையும் வஹித்து, திருக்குடந்தையில் அமுதன் ஸன்னிதியில் முன்பு திருக் கோவிலூர் இடைகழியில் மூன்று ஆழ்வார்கள் சேர்ந்ததுபோல் சேர்ந்து பெருமாளை மங்களாசாஸனம் செய்து கொண்டு, தங்கள் மனோரதங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு திருக் குடந்தை தேசிகன் திருவடிவாரத்துக்குச் சென்று, போகும்போதே (ஆசார்யம் த்வாம் வ்ருணே) என்று ஆசார்யவரணம் பண்ணி தெண்டம் ஸமர்ப்பித்தார்கள். ஸ்ரீ ஆராவமுதன் ஏற்கனவே இவர் களுக்குப் போலவே மூன்று முனிகள் ஏளுவார்கள், அவர்களுக்கு ஸம்ப்ரதாயப்ரவசனம் செய்துவைக்கக்கடவாய் என்று ஸ்ரீதிருக் குடந்தை தேசிகனுக்கும் ஸ்வப்னத்தில் ஸாதித்திருந்ததால், ஸ்வாமி யும் போரவுகந்து இவர்களுடைய ஞான-பக்தி—வைராக்கியாதி களைக் கண்டு விஸ்மயித்து அதிக பரீக்ஷையன்றியே ஸம்ப்ரதாய க்ரந் தங்களை உபதேசித்தும் ரஹஸ்யார்த்த அனுஷ்டானங்களை சிக்ஷிப் பித்தும் அமுதன் ஸன்னிதியில் இவர்களுக்கு ஆசார்ய நிஷ்டையாய் சரணுக்தியும் செய்வித்தருளினுர். பிறகு ஸ்வாமி இவர்களைப் பார்த்து நீங்கள் அவரவர்களுக்கு உகப்பான இடத்திலிருந்து கொண்டு, ஸம்ப்ரதாய ப்ரவசனங்களை செய்யுங்கள் என்று நியமித் தருளினுர்.

அவர்களும் கொஞ்ச காலம் அந்தப்படி யிருந்து, ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்து கொண்டிருந்துவிட்டு, ஒரு ஸமயம் திருக் குடந்தையில் தம் ஆசார்யன் திருநக்ஷத்திரம் கொண்டாடுகையில் அவ்விடம் மூன்று ஸ்வாமிகளும் எழுந்தருளி 'ஸ்வாமி நியமனப்படி நாங்கள் செய்துகொண்டிருந்தோம். ஆனுல் எங்களுக்கு அதில் ஸ்வல்ப சிஷ்யர்கள்தான் சேர்ந்தார்கள். அதில் எங்களுக்கு ருசி யில்லை; எங்களை மனன சீலர்களாய் அனுபவ மாத்ரபராளாய் இருக்க வேண்டுமென்று நியமித்தருள வேணு'மென்று ரங்கனுத ஸ்வாமி;

http://acharya.org

ஸ்ரீநிவாஸஸ்வாமி, இருவர்களும் பிரார்த்தித்துக் கொண்டார்கள். அவர்களை அப்படியே இருங்கள் என்று நியமித்துவிட்டு வழுத்தூர் கிராமத்தில் மாடபூசி நைத்ரவம்சத்தில் பிரம்ம வித்தான ஸ்ரீநிவா ஸாச்சாரிடம், அவதரித்தவரும் ப்ரம்மசர்யாச்ரமத்திலேயே ஸகலங் களையும் உணர்ந்து கல்யாணம் தனக்குச் செய்ய வேணுமென்று ப்ரஸ்தாபிக்க, ராத்திரியே கிளம்பிப்போய் ஸந்நியாஸாச்ரமம் கிரஹித்தவரும் வழுத்தூர் ஸ்வாமி என்று பெயர்பெற்ற வேதாந்த ராமானுஜ ஸ்வாமியைப் பார்த்து முன்பு தேசிகர் திருவடிகளில் ஆச்ரமத்து ஸம்பரதாய ப்ரவசனத்துக்கு நியமிக்கப்பட்ட பிரம்ம தந்திர ஸ்வதந்திர ஜீயர், வெண்ணைக்குத்து ஜீயர், ப்ரபாகர ஜீயர் இந்த மூன்றுயதிகளில் ப்ரம்மதந்திர ஸ்வதந்திர ஜீயருக்குமட்டும் ஸந்ததியும் மற்றவர்களுக்கும் இல்லாதததுபோல் இதுவும் ஆயிற்று. பாஷ்யகாரரைப் போலிருக்கும் நீரே இந்த ஸம்ப்ரதாயத்தை விருத்தி யாக்கக்கடவீர். காலம் கலிகாலம், அதிக பரீக்ஷை சோதனம் வேண் டாம் என்று நியமித்தருளினர். ஸ்வாமியும் (தன்யோஸ்மி) என்று அங்கீகரித்தருளினர்—பிறகு திருக்குடந்தை தேசிகனும் துல்லிய சீலவயோவ்ருத்தராய் துல்லியாபிஜன லக்ஷணயாயுள்ள பத்னி யுடன் கிருஹஸ்தாச்ரமத்தில் எழுந்தருளி யிருக்கையில் ஜனித்த கன்னிகையை (மமாயம் பாலதங்வீதி) என்று பாஷ்யகாரரால் கொண் டாடப்பட்ட இளையவில்லி குமாண்டூர் பிள்ளையின் வம்சத்தில் ஜனித்த வீரராகவாசாரியார் என்பவருக்குக் கன்னிகாதானம் செய்து அவருக்கு ஜனித்த வேதாந்தாச்சாருக்கு ஸம்ப்ரதாயார்த்தங்களைச் சொல்லிவைத்து சரணகதியும் செய்வித்தருளினர். ஸ்ரீதேசிகன் ஒரு ஸமயம் தன் சிஷ்யர்களால் உபஹாரமாக ஸமர்ப்பிக்கப்பட்ட த்ரவ்யங்களைக் கொண்டு அமுதனுக்கு ஒரு பதக்கம் செய்து சாத்தி யருளினர். அது ஜீவாத்மாக்கள் எல்லாரும் ஸ்ரீய: பதிக்கு கௌஸ் துப ஸ்தானீயர்களாய் ஹிருதயத்தில் இருக்க வேண்டியவர்கள். ஆசார்யாரால் ஸமர்ப்பிக்கப்படும் ஜீவர்கள் எல்லாரும் அந்த ஜீவர்களோ, என்று ப்ரசம்ஸிக்கப்படும் ரத்னங்களால் இழைக்கப் பட்டு விளங்குகிறது. அதை இன்றும் ஸேவித்துக்கொள்ளலாம். இன்னொரு சமயம் ஸ்ரீ அமுதனுக்கு திருப்ரதிஷ்டை செய் விக்க நேர்ந்தபோது மஹாபாகவத ஸ்பர்சம் வேண்டும்—அதற்கு ஸ்வாமியே தகுந்தவரென்று பிரார்த்திக்க, ஸ்வாமி எழுந்தருளி அதைச் செய்தருளினர். பிறகு வட தேச யாத்ரை—திருவணை யாத்ரை முதலியதுகள் செய்து கடைசியாக துரீயாச்ரமம் பெற்று (அபர்யாப்தாமிருதன்) என்ற திருநாமம் பெற்று விளங்கினர். இவர் தேசிகாவதாரமென்று நினைக்கும்படி அநேக ஸங்கதிகள்

http://acharya.org

இவரிடம் இருப்பதுடன், ஸ்ரீ தேசிகன் (பகவத்யானஸோபாநம்) செய்ததுபோல் இவர் (சார்ங்கதந்வஸ்தோத்திரம்) என்று ஒரு ஸ்தோத்திரம் செய்திருக்கிறார். சில ஆசார்ய புருஷர்களும் பல முகர்களாய்ப் பல பல சிஷ்யர்களுக்கு இதை ப்ரவர்த்திப்பித்துக் கொண்டும், சிலர் அன்னியாளை ஆச்ரயித்துக் கொண்டும் இருந்து விட்டார்கள்—இந்த ஸம்ப்ரதாயத்துக்கு முதல் கூடஸ்தர் நாதமுனி, 2 வது கூடஸ்தர் பாஷ்யகாரர், 3 வது கூடஸ்தர் தேசிகன், 4 வது திருக்குடந்தை தேசிகன்—இப்படி நான்கு கூடஸ்தர்களுடன் வளர்ந்துவந்த சுத்தமுனித்ரய ஸம்ப்ரதாயம் ஸ்ரீ திருக்குடந்தை தேசிகனுக்கே சொந்தமாயிற்று. அவரும் ஆந்நிகம், ஜயந்தீ பாரணுதி முதலிய பரிஷ்காரங்களையும் இந்த ஸம்ப்ரதாயத்துக்குச் செய்தருளினுர். இப்படி இந்த ஸம்ப்ரதாயம் திருக்குடந்தை தேசிகன் ஸம்ப்ரதாயஸ்தர்களுள்ள எல்லாரிடத்திலும் விச்ரமம் பெருமல், ஸ்ரீமதாண்டவன் ஸம்ப்ரதாயத்துக்கே அஸாதாரணமாய் விளங்கி வருகிறது. இந்த ஸம்ப்ரதாயத்தை ஸ்ரீ திருக்குடந்தை தேசிகனிடம் மூன்று யதிகள் ஆச்ரயித்து ஸம்ப்ரதாயப்ரவசனம் செய்து வந்ததால் இதற்கு—முநித்ரயமென்கிருர்கள். அதுசரியல்ல. அதில் இரண்டு பேருக்கு சந்ததி இல்லை. வழுத்தூர் ஸ்வாமி, ஸ்ரீ ரங்கம் ஸ்வாமி எனப்படும் வேதாந்த ராமானுஜ ஸ்வாமி ஒருவரால்தான் இத்த ஸம்ப்ரதாயம் நிர்வஹிக்கப்பட்டு வந்தது. அதிலும் அந்த ஸ்வாமியிடம் ஆச்ரயித்து அண்ணையாச்சார் ஸ்வாமி, வங்கீபுரம் ஸ்வாமி என்கிற ஆண்டிகாட்டு ஸ்வாமி, கேதானப்பட்டு ஸ்வாமி ஸம்ப்ரதாயங்களிலும் முனித்ரய ஸித்தாந்த ஸ்தாபகம் என்பது விடப்பட்டு, ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிக ஸத்ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகம் என்று விளங்கப்பட்டுவருகிறது. ஸ்ரீ ஆண்டவன் ஸம்ப்ரதாயத்தில் மட்டும் ஸ்ரீமந்நாதமுனி, ஸ்ரீமத்யாமுனமுனி, ஸ்ரீராமானுஜமுனி, முனிரூப முனித்ரயஸித்தாந்த ஸ்தாபகம் என்று நாளது வரையில் விளங்கி வருகிறது. அந்த ஆண்டவன் என்பவர் யாரெனில் ராஜமன்னுர் கோயிலுக்கு ஸமீபமாயுள்ள விளக்குடி கிராமத்தில் ஈயுண்ணி வம்சம், பாரத்வாஜ கோத்திரத்தில் அவதரித்தவரும் வித்வானும் விரக்தராயும் அனுஷ்டான பரராயுமிருந்தார்.

இவர் ஸ்ரீ ரங்கம் ஸ்வாமி எனப்படும் வேதாந்த ராமானுஜ ஸ்வாமியிடம் ஆச்ரயித்து ஸம்ப்ரதாய க்ரந்தங்களையும் காலக்ஷேபம் செய்தும், சரணுகதியையும் துரியாச்ரமத்தையும் பெற்றுக் கொண்டு ஸ்ரீரங்கத்திலேயே எழுந்தருளியிருந்தார். இப்படியிருக்கையில் பெருமாள் கோவிலில் சாண்டில்ய கோத்திரத்தில்

http://acharya.org

கிருஷ்ணமாச்சாரியார் என்னும் ஒரு பிரம்ம வித்துக்கு ஒரு குமாரர் அவதரித்தார். அவர் ஸாமசாகீ. யதாக்ரமமாக கர்ப்பாஷ்டமத்தில் தகப்பனாரால் உபநயநாதிகள் செய்துவைக்கப்பட்டு, தகப்பனாரிடமே ஸாமவேதம் அத்யயனம் செய்து கொண்டும் காவ்யங்களும் படித்துக் கொண்டுமிருந்தார். 10 வயது சுமார் இருக்கும். இந்த குழந்தையை அழைத்துக்கொண்டு கிருஷ்ணஸூரி என்பவர் திருவணை யாத்திரையாக திருக்குடந்தை எழுந்தருளினார். அங்கு பாட்டராச்சார் தெருவில் ஸ்ரீ ராகவாச்சார் என்னும் ஸ்வாமி அவர் நாவல்பாக்கம் சதுர்வேதம் சதக்ருது பாட்டராச்சாரியார். சதுச்சாஸ்திர வல்லவர் பிரம்மவித்து, பஞ்சகால பாராயணர் உபபந்நருமானதால் அதிதி ஸத்காரமும் செய்பவர். ச்ரோத்திரியாந்நம் யாசித்து வாங்கிக்கொள்ள வேணுமென்று யிருப்பதால் அந்த ஸ்வாமி திருமாளிகையில் எழுந்தருளியிருந்து பகவதாராதனம் செய்துகொண்டிருந்தார். பாட்டராச்சார் ஸ்வாமியும் இவர் குமாரர் குழந்தையினுடைய தேஜஸ்ஸையும் சாதுர்யத்தையும் ஸாமம் சொல்லும் ரீதியையும், காவ்யச்லோகங்களுக்கு தாத்பர்யம் வர்ணிப்பதையும் தமிழில் திரிநெடுந்தாண்டகத்தில் ஒரு பாசுரத்துக்கு வ்யாக்கியானம் ஒன்றுமில்லாமல் அர்த்தம் சொன்ன ப்ரகாரத்தையும் கேட்டு ஆச்சர்யப்பட்டு இவர் பிற்காலத்தில் ரொம்பவும் வ்யாபகராக இருக்க வேணுமென்று அனுக்கிரஹித்தாயிற்று. பிறகு தகப்பனார் குழந்தையையும் அழைத்துக்கொண்டு திருவணை யாத்திரைக்குக் கிளம்புகையில்'' இந்த பால்யத்தில் குழந்தையை நடத்தி அழைத்துப் போக வேண்டாம், நான் சாதம் போட்டு காவ்ய பாடங்கள் சொல்லிக் கொடுக்கிறேன். எங்களிடத்திலேயே இருக்கட்டு''மென்று நிறுத்திவிட்டார். தகப்பனார் மாத்திரம் திருவணை சென்று மூன்று மாதம் கழித்து, திரும்ப, திருக்குடந்தை வந்தார். அதற்குள் குழந்தையும் பாரதசம்பு, விச்வகுணாதர்சம் முடித்துவிட்டு நாடகம் ஆரம்பிக்கும் தறுவாயில் இருந்தார்.

புத்திரனைப் பார்த்து, சந்தோஷித்து, ஸ்வாமியிடம் நியமனம் பெற்றுக் குழந்தையையும் அழைத்துக்கொண்டு தகப்பனார் பெருமாள் கோவிலுக்கு சென்றுவிட்டார். அவ்விடத்தில் போய் குமாரன் காவ்ய நாடகாலங்காரங்கள் முடித்து தர்க்கசங்க்ரஹ பிரகாசிகை, ஸிதாந்த கௌமுதி இவைகள் வாசித்துக்கொண்டிருக்கையிலேயே திடீரென்று பிதாவின் அனுமதி பெற்றுக் கொண்டு ஸ்ரீரங்கம் எழுந்தருளி ஸ்ரீரங்கம் ஸ்வாமி ஸன்னிதியில் தனக்கு உபாயானுஷ்டானம் ஆகவேண்டுமென்று பிரார்த்தித்தார்.

http://acharya.org

இவ்வளவு பால்யத்தில் இவருக்கு புத்தி உண்டானது ஆச்சர்யம், ஏதோ இவருக்கு விசேஷ அனுக்கிரஹம் இருக்கிறதென்று நினைத்து ஸ்ரீரங்கனுதன் ஸன்னிதியில் ஸ்ரீரங்கம் ஸவாமி இவருக்கு உபாயானுஷ்டானம் செய்தருளினுர். உடனே ஸ்வாமியிடம் நியமனம் பெற்றுக்கொண்டு பெருமாள்கோவிலுக்கு ஏளி, மாத்ருபித்ரு சிச்ரூஷைகள் செய்துகொண்டும் தர்க்கம்மிமாம்ஸை இவைகளை வாசித்துக்கொண்டும் 4, 5 வருஷம் ஏளியிருந்தார், பிறகு திடீரென்று கிளம்பி ஸ்ரீரங்கம் வந்து தனக்கு ஸம்ப்ரதாய க்ரந்தங்களை காலக்ஷேபம் செய்துவைக்கவேணும் என்று பெரிய ஸ்வாமியிடம் பிரார்த்தித்தார். அவரும் தனக்கு வார்த்தக தசை, அசக்தமாயிருக்கு என்று சொல்லி, தன் ப்ரிய சிஷ்யரான ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேசிகனிடம் இவருக்கு காலக்ஷேபம் சொல்ல நியமித்தார். அவரும் (குரும் பாரம் நவோடும் அஹம் உத்ஸஹே) என்று தம்மால் இந்தக்கார்யம் செய்துவைக்க முடியாதென்று பயப்படவே, பெரிய ஸ்வாமியும் பயப்படாதேயும் (அம்சதோரநுப்பிரவிஷ்டம்) என்று உம்மிடம் நாம் புகுந்து இந்தக் கார்யத்தை நிர்வஹிப்போம். இவர் ஜகதாசார்யனுக விளங்கப்போகிருர் என்றும் அனுகிரஹித்து நியமித்தார். ஸ்வாமியும் (தன்யோஸ்மி) என்று நியமனத்தைக் க்ரஹித்து இவருக்கு எல்லாக் க்ரந்தங்களையும் ரஹஸ்ய ரஹஸ்யார்த்தங்களையும் காலக்ஷேபங்களையும் செய்விக்க ஆசாரத்தையும் சிக்ஷிப்பித்தார். இவரும் அவைகளை க்ரஹித்தும் அவ்விருவர்களிடமும் நியமனமும் பெற்றுக்கொண்டும் பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளி திருத்தகப்பனுர் பரமபதிக்கவே கிரஹஸ்தாச்ரமத்தில் இருந்துகொண்டு பஞ்சகால பராயண்ராய் ஸஹதர்மசாரிணியுடன் இருந்தார். இப்படியிருக்கையில் திடீரென்று கிளம்பி ஸ்ரீரங்கம் எழுந்தருளி ஸ்ரீநிவாஸ ராமானுஜமகாதேசிக ஸ்வாமியிடம் ஸந்நியாஸம் ஆகவேணுமென்று பிரார்த்தித்தார். ஸ்வாமியும் இவர் 14 வயதில் சரணுகதிக்கு பிரார்த்தித்ததுபோல், இந்த பால்யத்தில் ஸன்யாசத்துக்கு பிரார்த்திப்பதும் ஆச்சர்யமாக யிருக்கிறது. இது பெரிய பெருமாளுக்கு திருவுள்ளம் போலிருக்கிறதென்று நினைத்து இவரைப் பரீக்ஷை செய்துகொண்டிருக்கையில், இவர் மாமியார், பத்நீ, மச்சினன் இவர்கள் இந்த பால்யத்தில் ஸந்நியாசம் கொடுக்கக்கூடாது. ரொம்ப பாபமுண்டு என்று ஸ்வாமியைப் ப்ரார்த்திக்கவே, ஸ்வாமியும் இவரை 'நீ ஊருக்குப் போய் ஒரு ஸந்ததி உண்டாகும் வரையில் கிருஹஸ்தாச்ரமத்தில் இருந்து விட்டுவா, பிந்தி பார்த்துச்கொள்வோ'மென்று நியமிக்கவே இவரும் மறுபடி காஞ்சிக்கு ஏளி, ஒரு குமாரத்தி ஜனிக்கவே அதுவரையில்

http://acharya.org

இருந்துவிட்டு, மறுபடி கிளம்பினார். திருத் தாயார் வருத்தப்படவே, 'வருத்தப்படாதே, சகுனரூபமாக நியமித்தால் போகிறேன். இல்லாவிடில் வந்துவிடுகிறேன்' என்று சொல்லிவிட்டு வரவே (பாரத்வாஜம், கருடன் முதலிய பக்ஷி சகுனங்கள் ஆகவே பகவன் நியமனமென்று தாயாரும் திரும்பிவிடவே, இவர் ஸ்ரீரங்கம் எழுந்தருளி மறுபடியும் ஸன்னியாஸத்துக்குப் பிரார்த்தித்தார். பத்னி முதலியவர்கள் பல இடங்களில் வந்து பலவிதமாய்த் தடுத்தும் முடியவில்லை. ஸ்வாமியும் இவரைப் பலவிதமாக சோதித்துவிட்டு ஒரு நாள் நீர் தாரேஷணை புத்ரேஷணை வித்தேஷணை இந்த மூன்றையும் விட்டுவிடும் என்று கழுத்தளவு ஜலத்தில் நின்று ப்ரதிக்ஞை செய்யுமென்று நியமிக்க, இவரும் நான் சிஷ்யேஷணையும்கூட விட்டுவிடுகிறேனென்று சொல்ல, அது வேண்டாம் ஜனங்கள் உஜ்ஜீவிக்க வேண்டும். பெரிய பெருமாள் திருவுள்ளம் என்று சொல்லித் தடுத்துவிட்டு, ஸன்னியாஸாச்ரமத்தைக் கொடுத்து அந்த ஆச்ரம தர்மங்களையும் அனுஷ்டானத்தையும் சிக்ஷிப்பித்து அனுக்கரஹித்தருளினார். இப்படி ஸந்நியாஸாச்ரமம் பெற்றுக்கொண்டு ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் யென்னும் திருநாமத்துடன் ஸ்ரீரங்கத்திலேயே வெகுகாலம் வரையில் எழுந்தருளியிருந்து கொண்டு (முனி) என்று மனனசீலராயும் (யோகி) என்று த்யான நிஷ்டராயும், அஷ்டாக்ஷர த்வயாதி மந்த்ர ஜபபரராயும் எழுந்தருளியிருந்தார். இவர் மாதத்தில் 7-8 நாள்தான் ஸ்ரீரங்கனுதன் திருவடிகளில் பக்தியுள்ள ஸ்ரீவைஷ்ணவாள் திருமாளிகையில் பிக்ஷைக்கு எழுந்தருளி பிக்ஷாந்நத்தை க்ரஹித்துக்கொண்டு வடதிருக்காவேரிக்கு எழுந்தருளி அங்கு ப்ரஸாதத்தை அலம்பி விட்டு பகவச்சரணாரவிந்தங்களில் அர்ச்சிக்கப்பட்ட துளசியைக் கலந்துகொண்டு உப்பு-புளி-காரம்-நெய்-தயிர்-பால் இல்லாமல் வெறும் ஹவிஸ்ஸை ஸ்வீகரித்துவிட்டு, தீர்த்தப்ராசனம் செய்வது வழக்கம். சில நாள் இந்த பிக்ஷையுமில்லாமல் அச்வத்தாதி மரத்திலிருந்து உதிர்ந்த காய்ந்த சருகுகளைப் பொடி செய்து புஜித்து தீர்த்தப்ராசனம் செய்துகொண்டும் (அப்பக்ஷ: வாயுபக்ஷ: (நிராஹார:) என்று மஹர்ஷிகள் போல் வெகு காலம் இருந்திடவே ஸ்ரீரங்கனுதன் இவருக்கு யோகதசையில் எழுந்தருளி 'என்ன நீர் இப்படி ஆச்ரம தர்மம் கொண்டாடிக்கொண்டிருக்கிறீரே, தயை இல்லையே, ஸம்ஸாரிகளான சேதனவர்க்கங்களை உஜ்ஜீவிப்பிக்க வேண்டாமா? அது பெரிய தர்மமல்லவா? நாதமுனிகள், உடையவர் முதலியவர்கள் அதைச் செய்யவில்லையா? அப்படியே அத்யாத்மதர்மத்தை உபதேசித்துக்கொண்டும் சரணாகதி செய்து

http://acharya.org



**ஸ்ரீமத் பாதுகாஸேவக ராமாநுஜ மஹாதேசிகன்**

*ஸ்ரீமந்நாதமுநீந்த்ரயாமுநமுநி ஸ்ரீஸம்யமீந்த்ராத்மந :*
*ஸ்ரீஸ்ரீவாஸமுநீந்த்ர தேசிகமணே : ப்ராப்தாகமாந்தத்வயம் |*
*ஸ்ரீரங்கேசபதேததர்ப்பிதபரம் ஸ்ரீபாதுகா ஸேவக ஸ்ரீராமா*
*நுஜ யோகிநம் குருவரம் வந்தே தயாஸாகரம் ||*

http://acharya.org

1126 Q1:332b 307

கொண்டும் இரு'மென்றும் நியமித்தார். இதற்குப்பிறகு இவர் கொஞ்சம் காலக்ஷேபம் சொல்லவும் சிஷ்ய ஸங்க்ரஹணம் செய்யவும் ஆரம்பிக்கவே, வெகு ஆஸ்திகர்கள் ஸ்வாமியை ஆச்ரயித்தார்கள். அன்பில் கிராமத்தில் இருந்த ஓர் ஆஸ்திகர் ஸவாமிய்ய ஆச்ரயித்து ஸ்ரீரங்கத்துக்கு மேலான, மேலூர் என்கிற கிராமத்தில் வடதிருக்காவேரி தென்னண்டைக் கரையில் ஓர் இடம் வாங்கி ஸ்வாமிக்கு எழுந்தருளியிருக்க ஏற்பாடுசெய்தார். ஸ்வாமியும் அந்த இடத்தில் சிஷ்யர்களால் ஒரு பர்ணசாலை கல்பித்துவைத்து, அதில் எழுந்தருளியிருந்துகொண்டு காலக்ஷேபம் சரணுதிகளை செய்வித்துக்கொண்டும் ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளி பிக்ஷாடானம் செய்துகொண்டும் முன்போல் எழுந்தருளியாயிருந்தது. பெருமாள் கோவிலில் நாதமுனி வம்சத்தில் ஜனித்தவரும் சதுச்சாஸ்திர வல்லவரும் நியாய ஸித்தாஞ்சனம் முதலிய தேசிக க்ரந்தங்களுக்கு வ்யாக்கியானம் செய்தருளியவருமான திருப்புக்குழி அய்யா என்றவரும், மன்னுர்கோவிலில் சதுச் சாஸ்த்ரவல்லரான கோபாலண்ணு என்னும் பண்டிதரும், சைவ வைஷ்ணவ வரவதூகரும் சதுர்தச லக்ஷணி வல்லப வ்யாகரணம் வித்வான் ரங்காச்சாரும், திருகுடந்தை பட்டராச்சார் தெருவிலுள்ள மீமிசல் நரஸிம்மாச்சார், சதுர்வேத சதக்ருது பண்டிதர் சின்னுமு ரெங்காச்சார் முதலியவர்களும் கோபால ஸமுத்திரம் நாராயணுச்சார் மைசூரில் ராஜஸபை வித்வானுன சாமளா சக்ரவர்த்தி என்னும் பல பல பெரிய பண்டிதர்களும் வந்து ஆச்ரயித்தார்கள். ஸ்வாமியும் பூர்வாசார்யர்களான உடையவர், தேசிகன் முதலியவர்கள் க்ரந்த கரணங்கள் செய்து ஆசார்யகமும் செய்து உஜ்ஜீவித்தார்கள். நமக்கு அந்த ச்ரமமில்லை. நாம் அதை ப்ரசாரம் செய்தால் போதுமென்று திருவுள்ளம்பத்தி நாலு மாதத்தில் ச்ருதப்ரதாசிகா, பாவப்ரகாசிகா, தாத்பர்யத்தோடு ஸ்ரீபாஷ்யமும் நாலு மாதத்தில் பகவத் விஷயமும் 1½ மாதத்தில் கீதாபாஷ்யம் 2½ மாதத்தில் ரஹஸ்யத்ரயஸாரமும் இந்தப்ரகாரம் தேசிகனைப் போல் 30 ஆவிருத்தித்கு மேல் சிஷ்யர்களுக்கு காலக்ஷேபம் செய்தருளினுர். ஒவ்வொரு சிஷ்யரும் நடந்துவரவேண்டும். ஆறு மாதத்துக்குமேல் காத்திருக்க வேண்டும். கோவில் கட்டளை முதலியது சாப்பிட்டுக்கொண்டிராமல் தன் கிரஹத்தில் ஔபாஸந வைச்வதேவ பகவதாராதனம் செய்து கொண்டிருக்க வேண்டும். காலக்ஷேப காலத்தில் கைகால்களை நீட்டாமலும் கொட்டாவி விடாமலும் ஜாக்கிரதையாக யிருக்க வேண்டும் என்கிற பல நியமமும் உண்டு. இப்படி யிருக்கையில்

http://acharya.org

புதுக்கோட்டையில் தானுதிகாரியா யிருந்த கிருஷ்ணமாச்சாரென்னும் ஒருவர் ஸ்வாமியிடம் வந்து காலக்ஷேமம் செய்துகொண்டிருக்கையில் ஸ்வாமி ஸ்ரீபாஷ்யத்தில் (மஹாபூர்வபக்ஷ ஆரம்பத்தில் லகுபூர்வபக்ஷ ஸித்தாந்தத்தை ஸங்கரஹித்து உபன்யசித்த வைகரியைக் கண்டு, மெய்மறந்து அபிநந்தனம்பண்ணி (பலே என்று தொடை தட்டிக்கொண்டார்). அங்குள்ளவர்கள் என்ன கார்யமென்று இவரை அதட்டவே இவர் நடுங்கிக்கொண்டிருக்கையில் ஸ்வாமி இவரைப் பார்த்து 'பயப்படாதேயும், என்ன ஸங்கதி சொல்லும்', என்ருர். இருவரும் தைர்யமாய் 'இப்பொழுது ஸ்வாமி உபந்நியஸிக்கும் வைகரியைக் கேட்டேன். இப்படிப்பட்ட மஹானுக்கு ஸ்ரீபாஷ்யம் தெரியாதென்று சில மகா பாவிகள் சொன்னுர்கள். அவர்கள் கன்னத்தில் கொடுத்த அறை இது' என்று சொன்னுர். ஸ்வாமியும் உகந்தருளியாயிற்று. ஸாக்ஷாத் ஆதிசேஷாவதாரமென்று அறுதியிட்டார். ஒரு சமயம் திருப்புக்குழி அப்பா என்பவர் ஸ்வாமியை தெண்டம் ஸமர்ப்பிக்க ஸ்ரீரங்கம் எழுந்தருளிஞர். ஸ்வாமீஸன்னிதியில் ஸ்வாமியை தெண்டம் ஸமர்பித்து வேதாந்த சாஸ்திரத்தில் ஒரு ஸம்சயத்தைக் கேட்டார். ஸ்வாமியும் இவர் மஹா பண்டிதர் இவருடைய ஸம்சயம் ஸாமான்யமாயிராது, என்று ஒரு நாள் இரண்டு நாள் ஆலோசித்து மூன்ருவது நாளில் மாத்தியாந்நிக அனுஷ்டானம் செய்து திருமண் காப்பு சாத்திக்கொண்டிருக்கும்போது, இவரை அழைப்பித்து ஸம்சயத்துக்கு உத்தரம் அளிக்கவே, அப்பாஸ்வாமி கேட்டுவிட்டு ஸந்தோஷித்து உடனே தண்டம் சமர்ப்பித்தாராம். என்ன அனுஷ்டானமத்தியில் வழக்கத்துக்கு விரோதம் என்று பக்கத்துள்ளவாள் கேட்கவே அவர்களை நிறுத்திவிட்டு இவரைக்கேட்கவே இவரும், 'நான் கேட்ட ப்ரச்னத்துக்கு பெரிய பெருமாள்தான் உத்தரம் அளிக்கவேண்டும். இங்கு அருளிச் செய்ததால் இவ்விடம் பெரியபெருமாள் அவதாரமே' பெருமாளுக்கு தெண்டம் ஸமர்ப்பிக்க நியமமில்லாததால் நான் தெண்டம் ஸமர்ப்பித்தேன்' என்ருர். இதைக்கேட்டு ஸ்வாமியும்போர உகந்தருளியாச்சு. இதைத்தான் (ஸ்ரீரங்காதிபம் ஈளே ஸ்ரீவாஸ யோகி தேசிகாகாரம்) என இம்மஹாத்மாவை ஒரு மஹாத்மா சொன்னுர். இப்படி எல்லாராலும் 14 வயதுக்குள் சரணுகதி பண்ணிக்கொள்ள வேணுமென்று சொன்னதால் (மோக்ஷ தீ: ஞானம்) என்றபடி மோக்ஷம் அடையவேண்டிய ஞானமே ஞானம். வேதாந்த சாஸ்திர விமுகாளான யதிகளை (ஸாலாவிருகம்) சென்னுய்க்கு வெட்டிப் போட வேணுமென்று சொல்லியிருக்கிற படியால், யதிகள் வேதாந்தப்ராசாரியராய் இருக்கவேண்டுமென்று

http://acharya.org

சொல்லியிருப்பதற்குத் தக்கபடி ஸ்வாமி ஸதா க்ரந்தகாலக்ஷேப குதூஹலராய் இருந்ததால் அனுஷ்டானமும், பால்யத்திலேயே ஸன்னியாஸத்துக்கு ஆஸ்தை உண்டானதால் விஷய விரக்தியும், ஸன்னியாஸம் செய்துகொண்டு வெகுகாலம் வ்ரதோபவாஸாதி களால் தேஹ போஷணத்தைவிட்டு, க்ருசராயும் தமனி ஸந்தத மென்று நரம்பு தெரியும்படிக்கு இருந்தும் தேஜஸ்வியாக விளங்கின படியால், வைராக்யம், ஆக ஞானனுஷ்டான வைராக்ய சேவதி யென்றும் இப்படிப்பட்ட மஹான் கேவலம் உடையவரைப்போல் க்யாதி லாபபூஜா நிரபேக்ஷராய் ஆச்ரிதர்களுக்கு வாத்ஸல்யத்தால் சரணுகதியை ரங்கனுதன் ஸன்னிதியில் செய்துவைத்து உஜ்ஜீவிப் பித்தபடியால் (ச்ரிதவத்ஸலர்) என்னும் பெயர் உண்டாயிற்று. பிறகு தெற்கு, வடக்கு, மேற்கு, கிழக்கு நாலு திக்குகளிலுள்ள பெரியவர்கள் வந்து இவரைப் பார்த்து ஒருதரம் பூர்வயாத்ரை மறுதரம், உத்தரயாத்ரை இரண்டு தடவை எழுந்தருளி, பண்டிதர் கள், ஆஸ்திகர்கள், ஏழைகள் என்று விவாதமன்றி உடையவரைப் போல் எல்லாருக்கும் சரணுகதியையும் காலக்ஷேபத்தையும் செய் வித்துக் காப்பாற்றினர். இப்படிச் செய்தருளவே இவருக்கு ஆண்டவன் என்றும் ப்ரஸித்தி உண்டாயிற்று. ஆண்டவன் என்றால் ரக்ஷகன் என்று அர்த்தம். பெருமாளைக் கருணமூர்த்தி யான லக்ஷ்மியுடன், நம்மை ஞானமென்கிற லக்ஷ்மியுடன் கூட்டிக் கொண்டு ப்ரபத்தி மார்க்கத்தால் சேதனர்களை ஸம்ஸார ஸாகரத்தி லிருந்து உத்தரணம் பண்ணுவிக்கிறபடியால் ஆண்டவன் என்று எல்லா ஸம்ப்ரதாயஸ்தர்களாலும் கொண்டாடப்பட்டார். இவர் ஆதியில் நாதமுனிகளைப்போல் யோகாப்பியாசம் செய்துகொண்டு சித்த விருத்தியை நிரோதித்திருந்ததால், இவருக்கு ஒத்த அடி போன்ற ந்யாஸவித்யை அதிஸுலபமாக அனுஷ்டிக்கலாயிற்று. ஆதலால் இவர் ஒருவர் தான் ப்ரபத்திசாஸ்த்ரம் அறிவார் என்று எல்லாரும் ஆச்ரயித்தார்கள். இப்படி இவர் ஞானனுஷ்டான வைராக்யசாலியாய்இருந்துகொண்டு ஸம்ப்ரதாயப்ரவசனம் செய்து கொண்டிருக்கையில், இவருக்குப் பிறகு இந்த ஸம்ப்ரதாயத்தை நிர்வகிக்க இத்தனை ஆஸ்திக பண்டிதர்கள் இருந்தும் ஒருவரும் முன்வரவில்லை. இதே கவலையாக ஆண்டவன் எழுந்தருளியிருக் கையில் வடதேசத்தில் வெளி நல்லூரில் சடமர்ஷண கோத்ரத்தில் அவதரித்தவரும், சங்கபுரத்தார் என்று கொண்டாடப்பட்டவரும் மைஸூரில் தர்க்க மீமாம்ஸா சாஸ்த்ரம் க்ரஹித்துப் பண்டிதரென்று ப்ரக்யாதி பெற்றவரும் ஏற்கனவே வெகுகாலத்துக்குமுன்பு ஆண்ட வனிடம் க்ரந்த சதுஷ்டயமும் காலக்ஷேபம் செய்தும் சரணுகதியும்

http://acharya.org

செய்துகொண்டவருமான ராகவாச்சார் ஸ்வாமி என்பர் இவர் கவலைப் படுவதைக்கேட்டு உடனே போட்டது போட்டபடியே குடும்பத்தை விட்டுவிட்டு, நடந்து திருக்குடந்தை ராயம்பேட்டை மார்க்கமாய் ஸ்ரீரங்கம் எழுந்தருளி ஆண்டவனைத் தெண்டம் ஸமர்ப்பித்துக் கொண்டிருக்கையில் வெகுகாலம் கழித்து ஏள்ளிய தால் வெகுநாழி நிதானித்து இவரை இன்னாரென்று தெரிந்து கொண்டு, இவரை ஸம்ப்ரதாய நிர்வாஹகராக ஆக்கலாமென்று திருவுள்ளம் பற்றி, இவரை ஆசார ஆஹார அனுஷ்டானங்களைப் பலவித சோதனை செய்தும் ஒருநாள் இவரை மார்மட்டு அளவு ஜலத்தில் இறங்கிப் பத்து நிமிஷம் இருக்கச்செய்து, பிறகு கரை ஏறிப் பத்து வருஷம் இருக்கலாமென்று பரீக்ஷை செய்தும் இன்னும் இவருடைய மனஸ் ஸாவதான தைரியத்தை பரீக்ஷிக்க எண்ணி இந்த ஸ்தம்பத்துக்கு ப்ராணப்ரதிஷ்டை பண்ணும் என்று நியமிக்க, இவரும் அப்படியே செய்தருள உடனே ஸ்தம்பம் சலித்தது, மந்த்ரம் பலித்தது என்று ஆண்டவன் மாத்ரம் தெரிந்துகொண்டு சொல்லி விட்டு, மறுநாள் இவருக்கு ஸன்யாஸம் செய்வித்தருளினார். உடனே இவரை மாத்ரம் தனியாகப் பெருமாள் ஸேவிக்க அனுப்பி வைத்தார். இதற்கு முந்தியே பெரிய பெருமாள் ஸன்னிதியில் நல்ல தளிகை செய்வித்தருளி அமுசயப் பண்ணிவைத்தும் மாலை முதலாதிகளால் பெரிய பெருமாளை அலங்கரிப்பித்தும் ஏற்பாடு செய்து இருந்தபடியால் இவரும் பெருமாளையும் தாயாரையும் ஸேவித்துக்கொண்டு திரும்ப எழுந்தருளினார். பின்வருபவர்களை ப்ரதீக்ஷிக்கவில்லை. அவர்களும் ப்ரஸாத ஸ்வீகாராதிகள் செய்து கொண்டு பலர் சூழ்ந்து திருவோலக்கமாய் எழுந்தருளினார்கள். ஆண்டவனும் இந்த கோஷ்டியைக் கண்டு களிக்கத் திருவுள்ளம் பற்றி, மாப்பிள்ளையை எதிர்கொண்டு அழைக்கையில் மாமியார் பார்த்து மகிழ்வதுபோல் இந்த ஸம்ப்ரதாயத்தை நிர்வஹிக்க என்னால் நியமிக்கப்பட்ட இந்த ஸச்சிஷ்யரைப் பார்த்து ஸந்தோஷிக்கிறேன், என்று சொல்லி அசக்தமாகயிருந்ததால் தன்னைத் தூக்கிவிடச் செய்து, நின்றுகொண்டு பார்த்து மகிழ்ந்தருளினார். பிறகு தனக்கு ஏற்கனவே திருப்புக்குழிகளாக ஒரு கட்டடம் கட்டி ரங்கனுதனை அதில் எழுந்தருளப் பண்ணி ப்ரதிஷ்டை செய்யப்பட்ட மண்டபத்தில் இவரை இருக்கச்செய்து, நாலு க்ரந்தங்களையும் ஸேவித்து வரச்சொல்லி இவரை நியமித்தருளினார். இருவரும் சில பண்டித சிஷ்யர்களை அனுப்பி இவர் ஞானத்தைப் பரிசோதிக்க எண்ணி அவர் ஸேவிக்கும் க்ரந்தங்களில் ப்ரச்னம் செய்யச்சொல்ல அவர்கள் செய்யும் ப்ரச்ன பூர்வபக்ஷங்களுக்கு ஒன்றுக்கு மூன்றுக்

http://acharya.org

உத்தரம் ஸாதித்தருளினர். இதை அவர்களும் ஆண்டவனிடம் தெரிவிக்க ஆண்டவனும் மிகுந்த திருவுள்ளம் உகந்தருளி என்னை இனி (செம்பற்கழலடி செல்வா பலதேவா) என்று கரிக்காலனென்று சொல்லமாட்டார்களென்று அவர்களிடம் ஸாதிச்சாச்சு. இவரால் தான் ஆசார்ய சிஷ்ய பாவ க்ரமம் எப்படி என்பதும் பரமை காந்திகளின் ஜயந்தீ வ்ரதானுஷ்டானங்களும், வஸ்த்ர உபவீத புண்ட்ர ஸம்பாஷண முதலிய விலக்ஷணாசாரங்களும் (ஸ்காலித்யே சாஸிதாரம்) என்றபடி சிஷ்ய லக்ஷணம் முதலியது வெளியிடப்பட்டு அனுஷ்டிக்கும்படிக்கு செய்விக்கப்பட்டது. பரீக்ஷையில்லாமல் ஒருவருக்கும் சரணுகதியோ ஸம்ப்ரதாய உபதேசமோ செய்விக்கிற தில்லை. அனேகமாக ரங்கனுதன் ஸன்னிதியிலேயே எல்லா சரணுகதிகளும் செய்துவைத்தார். இப்படி மஹாமஹிமையுடன் எல்லா ஸம்ப்ரதாயஸ்தர்களாலும் கொண்டாடப்பட்டு ஐம்பது சாதுர்மாஸ்யும், எழுந்தருளியாயிருந்தாச்சு. இவருக்கு ஆண்டவன் என்ற பிரஸித்தமான திருநாமம். இவர் ஆசார்யரான விளக்குடி ஸ்வாமிக்கு பெரியாண்டவன் என்னும் திருநாமம். இன்னும் இவர் சிஷ்யரான பாதுகா ஸேவகராமானுஜஸ்வாமிக்கு சின்னுண்டவன் என்னும் ப்ரஸித்த நாமம். அவருக்கு சுபானு வருஷம் அற்பசி மாதம் ஸன்னியாஸம். ஆண்டவன் தைமாதம் திருநாட்டுக்கு எழுந்தருளி யது. அவருடைய கைங்கர்யத்தைச் செய்துவைத்து இன்னும் ஆண்டவன் ஆச்ரமத்திலேயே ஒரு வருஷம் ஏளியிருந்து மாஸ ஆராதனுதிகளையும் செய்துவைத்து, பூர்த்தியானதும் சின்னுண்ட வன் வடதேசயாத்ரையாய்ப் புறப்பட்டு எழுந்தருளி ராயம்பேட்டை, திருக்குடந்தை முதலிய இடங்களில் இருந்துகொண்டு அநேகர் களுக்கு காலக்ஷேபம் சரணுகதிகளைச் செய்வித்து தேரழுந்தூர்-திரு வஹீந்திரபுரம் வழியாகப் பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளி அவ் விடத்திலும் அதற்கு ஸமீபமுள்ள ஶ்ரீ கிராமங்களிலும் இருந்து கொண்டு பத்து வருஷம் வரையில் ஸமாச்ரயணம்-க்ரந்த கால க்ஷேபம்-சரணுகதிகளையும் செய்வித்துக்கொண்டு எழுந்தருளியிருந் தாயிற்று. அது சமயம் மன்ஸாலகட்டை ஸ்வாமி என்பவர் தன் ஸம்ப்ரதாயம் ஸ்தாபிக்க ஆந்நிதகம் செய்தருளினர். அது நித்ய க்ரந்த பாஞ்சராத்ரக்ரந்த திருக்குடந்தை தேசிகன் ஆந்நிகம் அஹோபில மடத்து ஆந்நிகம் இவைகளுக்கு விருத்தமாயுள்ளது; சென்னை நகரம் லைப்ரரியிலிருந்து பாஞ்சராத்ர ஸம்ஹிதாக்ரந்தங்களை ஓலைச் சுவடியிலுள்ளதை வரவழைத்து, நன்ருக கடாக்ஷித்து அந்த ஆந்நிகக்ரந்தத்தில் பூர்வார்த்தம் ஒருவிதமாயும் உத்தரார்த்தம் ஒரு விதமாயும் இருப்பதைச்சேர்த்துச் செய்தருளியிருப்பதையும் வாஸொ

http://acharya.org

பவீததாரணம் முதலியவைகளுக்குக் கண்டனமாயுள்ள ஸத்பத ரக்ஷை என்னும் க்ரந்தத்தையும் ஜன்மாஷ்டமி, வேதை நிர்ணய ஜயந்தீநிர்ணய தத்க்ருது ந்யாய உக்தி, ஆசார்ய நிஷ்டாவிசார ஆந்நிகவ்யாக்யாநம் முதலியதுகளைச் செய்து வைத்தாயிற்று. பிறகு ஸ்ரீரங்கம் எழுந்தருளி சிஷ்யாளைக்கொண்டு சின்னாச்ரமம் என்று சொல்லப்படும் இடத்தை ஏற்பாடு செய்துகொண்டு அதில் எழுந்தருளியிருந்துகொண்டு ப்ரவசனங்களைச் செய்துகொண்டு வந்தாயிற்று. அதுஸமயம்தான் தேரழுந்தூர் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் பாரத்வாஜ கோத்திரத்தில் ஈயுண்ணி வம்சத்தில் ஸ்ரீநிவாஸாச்சார்க்குக் குமாரராக அவதரித்தவரும், அதிபால்யத்திலேயே கர்ப்பாஷ்டமத்தில் உபநயனம் முதலியது செய்துவைத்து காவ்ய நாடகங்கள் வாசித்துக்கொண்டு அத்யயனம் செய்துகொண்டுமிருந்தவரும் ஸ்ரீரங்கத்தில் ஆண்டவன் என்று சொல்லப்படும் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் ஸன்னிதியில் தனக்கு பாவியான ஸம்ப்ரதாய ப்ரவர்த்தன ஆசார்யகத்வத்துக்கு அதிகாரமாயும் ஸ்ரீமதாண்டவனால் உகக்கப்பட்டதுமான பஞ்சஸம்ஸ்காரத்தைப் பெற்றவரும், 13 வயதுக்குள் விளக்குடி மாமா வெனப்படும் வேதாந்தாசார்யர் ஸ்வாமி ஸன்னிதியில் ப்ராமாண்யாந்த ந்யாய சாஸ்திரத்தை இரண்டு தடவை வாசித்தவரும், மைஸூர், புதுக்கோட்டை முதலிய ராஜ கிருஹங்களில் பரீக்ஷை கொடுத்து, முதலில் தேறி, உத்தம ஸம்பாவனை பெற்றவரும் புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் திவானாயிருந்த சேஷய்யா சாஸ்திரிகள் மூலமாய் ரூ. 500-ஐநூறு பாரிதோஷிகம் பெற்றவரும், புது அக்ரஹாரம் முதலிய இடங்களில் இருந்துகொண்டு மீமாம்ஸா, வ்யாகரண, ப்ரவீண குப்புஸாமி சாஸ்திரிகள், சுப்பராய ஆச்சாரியர் இவர்களிடம் மீமாம்ஸை, வ்யாகாரணம் முதலிய சாஸ்த்ரங்களை வாசித்துக்கொண்டும் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வரதாச்சார் ஸ்வாமி என்பவர் ஸ்ரீமத் சின்னாண்டவன் ஸன்னிதியில் ஆச்ரயித்தருளினார். ஆச்ரயித்து, கிரந்த காலக்ஷேபம் செய்து, சரணாகதியும் செய்துகொண்டார். அதுஸமயம் ஸ்வாமிக்குத் திருமேனி பாங்கு இல்லாமலிருந்தது. இந்த ஸம்ப்ரதாயத்துக்கு யாரை ஏற்படுத்துகிறது என்று சிந்தித்துக்கொண்டிருக்கையில் இவர் எழுந்திருந்து தெண்டம் ஸமர்ப்பித்து அடியேன் ஸித்தமாகயிருக்கிறேன். திருவுள்ளமிருந்தால் அனுக்ஹிரஹிக்க வேண்டுமென்றார். ஸ்வாமியும் கேட்டு ஸந்தோஷித்து நீர் எமக்கு மேல்பட்டே காலக்ஷேபம் சொல்லுவீர். அதிபால்யத்தில் வைராக்கியும் இருக்கிறது. சரி, ஆகட்டுமென்று ஸாதித்தாயிற்று. இதைக்கேட்டு ஸ்ரீரங்கத்திலுள்ள ஜனங்கள் என்ன அநியாயம்! சாந்தி செய்து

http://acharya.org


ஆறுமாதம் ஆகவில்லை. கிழவாளான தாய்தகப்பனர்கள்; ஸந்ததியு மில்லை. ஐவேஜியுமில்லை, இவரையும் பறக்கவிட்டு என்ன ஸந்நியாஸம் வேண்டி இருக்கிறது என்று வம்பளந்தார்கள். இதைக்கேட்டு ஆண்டவனும் ஸந்நியாசம் கொடுக்கவில்லை. ஆசார்ய பதத்துக்கு மட்டும் இவர் ஏற்றவரென்று திருவுள்ளம் பத்தியாயிற்று. அதனல் இவருக்கு மறுபடி ஆசார்ய ஸ்தானம் கிடைத்தது. சின்னண்டவன் திருநாட்டை அலங்கரித்து, கைங்கர்யம் பூர்த்தியானதும் தன்னுடைய ஊருக்குப் போகாமல் ஸ்ரீரங்கத்திலேயே எழுந்தருளியாயிருந்தது; இவர் தகப்பனர் தன் கிராமத்திலுள்ள பூமியை விற்றுக்கொண்டு வந்து ஸ்ரீரங்கத்தில் ஒரு திருமாளிகை வாங்கிக் கொண்டு ஏதோ நெல் வட்டிக்கும் கொஞ்சம் துகை கொடுத்தும் குடும்ப காலக்ஷேபம் செய்துகொண்டிருந்தார்; இவருக்கு குடும்பக் கவலையில்லாமல் காலையில் எழுந்திருந்ததும் வடதிருக்காவேரி ஆச்ரமத்துறையில் நீராடி, ஆச்ரமத்துக்கு எழுந்தருளி, கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, அர்ச்சாரூபியாய் பிருந்தாவனத்தில் எழுந்தருளியிருக்கும் ஆண்டவனுக்குத் தளிகை செய்து திருவாராதனம் செய்துவிட்டு, ஒரு மணி சுமாருக்குத் திருமாளிகைக்கு எழுந்தருளி ஆராதனை, வைச்வதேவம் செய்து அமுது செய்தருளுவார். பிறகு மூன்று மணி சுமாருக்கு மறுபடியும் ஆச்ரமத்துக்குப் போய் திரு வஷ்டாக்ஷர ஜபம், க்ரந்தாலோகனங்கள் அஸ்தமனம் வரையில் செய்துகொண்டு, ஸன்னிதியில் தீபம் ஸமர்ப்பித்து விட்டுத் திரும்பி எழுந்தருளி ரங்கனுதன் ஸன்னிதிக்கும் எழுந்தருளி, அர்த்த ஜாமத்திற்குப் பிறகு (தயிர் வழிக்கும்) கைங்கர்யத்தை, அதாவது கர்ப்ப க்ருஹத்தில் புஷ்பம், துளசி முதலிய குப்பை இல்லாமல் செய்வது) செய்துகொண்டும் எழுந்தருளியிருந்தார். இவருக்கு ஒரு குமாரத்தி ஜனித்தாள். அவள் அதி புத்திசாலியாய் வளர்ந்து வந்தாள். அவளுக்கு ஐந்து வயது முதல்கொண்டே பாதுகா ஸஹஸ்ரம், ஸ்தோத்திர பாடம், ரஹஸ்யம் முதலிய க்ரந்தங்களைச் சொல்லிக் கொடுத்துக்கொண்டு விரக்தராய் ஆசார்ய கைங்கர்ய பரராய் எழுந்தருளியிருக்கவே, இவர் குமாரத்தியையும் புத்தி, சீல லக்ஷணங்களைப் பார்த்து ஓர் உத்தியோகஸ்தர், ப்ரபுவானவர், தன் குமாரனுக்கு தன் க்ருஹத்திலேயே விவாஹம் செய்துகொண்டார். ஸ்வாமிக்கு அந்தக் கவலையும் நீங்கிவிட்டது. இப்படி 10, 15 வருஷம் ஆச்ரமத்துக்கு வேறு ஆசார்யாள் ஏற்படாமலிருந்தது. இதைப்போல் அஹோபில மடத்துக்கும் ஆஸ்தானத்துக்கு ஸ்வாமி இல்லாமல் இருந்தது. பிறகு கடைசியாக திருக் குடந்தை பெரிய தெரு சக்கரவர்த்தி ஸ்வாமி ஆஸ்தான நிர்வாஹத்

http://acharya.org

துக்காக சிஷ்யாளால் ஏற்படுத்தப்பட்டார். அவரும் திருக்குடந்தையில் எழுந்தருளியிருந்த பாலதன்வி வித்வன்மணி குரிச்சி ஸ்வாமி என்னும் ரங்காச்சார் ஸ்வாமியிடம் வாசித்தவரும், தனக்குப் பூர்வாச்ரமத்தில் ஸதீர்த்தரும், ஸ்ரீமதாண்டவனிடம் ஸங்கியாஸம் பெற்றிருந்த ப்ரம்மசாரி விரக்தாக்ரேஸராயிருந்த நாராயண ஸ்வாமியிடம் ஸங்கியாஸம் பெற்றிருந்த சதுச்சாஸ்தர வித்வான், கர்மானுஷ்டானபரராய் எழுந்தருளியிருந்த பௌண்டரீகபுரம் ஸ்வாமி என்னும் விளங்கப்படும் ஸ்ரீநிவாஸ மகாதேசிகனிடம் ப்ரேஷ மந்தர உபதேசம் பெற்று, ஸங்கியாஸியாகி அஹோபிலஆஸ்தானத்துக்கு நிர்வாஹகராக எழுந்தருளி, திருக்குடந்தை அழகிய சிங்கர் ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்திர மகாதேசிகன் என்ற திருநாமத்துடன் எழுந்தருளியிருந்தார். அவர் ஆஸ்தானத்துக்கு எழுந்தருளியதும் மேல் தேசத்தில் ஸோஸலே முதலிய கிராமங்களில் 20, 30 ஆயிரத்துக்குமேல் வரும்படி வராமலிருந்தது. இதை வசூலிக்க ஒத்தாசை செய்ய வேணுமென்று ஸோஸலே ஜோடிதார், ஸ்ரீரங்காச்சார், அழகிய சிங்கரால் கேட்கப்பட்டு அவர் அந்தத்துகை ஜாடாவும் வசூல் செய்து கொடுத்துவிட்டார். இதனுல் இருவருக்கும் பரிசயம் ஏற்பட்டிருந்தது. ஸ்ரீரங்காச்சார் என்பவர் பெரிய யஜமானர். இவர் சிறிய தகப்பனுர் குமாரர் ஸ்ரீநிவாஸாச்சார் சின்ன யஜமானர். இவர் இருவர்களும் ஆண்டவன் திருவடிகள். ஸம்ப்ரதாய விருத்திக்குப் பாடுபட்டு ஆசார்யத்துக்கு மனுஷாள் தேடிக் கொண்டிருக்கையில் திருக்குடந்தை ஸன்னிதித் தெருவில் ஆண்டவன் திருவடி பண்டிதர் சதாவதானி அனுஷ்டானபரர், பால்யத்திலேயே காளஹஸ்தி ராஜகிருஹத்தில் வித்வானுகயிருந்து கொண்டும் அஹோபிலம் திருப்பதி முதலிய மலேப்ராந்தங்களிலுள்ள காடுகளில் வஸித்துக்கொண்டு திருவஷ்டாக்ஷரம் ஹயக்ரீவ ஸுதர்சன ஸ்ரீந்ருஸிம்ம மந்த்ரங்களே கோடிக்கணக்காய் ஆவிருத்தி செய்து மந்த்ரஸித்தி பெற்றவர்.

அதனுல் இவர் ஆஸ்தானகுரு பல்லக்கில் எழுந்தருளும்போது, ஒரு பக்கம் ஆள்களாலும் ஒரு பக்கம் மந்த்ர தேவதைகளாலும் பல்லக்கு தூக்கப்படும். இதை கண்ணுற்ற காளஹஸ்தி ராஜவினுல் மஹாப்ரதிபத்தியுடன் ஸம்மானிக்கப்பட்டவர். இன்னும் மைஸுர் திருவனந்தபுரம், எட்டியாபுரம் ராஜகிருஹ ஜமீன் கிருஹங்களில் வித்வானுக யிருந்துகொண்டு சதாவதானம் ஸமஸ்யாபூரணம் ஆசுகவனம் இவைகளேச் செய்து அவர்களால் விசேஷமாக ஸம்மானிக்கப்பட்டவர். ஆங்காங்கு இவரிடம் த்வேஷத்தால்

http://acharya.org



ஸ்ரீமத் ஸ்ரீவேதாந்தராமாநுஜ மஹாதேசிகன்

ஸ்ரீமச்ஸ்ரீவாஸயோகீச்வர பதவிநதம் லப்த வேதாந்த யுக்மம், ஸ்ரீபாதுஸேவிராமாநுஜமுநிதிலகாத் தத்பதந்யஸ்த பாரம் । ஸ்ரீமச்ஸ்ரீவாஸராமாவரஜமுநிமணேர் லப்தமோக்ஷாச்ரமம்தம், ஸ்ரீமத்வேதாந்தராமாநுஜயதிந்ருபதிம் ஸம்ச்ரயே ஜ்ஞாநவார்த்திம் ॥

http://acharya.org

இவருக்குக் கெடுதல் செய்ய வந்த பண்டித துராபாஸர்களெல்லாரும் இவருடைய மந்த்ர சக்தியால் பரிபவிக்கப்பட்டும், திரஸ்கரிக்கப் பட்டும், பயப்படுத்தப்பட்டும் ஓடிவிட்டதை மஹாராஜா, ஜமீன்தார் கள் நேராகக் கண்டு பயபக்தியுடன் புகழப் பெற்றவர். 36 வய துக்கு மேல்தான் கிருஹஸ்தாச்ரமத்தை அங்கீகரித்தவர். ஸ்ரீரங்கம் ஆண்டவன் ஸன்னிதிக்குச் சரணாகதிக்கு எழுந்தருளும்போதே முன்போல் முன்பக்கம் ஆள்களாலும் பின்பக்கம் மந்த்ர தேவதை களாலும் தூக்கப்பட்ட பல்லக்கில் எழுந்தருளியதை ஸர்வஜ்ஞனா ஸ்ரீமதாண்டவன் தெரிந்துகொண்டு, இவருக்குச் சரணாகதி செய்து விட்டு, நீ முன்போல் வந்தபடி திரும்பப் போக முடியாது என்று நியமிக்க, இந்த ஸ்வாமியும் நானும் இன்று முதல் இந்த மந்த்ரோ பாஸநங்களை விட்டு விடுவதாகத் தீர்மானித்திருக்கிறேனென்று அவைகளை விட்டு விட்டார். பிறகு திருகுடந்தையில் எழுந்தருளி யிருந்துகொண்டு பஞ்ச கால பராயணராய் சாந்தராய் நீறுபூத்த நெருப்புப் போல் மஹா மஹிமை வாய்ந்தவர் இவர். ஸ—ரபுரம் ஸ்வாமியால் செய்யப்பட்ட சைவ வைஷ்ணவ ஸம்வாத ரூபமான வேதாந்த கௌஸ்துபம், நிக்ஷேபரக்ஷை, நிக்ஷேப சிந்தாமணி, ஸ்ரீதத்வஸித்தாஞ்சனம், ந்யாஸ வித்யா தர்ப்பணம் முதலிய ஸத்க்ரந் தங்களைத் தன் செலவில் அச்சிட்டு ஆஸ்திகர்களுக்கு இனமாய்க் கொடுத்திருந்தவர். ஒரு சமயம் தனக்குக் கண் தெரியாமலிருக்க கோமளாதண்டகம் என்னும் க்ரந்தம் செய்து தாயாரை ஸ்தோத்தரித்து அவள் அனுக்கிரஹத்தால் கண்பார்க்கும் திறமை யுள்ளவரானார். இவருக்குச் சதாவதானம் வரத வேதாந்தாச்சார் என்று திருநாமம். "இவரையும் இவர் மஹிமையும் கேள்விப்பட்டு இவரை ஸம்ப்ரதாயத்துக்கு ஆசார்யனாக்க நிர்தேசித்துக் கொண்டு இவரிடம் வந்து இவரைப் பிரார்த்தித்து இவருடைய அங்கீகாரத் தைத் தெரிந்து கொண்டு இவர்கள் ந்ருஸிம்மபுரம் சென்று அழகிய சிங்கரிடம் விஷயங்களைச் சொல்லி இவருக்கு ஆச்ரம ஸ்வீகாரம் செய்து வைக்க வேணுமென்று பிரார்த்தித்தார்கள். அழகிய சிங்கரும் இந்த ஸ்வாமியின் மஹிமை தெரிந்தவரானதாலும் இவர் களிடம் தாக்ஷிண்யத்தாலும் ஸத்ஸம்ப்ரதாய விருத்தி என்னும் நல்ல கார்யத்தாலும் திருவுள்ளங்கொண்டு அப்படியே இருக்கட்டுமென்று அங்கீகரித்தார். ஆனால் இந்த ஸம்ப்ரதாயத்தில் ஸன்னியாஸம் செய்துகொள்வதை உங்கள் ஸம்ப்ரதாயத்திலுள்ளவர்கள் அங்கீ கரிக்க வேணுமே, அவர்களில் சிலரையும் வரவழைத்து அவர்கள் முன்னிலையில் இந்தக் கார்யம்நடந்தால் நல்லதென்று நியமிக்கவே யஜமானர்களும் ஆண்டவன் திருவடிகளிலுள்ள ஆஸ்திக ப்ரபு



http://acharya.org

பரமைகாந்திகள், வித்வான்கள் இவர்கள் 300 பேருக்குத் தெரிவிக்க, அவர்களும் எழுந்தருள இந்த ஸ்வாமியை நரஸிம்மபுரத்துக்கு எழுந்தருளிக் கொண்டு போய் நல்ல செலவு செய்து ஜீவ சிராத்தங்கள் பண்ணி இவர்கள் முன்னிலேயில் ந்ருஸிம்மன் ஸன்னதியில் ப்ரேஷ மந்தர உபதேசம் செய்து ஸந்நியாஸாச்ரமம் கொடுத்தார். ஸ்வாமியும் எனக்கு முன்பு அழகிய சிங்கரிடமிருந்துதான் ந்ருஸிம்ம மந்த்ரம் கிடைத்தது. அதை ஆவிருத்தி செய்து கொண்டிருந்தேன். அதனுல் இந்த அனுக்ரஹம் பெறும்படி நேர்ந்ததென்று ஸந்தோஷமாய் ஸந்நியாஸம் செய்து கொண்டார். உடனே நரஸிம்மபுரத்திலுள்ள புஷ்கரிணியில் அவபிருத ஸ்நானம் செய்து ந்ருஸிம்மனே மங்களா சாஸனம் செய்துகொண்டு இறைவனே ஆண்டவன் திருவடிகளும் மடத்தைச் சேர்ந்தவர்களும் திருகுடந்தை ஸ்ரீ வைஷ்ணவர்களும் சூழக் கீழ்புரமுள்ள ஆதனூர் ஸ்ரீக்ராமத்துக்கு ஸ்வாமி எழுந்தருளவே, அன்று பௌர்ணமியானதால் ஸ்ரீ அழகிய சிங்கர் திருமுடி விளக்கம் செய்துகொண்டு நீராடி ஆச்ரமத்துக்கு எழுந்தருளுகையில் பார்த்துவிட்டு, முன்பு சின்னுண்டவன் ஆச்ரம ஸ்வீகாரம் செய்துகொண்டு ரங்கனுதனே மங்களா சாஸனம் செய்துவிட்டு, பல சிஷ்யர்கள் சூழ எழுந்தருளுவதைக் கண்டு, ஆண்டவன் ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன் உகந்தருளியதைப் போல் ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்திர மஹா தேசிகனென்னும் அழகிய சிங்கர் திருவுள்ளம் உகந்தருளினுர். ஆதனூர் சென்று ஸ்ரீரங்கனுதன் ஸன்னிதி வாசலில் எழுந்தருளியிருந்தார். இவருக்கு திருவஹிந்திரபுரம், ஆண்டவன் திருவடி, அஷ்டாவதானம் அனந்தாச்சார் ஸ்வாமி என்பவர் 'ஸ்ரீமத் ஸ்ரீவாஸ யோகீப்ரவர' என்று தனியன் செய்தருளினுர். அந்தத் தனியனேயும் குரு பரம்பரையும் சொல்லிக் கொண்டு திருகுடந்தை பாட்டராச்சார் தெரு, ஆண்டவன் திருவடி, மீமிசல் நரஸிம்மாச்சார், சின்னுண்டவன் திருவடி சித்தண்ணு தாத்தாச்சார் முதலிய எல்லா ஆண்டவன் திருவடிகளும் ப்ரபுக்கள் பரமை காந்திகள், சேவித்து, ஸ்ரீமதாண்டவன் ஸம்ப்ரதாய நிர்வாஹாசார்யராக எழுந்தருளப் பண்ணப்பட்டார். மத்தியானம் ஆதனூர் ரங்கனுதனே மங்களா சாஸனம் செய்துவிட்டு ஒரு திருமாளிகையில் ஸ்ரீ உ. வே. ரங்காச்சார் என்னும் சின்னுண்டவன் குமாரரிடமும் ரங்காச்சார் ஸ்வாமியிடமும் மாதூகரம் செய்து கொண்டார். மறு தினமே ஸ்ரீரங்கம் எழுந்தருள ஸ்ரீ அழகிய சிங்கரிடம் நியமனம் பெறுகையில் ஸ்ரீ அழகிய சிங்கர், இவர் வயோதிகர். நேத்ரா பாந்த்வமுள்ளவர். பக்கத்திலிருக்கும் வித்வானும் விரக்தரும் பரமை காந்தியுமான வரதாச்சார் ஸ்வாமிக்கு சீக்கிரமே ஸந்நியாசம்

http://acharya.org

செய்து வைத்து ஸம்ப்ரதாய ப்ரசவனத்துக்கு ஏற்பாடு செய்து கொள்ளுங்கள் என்று சொல்லி அவருக்கும் சால்வை வேஷ்டி முதலியவை ஸம்மானம் செய்து அனுக்ரஹித்தருளினர், ஸ்வாமி நியமனம் பெற்றுக்கொண்டு கபிஸ்தலம் ஆடுதுரைப் பெருமாள் கோவில் முதலிய இடங்களில் மங்களா சாஸனம் செய்து கொண்டு தந்மார்க்கமாக ஸ்ரீரங்கம் எழுந்தருளினர். அங்கு ஸ்ரீ வரதாச்சார் ஸ்வாமி ஆண்டவன் ஸந்நிதி திருவாராதனத்துடன் திருகுடந்தை ஆண்டவன் என்றும் இந்த ஸ்வாமியிடம் சிச்ருஷை மாதூகரம் ஸாதிப்பது முதலியது செய்துகொண்டு இவரிடம் காலக்ஷேபம் செய்துகொண்டும், இவர் நியமனத்தால் சிலருக்கு க்ரந்த காலக்ஷேபம் செய்வித்துக்கொண்டும் எழுந்தருளியிருந்தார். இவருக்கு ஆண்டவன் ஆத்ம குணங்களை சிக்ஷிப்பித்துக்கொண்டும் நல்வார்த்தை அருளிச் செய்துகொண்டும் ஏற்கெனவே பூர்வாச்ர மத்தில் தான் கோடிக்கணக்காய் ஜபித்து ஸித்தி பெற்றிருந்ததை யெல்லாம் (முன்பு ஸ்ரீராமனுக்கு விச்வாமித்திரர் தான் பெற்றிருந்த அஸ்த்ர மந்தரங்களை உபதேசித்து அர்ப்பணம் செய்ததுபோல்) இவருக்கு அர்ப்பணம் செய்து, உபய விபூதியும் உமக்கு இட்ட வழக் காய் இருக்க வேண்டுமென்று அனுக்ரஹித்தருளினர். இப்படி யிருக்கையில் ஆண்டவனுக்குத் திடீரென திருமேனிப் பாங்கு யில்லாமல் போகவே, அப்பொழுதுதான் இவருக்கு மாதூகரம் ஸாதித்துவிட்டு திருமாளிகைக்கு எழுந்தருளின தேரழுந்தூர்ஸ்வாமி கேட்டு, பட்டினியோடு அதிவேகமாக ஓடி வந்து மந்த்ரோபதேசம் பெற்று அப்பொழுதே துவங்கி ஜீவச்ராத்தம் செய்து மறுநாள் ஆச்ரம ஸ்வீகாரமும் செய்து கொண்டார். திருத்தாயார் திருத்தகப் பனர் பத்னி எல்லோரையும் உடனே வேறு ஊருக்குப் போகும்படி செய்து திருமாளிகையும் விற்று விட்டார். ஆண்டவன் மாசி மாதத்தில் பரமபதித்த கைங்கர்யத்தை கூடயிருந்து நடத்திவிட்டு உடனே ராயம்பேட்டை, வண்ணுற்றங்கரை மார்க்கமாய் மன்னர் கோவிலுக்கு எழுந்தருளி அங்கு ப்ரம்மோத்ஸவத்தில் ஸ்ரீராஜ கோபாலனை ஸேவித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கையில் அந்தப் பக்கம் விளக்குடி, சாக்கை, எம்பளச்சேரி, காடந்துருத்தி கரியா பட்டணம் இவைகளிலுள்ள எல்லா ஆண்டவன் திருவடிகளும் இவர் ஸாக்ஷாத் ஸ்வாமி, வழுத்தூர் ஸ்வாமி இவாள் போன்ற வைபவ முள்ளவர், வழுத்தூர் ஸ்வாமிக்குப் பூரட்டாதி திருநக்ஷத்திரம் வேதாந்த ராமானுஜஸ்வாமி என்னும் அந்த திருநாமமே இவருக்கும் ஏற்றது. இன்னும் இவர் உடையவரைப் போல் எல்லா தேசங்களுக் கும் எழுந்தருளி தேசிக ராமானுஜ ஸித்தாந்த தத்க்ரந்த ப்ரவசன

http://acharya.org

ப்ரகாசன ததுத்ஸவாதிகளைச் செய்தருளி வைக்கவும் பாக்கியம் அடையப் போகிருர். ஆதலால் இவருக்கு இந்தத் திருநாமம் ஏற்ற தென்று எல்லாரும் வியந்து கொண்டாடி, ஆச்சர்யமாகவே அவர் களுக்கு ஸமாச்ரயண சரணுகதிகளைச் செய்து வைத்தும் கோபாலன் உத்ஸவம் முடிந்ததும், உடனே வடுவூருக்கு எழுந்தருளி அங்கு நடந்த சக்கரவர்த்தித் திருமகன் ப்ரம்மோத்ஸவத்தில் பெருமாளை ஸேவித்துக்கொண்டும் அங்கு எழுந்தருளின சிஷ்யர்களுக்கும் ஸமாச்ரயாண சரணுகதிகளைச் செய்துகொண்டும் அவர்கள் ஸமர்ப் பித்த த்ரவ்யங்களைக்கொண்டு பெருமாள் தேசிகனுக்கு வெள்ளி வட்டில்கள், வெள்ளித் தாம்பாளங்கள், பெருமாளுக்குத் தங்க அரணுள், தங்கச் சங்கிலி, தங்கத்துரகல் இவைகளைப் பண்ணி ஸமர்ப்பித்து விட்டு அங்கு சில காலம் எழுந்தருளியிருந்து விட்டுப் பிறகு திருக்குடந்தை ஏளி, அங்கு ஒரு சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தைச் செய்துவிட்டு, சுமார் 10 மாத காலம் வரை இருந்துகொண்டு தேசிகன் உத்ஸவம், ஆராவமுதன் ப்ரம்மோத்ஸவம், ஸங்க்ர மணேத்ஸவம் இவைகளை எல்லாம் ஸேவித்துவிட்டு அங்குள்ளவர் களுக்குக் காலக்ஷேபம், சரணுகதி, ஸமாரச்ரயணம் முதலியவைகளை செய்து வைத்தும், வழுத்தூர் ஸ்வாமி அவதரித்த ஸ்ரீக்ராமத்துக்கு எழுந்தருளி அவரால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட பெருமாளை ஸேவித்துக்கொண்டும், அங்கு திருப்பதி ஸ்வாமியால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட நிகமாந்த மகாதேசிகனுக்கும் பாஷ்யகாரருக்கும் சாச்வதமாய் மாத வருஷ திருநக்ஷத்திரங்கள் நடத்தும்படி ஒரு சிஷ்யர் மூலமாகப் பூமியை ஏற்படுத்தியும் இன்னும் பூர்வாசார்யருக் கெல்லாம் ப்ரதி மாஸம் சாச்வதமாய் திருநக்ஷத்திரம் செய்யும்படி நியமித்தருளினுர். அந்தத் திருநக்ஷத்திரங்கள் இப்பொழுதும் நடந்து வருகிறது. அதனுல் அங்குள்ளவாள் விசேஷ வைபவமுள்ளவர் களாயிருக்கிருர்கள். அங்குள்ளவர்களுக்குக் காலக்ஷேபம் ஸமாச்ர யணம், சரணுகதிகள் செய்து வைத்து இரண்டு மாதம் எழுந்தருளி யிருந்து பிறகு ராயம்பேட்டைக்கு எழுந்தருளி இரண்டு மாதமும் திட்டாணி வட்டம் கிராமத்தில் இரண்டு மாதமும் காகைப்பட்டணம் ஸமீபமுள்ள பாப்பா கோவிலில் இரண்டு மாதமும் எழுந்தருளி யிருந்துகொண்டு அங்கு பெரியாண்டவன், சின்னுண்டவன் திருகுடந்தை ஆண்டவன் இவர்களின் கைங்கர்ய திருநக்ஷத்திரங் களை நாலாயிரத் திவ்ய ப்ரபந்த ஸேவை, அசீதி வேதபாராயணம் க்ரந்த பாராயணங்களுடன் விசேஷ ததீயாராதனத்துடனும் செய் தருளியாயிற்று. இதே மாதிரி ஆண்டவன் ஜீவதசை எழுந்தருளி யிருந்த வரையில் பூர்வாசார்யாளுடைய திருநக்ஷத்திர மஹோத்ஸ

http://acharya.org

வங்கள் நடத்தப்பட்டன. இதற்கிடையில் ஆண்டவன் திருகுடந்தையில் எழுந்தருளியிருக்கும் காலத்தில், மடத்து ஸ்வாமி திருநாட்டை அலங்கரிக்கவே அந்த ஸ்தானத்துக்கு ஸ்வாமியால் நியமித்தருளின மன்னார் கோவில் வ்யாகரணம் ரங்காச்சார் ஸ்வாமிக்கு, நரஸிம்மபுரத்துக்கு எழுந்தருளச் செய்து, ப்ரேஷ மந்தரம் உபதேசம் செய்து ஸந்நியாஸம் செய்து அருளி வைத்தார். அந்த ஸம்ப்ரதாயமும் ஓங்கி வளர்ந்து வருகிறது. இந்த ஆண்டவன் ஸம்ப்ரதாயமும் வளர்ந்து வருகிறது.

பிறகு பாப்பா கோவிலிலிருந்து நேராக ஸோஸலே யஜமானர்களால் பிரார்த்திக்கப்பட்டு மைஸூர் ஸமஸ்தானம் எழுந்தருளி ஸோஸலே கிராமத்தில் 4 மாத காலம் வரை எழுந்தருளியிருந்து அங்குள்ளவர்களுக்குக் காலக்ஷேப ஸமாச்ரயண, சரணாகதி இவைகளைச் செய்து வைத்து அவர்களைக் க்ருதார்த்தர்களாக்க அவ்விடமிருந்து நேராகத் திருப்பதி மார்க்கமாகப் பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளி அங்கும் அதன் பக்கத்திலுள்ள கிராமங்களிலும் இருந்துகொண்டிருந்து, அவர்களுக்கு ஸமாச்ரயணம் க்ரந்த சதுஷ்டய காலக்ஷேபம், சரணாகதி இவைகளைச் செய்துவைத்தும், இரண்டு வருஷம் தூப்புல் தேசிகனுக்கு சோளதேச சிஷ்யர்களிடமிருந்து பதினாயிரம் ரூபாய்க்குமேல் பணம் வசூலித்து வெகு விமர்சையாக தினந்தோறும் 500 தீவர்த்திகள், 500 மத்தாப்புக்கள் வாணங்கள் வேடிக்கைகள். மன்னார்கோவிலுள்ள சின்னப் பக்கிரி என்னும் நாதசுரக்காரரின் வாத்தியத்தோடும் தூப்புல் தேசிகன் ஸன்னிதியில் சுமார் 4,000 ஸ்வாமிகளுக்குக் குறையாமல் விசேஷ ததீயாராதனமும் நடத்தி உத்ஸவத்தை விசேஷமாகச் செய்வித்தருளினார். தேப்பெருமாள் ப்ரம்மோத்ஸவத்தில் ஒவ்வொரு நாளும் காலையிலும் ராத்திரியிலும் பெருமாள் வெளியே ஏளி, உள்ளே எழுந்தருளினதும் கற்கண்டு எலுமிச்சம்பழம் சேர்த்தபானகம் கண்டருளச் செய்தாகும். வரதன் ஸன்னிதியில் விசேஷ உத்ஸவ காலங்களிலும் திருநக்ஷத்திரம் சரணாகதி செய்விக்கும் காலங்களிலும் விசேஷ சித்ரான்னங்களும் தோசை, வடை, இட்டிலி இவைகளை யதேஷ்டமாகச் செய்வித்தருளி பாகவதாளுக்கு ஸமர்ப்பித் தாகும். தேப்பெருமாள் ஸன்னிதியில் சாலைக்கிணறு, வெள்ளைக்குளம் இவைகளிலிருந்து திருவாராதனத்துக்குத் திவ்ய பரிமள கந்தங்களுடன் இரண்டு காலமும் தீர்த்த கைங்கர்யமும் செய்வித்தாச்சுது. அதற்கு முதல் வைத்து அந்தக் கைங்கர்யமும் இன்னும் நடந்துவருகிறது. பிறகு திருவஹிந்திரபுரம் எழுந்தருளி அங்கு இரண்டு மூன்று வருஷ காலங்கள்

http://acharya.org

வரையில் எழுந்தருளியிருந்துகொண்டு அங்குள்ளவர்களுக்கு க்ரந்த சதுஷ்டய காலக்ஷேப ஸமாச்ரயண சரணாகதி இவைகளைச் செய்துவைத்துக் கொண்டும், தேசிகன் உத்ஸவத்தில் வேத பாராயண ஸ்வாமிகளுக்கு இரண்டு காலம் சந்தன புஷ்பமாலைகள் ஸமர்ப்பித்தும் தேசிகனுக்கு ப்ரதி வருஷமும் சாத்து முறையில் புஷ்பப் பல்லக்கு நடத்தியும் அந்தக் கைங்கர்யமும், நித்யானு ஸந்தான காலத்தில் தோசை, சுண்டல் கைங்கர்யம் செய்யும்படி நடத்தி அது நித்தியமாக நடத்த முதலும் செய்வித்தாகியிருக்கிறது. அங்குள்ள தேசிகன் திருமாளிகையில் ப்ரபல சிஷ்யரான கடம்பங் குடி ஸ்ரீநிவாஸய்யங்காரைக் கொண்டு ரூபாய் இரண்டாயிரத் துக்குமேல் ஜீர்ணோத்தாரணம் செய்துவைதாச்சு. அங்கிருந்து திருச் சித்திரக்கூட மார்க்கமாய் எழுந்தருளி நவதிருப்பதி முதலிய திவ்ய க்ஷேத்திரங்களை ஸேவித்துக்கொண்டு திருகுடந்தை மார்க்கமாக மன்னார்கோவில் எழுந்தருளி அங்கு 4, 5 வருஷங்கள் எழுந்தருளி யிருந்து கோபாலனுக்கு அநேக கைங்கர்யங்கள் செய்துகொண்டும் பூர்வாசார்யாள் திருநக்ஷத்திரங்களை விசேஷமாக வேதபாராயணாதி களுடன் கொண்டாடிக் கொண்டும் எழுந்தருளியாச்சு. இந்தப்படி வடுவூரிலும் இரண்டு வருஷகாலம் எழுந்தருளியாயிருந்தது. எந்த கைங்கர்யத்திலும் கைங்கர்ய பராளுக்கு ஸம்மானம் செய்வதில்லை. அவர்கள் ஆஸ்தையாகச் செய்வார்கள். வடுவூரிலிருந்து ஸ்ரீரங்கத் துக்கு எழுந்தருளியாச்சு. பெரியாச்ரமத்தில் எழுந்தருளியிருந்து கொண்டு 15-20 பையன்களுக்கும் சில பெரியவர்களுக்கும் பாதுகா ஸஹஸ்ரம், பஞ்சஸ்தவம், ரஹஸ்யாதி க்ரந்த சதுஷ்டயம், சத தூஷணி, தத்வமுத்தாகலாபம் இவைகளைக் காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டு, ஏற்கனவே திருக்குடந்தை ஆண்டவனால் ஆச்ரம நிர்வா ஹத்துக்காக வாங்கப்பட்டிருந்த கிராமத்திலிருந்து நெல் முதலியவை களைத் தருவித்து ஆச்ரம நிர்வாஹத்தை நடத்தியாச்சு. மறுபடி திரு வணையாத்திரையாகத் திருக்குடந்தைக்கு எழுந்தருளி கொஞ்ச கால மிருந்து காலக்ஷேபம் சரணாகதி முதலியது செய்வித்தும் அமுத னுக்கு இரண்டாயிரம் மூவாயிரம் செலவில் வெள்ளித் தோளிக்கினி யான் ஒன்றை ஏளப்பண்ணத் தண்டி, பட்டுக் கயிறு இவைகளை ஸமர்ப்பித்தும் ஒப்பிலியப்பன் ஸன்னிதியில் பெருமாளுக்கு ஸ்வர்ண கவசம் செய்து ஸமர்ப்பித்தும் வடுவூர் சக்ரவர்த்தித் திருமகனுக்கு வருஷா வருஷம்போல் கவசம் சாத்த சந்தனக்காப்பு, பட்டு ஸூத்ரம், முதலியவைகளை நேரே ஸமர்ப்பித்துவிட்டும் திருவணை, ஆழ்வார் திரு நகரி, நவதிருப்பதி, வானமாமலை முதலியவைகளுக்கு எழுந்தருளி ஆங்காங்கு கீழ்நத்தம், கோபால ஸமுத்ரம் முதலிய ஸ்ரீகிராமங்

http://acharya.org

களில் ஏளி அங்குள்ளவாளுக்குக் காலக்ஷேபம், ஸமாச்ரயணம் இவைகளைச் செய்து வைத்துக்கொண்டு புதுக்கோட்டை மார்க்கமாக ஸ்ரீரங்கம் எழுந்தருளியாயிற்று. புதுக்கோட்டையில் திவான் கிருஷ்ணமாச்சார் ஸ்வாமி என்பவர் ரொம்பவும் புத்திசாலி ரொம்பப் படித்தவர். அவ்வூரில் நடக்கும் வித்வத் ஸதஸ்ஸில் பல வித்வான்களிடம் பல மத சாஸ்த்ர விஷயங்கள் கேட்பவர். மத விஷயங்களில் அவர் கேட்கும் கேள்விக்கு ஸரஸமாயும் திருப்திகரமாயும் பதில் அருளிச் செய்தாகும். அவர் (ஏகமேவ அத்விதீயம்) ப்ரம்மம் ஒன்றே ஸத்யம். இரண்டு இல்லையே. நெஹநாநாஸ்தி. ஒரு கேள்வி கேட்டார். அதற்குக் கொஞ்ச காலம் தாமதித்து அவரைப் பார்த்து இங்கு ஒருவருமில்லையே என்று கேட்டாயிற்று. அவர் இல்லையென்றார். எல்லாரும் இருக்கிறுளே. இல்லை என்றால் எப்படி? நம்மடவாள் தவிர வேறு இல்லை என்றார். ப்ரம்மம், ஜீவன், ப்ரகிருதி எல்லாம் வெவ்வேறு. இவைகளெல்லாம் அவனுக்குச் சரீரம்! அவன் சரீர-சரீரி. வாக்சப்தத்தால் கொத்தமல்லிக் காரியையோ பால்காரனையோ அதுள்ளவனை, ஏ கொத்தமல்லி ஏ பால் என்று கூப்பிடுவதுபோல், ஏதத் விசிஷ்டம் ப்ர்ம்மம் என்று ஏற்படுகிறது. இதில்லாத அவ்விசிஷ்டமாய், அபின்னம் ஒரு வஸ்துவும் கிடையாது. அதனால் ஸர்வம் ப்ரம்மம் என்றும் ஸர்வ சப்தவாச்யனென்றும் சொல்லுகிறோமென்பதாக ஸாதித்தார். உடனேயே அவர் சரணாகதிக்குப் பிரார்த்தித்துச் சரணாகதி செய்து கொண்டார். இன்னொரு இடத்தில் ஒரு வக்கீல் எனக்கு அர்த்தம் தெரியாமல் ஸந்தியா வந்தனம் முதலியவற்றைச் செய்ய இஷ்டமில்லை. அதனால் நான் செய்கிறதில்லை யென்றார். அதற்கு நீ வக்கீலல்லவா? உன்னிடம் வரும் கக்ஷிக்காரர்களெல்லாம் படித்தவாளா? படிக்காத கீரல்காரப் பேர்வழிகள் எத்தனை பேர்? நீர் எழுதும் பிராதுக்கும் ஸ்டேட்மெண்டுக்கும் படித்து அர்த்தம் தெரிந்துகொள்ளாமலே உன்னை நம்பிக் கொடுக்கவில்லையா? நீயும் கோர்ட்டில் கொடுத்துத் தீர்ப்பு வாங்கிக் கொடுக்கவில்லையா என்று சொன்னதை அவர் கேட்டதும் ரொம்பவும் திருப்தரானார். இன்னொரு ஸமயம் இன்னொரு இடத்தில் ரிடையர்ட் டிப்டிகலெக்டர், வைஷ்ணவ மதம் ரொம்பக் குறுகியது. பூதஞ்சியுள்ளது. சிவன் கோவில் முதலிய இடங்களுக்கு போகக்கூடாது. மைத்த மதப் பிராமணாள் எங்களைத் தொடக்கூடாது. நாங்கள் சாப்பிடுவதைப் பார்க்கக்கூடாது. தொடக்கூடாது. வேதமிருக்கத் திருவாய் மொழி என்று ஒன்றைக் கோவில்களிலும் ஆத்திலும் சொல்லிக் கொண்டு புளியோதரை செய்து சாப்பிட்டுக்கொண்டு வரலக்ஷ்மி

http://acharya.org

விரதம் முதலிய விரதங்களை எல்லாம் விட்டு விட்டு ஏதோ ஏமாற்றி வருகிறார்கள் என்றார். அதற்கு அவரைப் பார்த்து, இந்த ஊரில் உனக்கு யாராவது ஸ்நேஹிதாள் இருக்கிறார்களா? நீர் அவர் வீட்டில் அவர் ஸம்ஸாரம் முதலியவர் இல்லாமல் தளிகைப் பண்ணிக் கொண்டு கஷ்டப்படும் சமயத்தில் உன் ஸம்ஸாரத்தை அவர் கிருஹத்துக்கு அனுப்பி வைப்பீரா? அவர் ஏழையாயிருந்து அவர் ஸம்ஸாரம் புடவை முதலியது இல்லாமலிருந்தால் நீர் வாங்கிக் கொடுப்பீரா? என்று கேட்டார். ஒருவருக்கு வாழ்க்கப்பட்டவள் இன்னொருவருக்கு எப்படிச் செய்யலாம்? புடவை முதலியதும் எப்படி வாங்கிக் கொடுக்கலாம்? அது நன்றாயிருக்காது, என்றார். அதற்கு இதுதான் எங்கள் மதம், எங்களுக்குத் தெய்வம் விஷ்ணு. அவர் எங்களுக்குப் புருஷர்போல், நாங்கள் அவருக்கு பத்னிகள் போல். நாங்கள் அவருக்குக் கார்யம் செய்யக் கடமைப் பட்டவாள் அவரும் நமக்கு எதையும் கொடுக்கக் கடமைப்பட்டவர். ஒருத்தன் பெண்டாட்டி ஒருத்தன் வீட்டுக்கே போகாததுபோலும், ஒருத்தனை ஒன்றும் கேட்காததுபோலும் நாங்கள் தேவதாந்தரம் கோவிலுக்குப் போகவும் மாட்டோம். ஒன்றும் கேட்கவும் மாட்டோம். உங்கள் மதம்-மைத்தவாள் மதம் மித்யை, எங்கள் மதம் ஸத்யம், பொய்யான வஸ்துவில் பழுதையைப் பார்த்துப் பாம்பு என்றோ, தண்ணீர்க் கோடோ என்று ப்ரமித்தாலும் பழுதை என்பது தானே ஸத்யம் மற்றது பொய்தானே. உங்களுக்கு எல்லாம் பொய்யானதால் எங்கே போனால் என்ன? யாரை எது கேட்டால் என்ன? நீங்களும் பொய், கேட்பதும் பொய், எங்களுக்கு அப்படியல்ல. எல்லாம் ஸத்யம். உங்களுக்கு அந்த ஸ்நேஹிதர் வந்தால் உம் ஸம்சாரம் உம் சொல்படி அவருக்கு எல்லாம் செய்வளல்லவா? அதுபோல் எங்களுக்கு விஹிதமான கர்மங்களில் தேவதாந்தரங்களை ஆராதிக்கச் சொல்லியிருந்தால், அவர்கள் பெயருள்ள மந்த்ரங்களைச் சொல்லி ஆராதிப்போம். நித்யம் ஸந்த்யாவந்தனத்தில் இதர தெய்வமான ஸூர்யனை உபஸ்தானம் செய்யவோ, வருண தேவதாகமான மந்த்ரத்தைச் சொல்லி ஜலத்தை ப்ரோக்ஷிக்கவோ அக்னி தேவதாகமான மந்த்ரத்தைச் சொல்லி ஔபாஸனம் செய்யவோ; இவைகளைச் செய்வோம். மற்றவாளிடம் கார்யம் ஒன்றுமில்லாததால் அவாளிடம் போகமாட்டோம். ருத்ரன், த்ரையம்பகன் என்று பேர்கள் இருக்கிறதே என்றால் பாதகமில்லை. எல்லா வஸ்துக்களும் எங்கள் தெய்வத்தின் ஸ்வரூபம் அணுக்கு அணுவாயும் பெரியதுக்கு பெரியதாயும் இருக்கின்றது. எல்லா சப்தங்களும் அவரையே சொல்லுகிறது. ராஜாவினுடைய

http://acharya.org



ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்

ஸ்ரீமத்வேதாந்தராமாநுஜ யதிந்ருபதேர்லப்த வேதாந்த யுக்மம், ஸ்ரீமத்தேவாதிநேது: சரணஸரஸிஜே தேந தத் தாத்ம பாரம் | ஸ்ரீமச்ஸ்ரீவாஸ யோகீச்வர மஹிதமஹாஸம் ப்ரதாயை கஷிஷ்டம், வந்தே ஸ்ரீவாஸ யோகீச்வரகுருமநகம் வத்ஸலம் பவ்யசீலம் ||

http://acharya.org

ப்ரீதிக்காக அவன் உடம்பில் மேலுள்ள சட்டைமேல் மாலையைப் போட்டால் அவன் ப்ரீதிக்குத் தானே இருக்கிறது. வ்யாஸர்—வால்மீகி முதலிய ராஜஸ தாமஸர்கள் போலில்லாமல், ஆழ்வார்கள் பகவானுடைய அம்ச பூதர்களாய் சுத்த ஸாத்வீகர்களாய் பகவத் குணங்களில் ஆழ்ந்து தங்கள் பக்திக்குப் போக்கு வீடாகப் பாடிய பாடல்களுக்கு பகவத் விஷயமென்று பெயர். வேதம்போல் நித்தியமாயும் ப்ரமாணுமாயுமுள்ளது. இன்னும் எங்கள் மதத்தில் பிராமணன் முதல் பறையன் வரையில் எங்கள் மதத்தைத் தெரிந்துகொண்டு, எங்கள் மதத்தில் சொல்லுகிறபடி பக்தியோ சரணுகதியோ செய்துகொண்டால், அவனுக்கும் இந்த தேஹமுடிவில் மோக்ஷமுண்டு. இந்த மதம் எல்லாருக்கும் பொதுவாயுள்ளது. எல்லாற்றிலும் அவன் இருப்பதால் எதுக்குத் தீங்கு செய்தாலும் அவனுக்குச் செய்ததாகும். ஆதலால் பூத தயை, அத்வேஷம் ஸௌஹார்தம் முதலியது சம்பாதிப்பது ஸுலபமாகும் என்று ஆண்டவன் அருளிச் செய்ய, அதைக் கேட்டு அவரும் ரொம்பவும் உங்கள் மதத்தில் அபசாரப்பட்டேன். க்ஷமிக்க வேணுமென்று சொன்னுர். இன்னும் ஆண்டவன் காலக்ஷேப காலங்களில் நான் க்ரந்த காலக்ஷேபம் சொல்லிவைக்க வரவில்லை. கூடிய வரையில் எல்லாரும் த்வேஷமில்லாமலும் பொய் சொல்லாமலும் கோபமில்லாமலும், கர்வமில்லாமலும் அஸூயை இல்லாமலும், தன்னுடைய தோஷங்களையே நினைத்துகொண்டும் சொல்லிக்கொண்டும், தான் செய்த பாபங்களை தெய்வத்தினிடம் சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொண்டுமிருந்தால் ரொம்பவும் க்ஷேமமுண்டு. இதுதான் நான் சொல்லும் காலக்ஷேபமென்று ஸாதித்தாகும். இன்னும் ஆண்டவன் தனக்குக் கொடுக்கும் திரவ்யங்களைத் தன்னிடம் காலக்ஷேபம் பண்ணுகிறவர்கள், ஸமாச்ரயணுதிகள் செய்துகொள்ள வருகிறவர்கள், இன்னும் ஏழை முதலிய பாகவதர்களுக்கும் சாதம்போடுதல் பகவத் கைங்கர்யம் முதலியது செய்கிறதுகளிலேயே உபயோகிப்பது வழக்கம்.

பிறகு, திருக்குடந்தை மார்க்கமாக பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளியாச்சு. அதுஸமயம் அங்கு பத்து வருஷ காலமாக மழையில்லாமலிருந்தது. லக்ஷ தீபமும் கோவிலாழ்வார் திருமஞ்சனமும் செய்தருளியாச்சு. யதேஷ்டமாய் மழை பெய்தது. "மழைச் சாமியார்" என்ற பெயரும் வந்தது. வடக்கே புஷ்கர க்ஷேத்திரத்திலிருக்கும் மங்களிராம் என்னும் ஷேட், தர்மப்பிரபு திவ்ய தேசங்களுக்குத் திருப்பணி கைங்கர்யம் செய்து வருகிருர் என்பது கேட்டு, இந்த வரதன் ஸன்னிதியிலும் கைங்கர்யம் செய்யவேணுமென்று

http://acharya.org

தெரிவிக்க, அவரும் சந்தோஷமாய் இரண்டு லக்ஷம் ரூபாய்வரையில் செலவு செய்து திருப்பணி வேலை செய்தும் ரொம்ப செலவுகளுடன் ஸம்ப்ரோக்ஷணமும் செய்தார்! அக்காலத்தில் ஆக்கூர் ரெங்காச்சார் என்னும் தார்க்கிர்-வித்வான் முன்பே இந்த ஆண்டவனிடம் கிரந்த சதுஷ்டயம் காலக்ஷேபம் செய்து சரணாகதியும் செய்துகொண்டு சோளங்கிபுரம் என்னும் ஊரில், பாகவத-பாரத ராமாயணப் ப்ரவசனங்கள் செய்து கொண்டிருந்தார். அவர் ஸர்வத்தையும் விட்டுவிட்டு, பெருமாள் கோவிலில் ஆண்டவனுடன் கூடவேயிருந்தார். அவருக்கு மறுபடி எல்லா க்ரந்தங்களையும் சிந்தனை செய்து வைத்து எல்லாவற்றையும் தமிழிலேயே சொல்லும்படி சொல்லிக் கொடுத்தும், விசேஷமாய்த் திருவாய்மொழி மூலம்-பகவத் விஷயம் இவைகளையும் பாடுபட்டுச் சொல்லிக் கொடுத்தாயிற்று. திடீரென்று திருமேனிக்கு நோவு ஏற்பட்டது. இந்த ரங்காச்சார் ஸ்வாமியை ஆசார்யராய் ஏற்படுத்த நியமித்தும் என்ன நியமித்தும் பயத்தால் அவர் சம்மதிக்கவில்லை; மற்ற ஒருவருக்கும் ஆசாரியகத்துக்கு வர சௌகர்யமில்லை. ஒருவரையும் ஏற்படுத்தாமலேயே பரமபதித்தாகிவிட்டது. அந்த கைங்கர்யம் பதினாயிரம் ரூபாய்க்குமேச் செலவு செய்து நடந்தது. ஏற்கனவேயே இந்த ஸம்ப்ரதாயத்தை புநருத்தாரணம் செய்த ஸோஸிலே சின்ன யஜமானர் ஸ்ரீநிவாஸா சாரியார் என்பவர் கைங்கர்யம் முடிந்த மறுநாளே ஆண்டவன் நியமனத்தைத் தட்டிவிட்டோமே என்ன ஆகுமோ என்று தவித்துக் கொண்டிருக்கும் இந்த ஆக்கூர் ஸ்வாமியை ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளப்பண்ணி வந்து, ஏற்கனவே நம்மாண்டவனிடம் ஸந்நியாசம் பெற்றுக்கொண்டிருந்த திருக்குடந்தை நாராயணஸ்வாமி என்பவரிடம் ஸந்நியாஸம் பண்ணிவைத்து, இந்த ஸம்ப்ரதாயத்துக்கு ஆசார்யனாக்கி ஒரு வருஷம் தானும் கூடயிருந்து பலர்களுடன் கிரந்த சதுஷ்யத்தையும் காலக்ஷேபம் செய்து வந்தார்; நம்மாண்டவனோடு ஸம்ப்ரதாயமே போய்விட்டதென்று எல்லாரும் தவித்துக் கொண்டிருக்கவே, விளக்கில் ஏற்றிய தீவர்த்திபோல் ஆசாரம், அனுஷ்டானம், தினம் ஆண்டவனைப்போல் ஆறு பாதுகாராதனம் முதலியவைகளைச் செய்துகொண்டு பகவத் பாகவத பக்தராயும் கம்பீர ஸேவையுள்ளவரும்-கம்பீரமாயும் ஸரஸமாயும் பாஷணத்துடன் எல்லோருக்கும் ஸரஸராயும் ஸுலபராயும் கர்வாஹங்கார மில்லாதவராயும் எழுந்தருளியிருக்கவே, எல்லாரும் ஸந்தோஷங் கொண்டு இவரை ஆச்ரயிக்கத் தொடங்கி அவரவர்கள் கிராமத்துக்கு ஒளவேணுமென்று பிரார்த்திக்கவே, சோள தேசத்தில் தில்லைஸ்தானம், ராயம்பேட்டை மார்க்கமாகத் திருகுடந்தைக்கு எழுந்தருளி

http://acharya.org

ஞர். அப்பொழுதுதான், இப்பொழுது ஏளியிருக்கும் ஆண்டவன், ஆண்டவனிடம் (ஏற்கனவே நம்மாண்டவனென்னும் சொல்லப்படும் தேரழுந்தூர் ஆண்டவனிடம்) ரஹஸ்ய-பகவத் விஷயம் தவிர, மற்ற க்ரந்தங்கள் காலக்ஷேபமாகாததால் அவைகளையெல்லாம் காலக்ஷேபம் செய்து அமுதன் ஸன்னிதியில் விசேஷ பாகவத ததீயாராதனங்களுடன் சரணாகதியும் செய்துகொண்டார். அங்கு இரண்டு வருஷகாலம் வரையில் எழுந்தருளியிருக்கையில் பெருமாள் கோவிலில் நம்மாண்டவனுக்கு பிருந்தாவனமும், அதற்கெதிரில் வேணுகோபாலன் ஸன்னிதியும் கட்டிவைத்து ஆண்டவனையும் பெருமாளையும் ப்ரதிஷ்டை செய்துவைத்து, பட்டணம் ராஜகோபாலாச்சார் எனப்படும் தேரழுந்தூர் ராஜகோபாலாச்சார், ஆண்டவன் திருவடியில் பரம பக்தராயும் பரம தார்மிகருமானவரால் பெருமாளுக்கும் ஆண்டவனுக்கும் நித்யாராதன திருநக்ஷத்திர தேசாந்திரி கட்டளை இவைகளுக்கு வேண்டிய த்ரவ்யங்களை மூலதனத்துடன் ஏற்படுத்திவிட்டு, தேரழுந்தூர், திருநகரி முதலிய திவ்ய க்ஷேத்திரங்களை மங்களாசாஸனம் செய்துகொண்டு, நாகைபட்டணம் ஸமீபமுள்ள பாப்பா கோவில், கீழையூர், சாக்கை, எம்பளச்சேரி, விளக்குடி, மன்னார் கோவில், வழுத்தூர், விண்ணாற்றங்கரை முதலிய இடங்களுக்கு எழுந்தருளியாகி, ஆங்காங்கு சாதுர் மாஸ்ய ஸங்கல்பம், ஆண்டவன் வர்ஷாராதன கைங்கர்யம் இவைகளை வெகு விமர்சையாக பாராயணாதிகளுடன் செய்வித்தருளியும் ஆச்ரிதாளுக்குக் காலக்ஷேப சரணாகதி ஸமாச்ரயணாதிகளையும் செய்து கொண்டிருந்தாயிற்று. விண்ணாற்றங்கரையில் ஒருவருஷம் எழுந்தருளியிருந்து அங்குள்ளவாளுக்கு, க்ரந்த சதுஷ்டய காலக்ஷேபம் செய்வித்தும் நீலமேகன் ஸன்னிதியில் த்வஜஸ்தம்பம் தாயாருக்கு ஸ்ரீ சடாரி முதலியதும் செய்வித்து, கோவிலடி என்னும் அப்பக்குடத்தானில் அவருக்கும் தாம்பரத்தினுல் த்வஜஸ்தம்பம் செய்தருளி ஸ்ரீரங்கம் எழுந்தருளியாயிற்று. இத்தனை இடங்களிலும் தனக்கு உபஹார த்ரவ்யமாய் வந்ததைக் கொண்டு ஏற்கனவே பெருமாள் கோவிலிலும் ஸ்ரீரங்கத்திலும் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட நம்மாண்டவன் ஸன்னிதிகளில் நித்யாராதன கைங்கர்யங்களுக்காக ஏற்கனவே திருக்குடந்தையிலுள்ள திருக்களாவூர் ரெங்காச்சாரியார் என்னும் பக்தர், பூமா என்னும் பக்தை இவர்களால் கீழவழுத்தூர் கிராமத்திலும் அதற்கு ஸமீபமுள்ள கிராமத்திலும் கிராமங்களிலும் வாங்கப்பட்டிருக்கும் பூமியோடு ஸ்ரீரங்கம் பெரியாச்ரமத்துக்கு ஸமீபமுள்ள இடத்திலும் அன்பில் கிராமத்திலும் பூமிகள் வாங்கி வைத்துவிட்டு, உடனே திருவணையாத்ரையாகப் புறப்பட்டு, புதுக்கோட்டை

http://acharya.org

வழியாக ஸேதுவுக்கு எழுந்தருளி அங்கிருந்து நவதிருப்பதிகளிலும் பெருமாளை மங்களாசாஸனம் செய்து கொண்டும் மறுபடி ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளி சொல்பகாலம் அங்கிருந்துவிட்டு மறுபடி பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளி அங்கு நம்மாண்டவர் காலத்தில் கட்டப்பட்டிருக்கின்ற பாதுகாச்ரமத்தில் விசேஷ திருமண்டபாதி கைங்கர்யங்களைச் செய்வித்து, திருவாராதனத்துக்கு வேண்டிய த்ரவ்யங்களுக்காக மூலதனமாய் பூமிகளை ஏற்படுத்திவிட்டு, திருமலை யாத்திரை ஏறி, அங்கு வ்யாபாகளான தம் சிஷ்யர்களால் செய்விக்கப்பட்ட விசேஷ குடை—சாதரா முதலிய மர்யாதைகளைப் பெற்றுக் கொண்டும் அங்கிருந்து மைஸூர்பக்கம் எழுந்தருளி ஸோஸலே-திருநாராயணபுரம் முதலிய இடங்களிலிருந்து கொண்டு தினம் 100-50 பேருக்குக் குறையாமல் சிஷ்யாளுக்கு ஸமாச்ரயணாதிகளைச் செய்வித்து அங்கு கொஞ்சகாலம் எழுந்தருளியிருந்துவிட்டு, திரும்பி ஸ்ரீவில்லிபுத்தூர் மதுரை, அரியக்குடி, காரைக்குடி முதலிய இடங்களுக்கு ஏளி அங்குள்ளவாளுக்கு ஸமாச்ரயண சரணாகதிகளை செய்துவிட்டு மறுபடி ஸ்ரீரங்கம் எழுந்தருளி விசேஷ காலக்ஷேபாதிகளை ஸாதித்துக் கொண்டிருந்தார்.

திடீரென்று திருமேனி பாங்கில்லாமல் போகவே கூடயிருந்த சதுச்சாஸ்திர வித்வானும் பஞ்சகால பராயணரும் சாந்தருமான தெம்பரை ஸ்வாமிக்கும் ஸந்நியாஸம் ஸாதித்தருளி, அவருக்கு ரங்கநாத மஹாதேசிகன் என்று திருநாமம் சாத்தி ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவன் பரமபதித்தாயிற்று. விசேஷ அன்னதானமும் வஸ்திர தானமும் நடந்தது. ஸ்ரீரங்கநாத மஹாதேசிகன் விரக்தராயும் சாந்தராயும் ஏழு பாதுகைகளையையும் ஆராதித்துத் கொண்டு வந்தார்.

வார்த்தக்யத்தாலும் திருமேனி அசக்தியாலும் வெளியே ஸஞ்சாரம் ஏளாமல் ஸ்ரீரங்கத்திலேயே ஏளியிருந்து யதிதர்ம ஸமுச்சயாதிகளில் சொன்னபடி நித்யாநுஷ்டானம் பண்ணிக்கொண்டு காலக்ஷேபங்கள் ஸாதித்துக் கொண்டிருந்தபடி. தெம்பரை ஆண்டவன் ஞானத்தாலும் அநுஷ்டானத்தாலும் வைராக்யத்தாலும் சாந்தியாதி குணங்களாலும் திருமேனியின் ஸந்நிவேசத்தாலும் பெரியாண்டவன் போலேயே எழுந்தருளியிருந்தபடி. சின்னாச்ரமத்தில் பிருந்தாவனம் கட்டப்பட்டது. ஸ்ரீ கண்ணன் ஸ்வாமி பெரியாண்டவன் 160 ஆம் திருநக்ஷத்திரத்தையும் அஷ்டகிரஹ சாந்தியையும் உபய வேதபடனத்துடன் ஸத்ஸங்க முதலானவைகளை பிரபலமாக நடத்தி வைத்து, ஸ்ரீமதாண்டவன் மனோரதத்தைப்

http://acharya.org



ஸ்ரீமத் ஸ்ரீரங்கனாத மஹாதேசிகன்

ஸ்ரீமத்வேதவதம்ஸ லக்ஷ்மணமுநே: ப்ராப்தாகமாந்தத்வயம்,
தேசஸ்ரீ ரகுபுங்கவாங்க்ரியுகளே ந்யஸ்தாத்ம ரக்ஷாபரம் ।

ஸ்ரீமத் ஸ்ரீநிதி யோகிவர்ய கருணா லப்தாப்ஜ சக்ராங்கனம்,
வந்தே சாந்தி விரக்தி பூர்ணமநகம் ஸ்ரீரங்கநாதம்குரும் ॥

http://acharya.org



ஸ்ரீமத் ஸ்ரீவேதாந்தராமாநுஜ மஹாதேசிகன்

ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகாய நம:

ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ முனிகருணா லப்த வேதாந்தயுக்மம்
ஸ்ரீமத் ஸ்ரீவாஸயோகீசுவர குருபதயோரர்பித ஸ்வாத்மபாரம் |
ஸ்ரீமத் ஸ்ரீரங்கநாதாஹ்வய முனிக்ருபயா ப்ராப்தமோக்ஷாச்ரமம்தம்
ஸ்ரீமத் வேதாந்தராமாநுஜ முனிமபரம் ஸம்ச்ரயே தேசிகேந்த்ரம் ||

http://acharya.org

பூர்த்தி செய்து, ஆசிரம் நிர்வாஹங்களைச் சரிவரப் பார்க்கும்படி நியமனத்ததின் பேரில் 2, 3 வருஷம் பார்த்துச் சீர்திருத்தியாயிற்று.

தெம்பரை ஆண்டவன் பதினைந்து சாதுர்மாஸ்யம் ஏளியிருந்த படி. பிறகு திருமேனி அசக்தமாகவே "சோதிதேக்வாபி பாத்ரே ப்ரதிசதி நிரபாயம் ஸம்ப்ரதாயப்ரதீபம்" என்கிறபடி ஸ்ரீ கண்ணன் ஸ்வாமி, மைஸூர் வித்வான் கோபாலாசார்யர், மன்னார்குடி கனபாடி வித்வான் நரஸிம்ஹாச்சார்யர் இம்மூவருக்கும் ப்ரேஷமந்த்ரம் உபதேசித்து மோக்ஷாச்ரம ஆஹ்நிகாநுஷ்டானங்களையும் உபதேசித்தாச்சுது.

பராபவ ஸு பங்குனி மாதம் தெம்பரை ஆண்டவனுக்கு திருமேனி ரொம்ப அசக்தம் ஏற்பட்டு அநேக தந்தி, தபால், ட்ரங்கு கால்கள் மூலம் ஸ்ரீ கண்ணன் ஸ்வாமிக்குத் தெரிவித்து, ஸ்வாமி ஏள்ளி தெம்பரை ஆண்டவன் ரங்கநாத மஹாதேசிகனுடைய பரிபூர்ண கடாக்ஷம் பெற்று, நியமனத்தைச் சிரஸாவஹித்து வடதேசம், தென்தேசம், மேலதேசம் முதலான இடங்களிலுள்ள. பண்டித பாமர, வைதிக லௌகிக ப்ரபுக்களான சிஷ்ய கோஷ்டி களுடைய பிரார்த்தனைக்கு இணங்கி, சுபகிருது வருஷம் பங்குனி மாதம் 26 ஆம் தேதி ஸ்ரீமத் புஷ்ய நக்ஷத்திரம் கூடிய சுக்லத்துவாதசி சுப நன்னாளில் சாஸ்திர விதிப்படி மந்த்ரகலாபத்துடன் ஸந்நி யாஸத்தை ஸ்வீகரித்து, நம்மாண்டவனுடைய அபராவதாரம் வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் என்ற திருநாமத்துடன் காவேரி ஏள்ளி, அவப்ருதஸ்நானம் செய்து ஆசிரமம் ஏள்ளி, பகவதா ராதனம், பாதுகாராதனம் யதாக்ரமம் நடத்தியாச்சுது.

ஆச்ரம ஸ்வீகாரம் பண்ணியதும் ஸ்ரீமதாண்டவன் செய்த மஹோபகாரங்களுள் ஒன்று, பூர்வாச்ரமத்தில் நடத்திச் சில காலம் நின்றிருந்த 'ஸ்ரீரங்கநாத பாதுகா' என்ற பத்திரிகையைத் தொடர்ந்து நடத்த ஏற்பாடு செய்ததாகும். இதன் மூலம் நம் ஸித்தாந்த விஷயங்களும், கிரந்தங்களும் பலரும் தெரிந்துகொள்ள வாய்ப்பு உண்டாகியது. மேலும், "நாதனை நரசிங்கனை நவின்றேற்று வார் உழக்கிய பாததூளி படுதலால் பாக்கியம் செய்ததே" என்று ஆழ்வாரால் போற்றப்படும் திருப்பதிகளுக்கெல்லாம் பாதயாத்திரை யாகவே கிராமைகராத்ரமாக ஏள்ளி எம்பெருமான்களை எல்லாம் மங்களாசாசனம் பண்ணிக்கொண்டு வருகை.

பிரகிருதம் ஆண்டவனுக்கு பூர்வாசார்யாளின் ஜாயமான கடாக்ஷமுண்டென்பது பிரசித்தம்

http://acharya.org

1907 வருஷம் பராபவ ஸூ மாசிமாதம் புஷ்ய நக்ஷத்ரத்தில் ஸ்ரீமத் பெரியாண்டவன் திருநக்ஷத்ரத்தை காடங்தேத்தி ஆண்டவன் கவி குஞ்ஜரம் வித்வங் மணி இத்யாதி பிருதாலங்க்ருத ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகன் ஸ்ரீரங்கத்தில் விசேஷமாக உபயவேதாந்த பாராயணாதிகளுடன் நடத்தி வைத்தாச்சுது. அந்த மஹோத்ஸவத்திற்கு திருக்குடந்தை பத்மநாபாசாரியார் ஸ்வாமியும் தேரழுந்தூர் ஆண்டவன் பூர்வாசிரமத்தில் ஈயுண்ணி, வரதாச்சாரியார் என்கிற திருநாமத்துடன் பிரஸித்தராயிருந்த ஸ்வாமியும் எழுந்தருளியிருந்தபடி, ஸ்ரீமத் புஷ்ய திருநக்ஷத்ர மஹோத்ஸவம் பூர்த்தியானதும் ஒருநாள் சின்னுச்ரமத்தில் திருக்குடந்தை ஆண்டவன் திருவடிவாரத்தில் பரிசர்யைகள் செய்துவிட்டு ஸ்வாமி நித்ரைக்கு எழுந்தருளியதும் இரண்டு ஸ்வாமிகளும் நித்ரை செய்தார்கள்.

அன்றிரவு பின்மாலை 4 மணிக்கு ஹயக்ரீவ உபாஸகரான ஸ்ரீமதாண்டவன் எழுந்திருந்து அந்த இரண்டு ஸ்வாமிகளையும் எழுப்பி பத்மநாபாசாரியாரைப் பார்த்து உமக்கு நாளது புஷ்ய நக்ஷத்ரத்தில் ஒரு புத்ரன் பிறப்பான் என்றும், தேரழுந்தூர் ஆண்டவனை (பூர்வாசிரமத்தில்) பார்த்து உமக்கு ஹஸ்த நக்ஷத்திரத்தில் ஒரு புத்ரன் பிறப்பான் என்றும் ஸ்ரீ ஹயக்ரீவன் ஸ்வப்நத்தில் நியமித்தபடி என்று சொல்லி, பின்பும் தூங்க வேண்டாம் ஸ்வப்ந பலம் போய்விடும் என்று இருவரையும் அழைத்துக் கொண்டு வடதிருக் காவேரிக்கு நீராட்டத்திற்கு எழுந்தருளியாயிற்று. அது ஸமயம் இரண்டு ஸ்வாமிகளுடைய தேவிகளும் அந்தர்வத்னியாயிருந்தார்கள். ஆசார்யாநுக்ரஹத்தின் பேரில் இரண்டு ஸ்வாமிகளுக்கும் ஸ்ரீமதாண்டவன் நியமித்த நக்ஷத்ரங்களிலேயே புத்ரர்கள் பிறந்தார்கள். தேரழுந்தூர் ஆண்டவன் பூர்வாசிரமத்தில் ஸ்ரீரங்கத்திலேயே இருந்து பிருந்தாவன ஆராதனங்கள் செய்துகொண்டிருந்து பின்பு ஸ்வாமி நியமனத்தினால் துரீயாசிரம ஸ்வீகாரம் செய்துகொண்டு ஸ்ரீ வேதாந்த ராமானுஜன் என்கிற திருநாமம் சூடி திவ்ய தேச யாத்ரை செய்து உபய வேதாந்த காலக்ஷேபங்கள் ஸச்சிஷ்யர்களுக்கு ப்ரஸாதித்துக்கொண்டு திவ்ய தேசத் தெம்பெருமான்களுக்கு பலவித கைங்கர்யங்கள் செய்து ஸ்ரீ காஞ்சியிலே பரமபதம் எழுந்தருளியாயிற்று.

திருக்குடந்தை ஸ்ரீ பத்மநாபாச்சாரியார் ஸ்வாமியும் ஆண்டவன் நியமனப்படி பங்குனி புஷ்யத்தில் பிறந்த புத்ரனுக்கு யதாகாலத்தில் ஜாதேஷ்டி, நாமகரணம், அன்னபிராசன, சௌள உபநயநாதி

http://acharya.org

ஸம்ஸ்காரங்களைச் செய்து வைத்து 'காண்டானுக்ரஹமாக' வேதத்தில் உபயுக்தமான சில பாகங்களையும் திவ்யபிரபந்தம் நாலாயிரத்தையும் அத்யயனம் செய்து வைத்து, காவ்யங்களையும் சொல்லி வைத்து ஸ்ரீ ஆராவமுதன் ஸன்னிதியில் தனக்குண்டான அத்யாபக கைங்கர்யத்திலும் ஈடுபடும்படி செய்வித்தார்.

ஸ்ரீ கண்ணன் ஸ்வாமியும் 12 வயதிற்குள் திவ்யபிரபந்தம் பூர்ணமாக அத்யயனம் செய்து விட்டபடியால், பிறகு ந்யாயம் வ்யாகரணம் வாசித்து சிரோமணி பரீக்ஷையில் தேறியவளவில் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி தேரழுந்தூர் ஆண்டவன் திருக்குடந்தையில் காவிரிக் கரையில் பொற்றாமரைக் குளம் வடகரை ரகுநாதாசார் ஸ்வாமியால் அமைக்கப்பட்ட ஆசிரமத்தில் எளியிருக்கும் போது பத்மநாபாச் சார் ஸ்வாமி தன் குமாரனுக்கும் அத்யாத்மக் ரந்தங்களை அநுக்ரஹிக்க வேண்டும் என்று பிரார்த்திக்க ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவனும் அங்கீகரிக்க அந்த ஸன்னிதியில் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸாரம், பகவத் விஷயம் ஸ்ரீ கீதாபாஷ்யம் இவைகளை அறிகரித்தார். பிறகு ஸ்வாமியின் ஞான ஸம்பத்தையும் அர்த்த ஸம்பத்தையும் ஆபிஜாத்யத்தையும் பார்த்து ஸந்துஷ்டரான நெடுந்தெரு திருப்படி கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் என்கிற ஆட்யர் ஸ்ரீதனங்களுடன் தனது மூன்றுவது குமாரத்தியையும் கன்னிகா தானம் செய்து கொடுத்தார். பிறகு க்ருஹஸ்த தர்மாநுஷ்டானத்துடன் பித்ருசுச்ரூஷைகள் செய்து கொண்டு ஸ்ரீ ஆராவமுதாழ்வான் ஸன்னிதியில் அருளிச் செயல் விண்ணப்பம் பண்ணுகிற கைங்கர்யங்களையும் செய்து கொண்டிருக்கும்கால் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஆக்கூர் ஆண்டவன் திருக்குடந்தைக்கு எழுந்தருள அந்த ஸன்னிதியில் ஸ்ரீ பாஷ்யம் அதிகரண ஸாராவளி சத தூஷணி முதலிய கிரந்தங்களை அதிகரித்து ஸ்ரீ ஆராவமுதாழ்வான் திருவடிகளில் ஆசார்யனால் ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணி வைக்கப்பட்டார். புதுக்கோட்டை திருவாங்கூர் முதலிய ஸமஸ்தானங்களுக்குப் போய் வித்வத் பரீக்ஷை கொடுத்து பகுமானங்கள் பெற்று, திருக்குடந்தையில் பராங்குச பக்தஸபை என்று ஒரு சபை ஏற்படுத்தி தனது நண்பரான ஸ்ரீஉபவே இளைய வில்லி ஸ்ரீநிவாஸாச்சார்யாரின் ப்ரதிதினம் ஸாயங்காலத்தில் உபந்யாஸம் நடத்தி வந்தார்.

சோபகிருது வருஷம் வைகாசி மாதம் 6உ ஸஞ்சாரம் கிளம்பி அனேக சிஷ்யர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள் புடைசூழ பெரிய பெருமாள் ஸ்ரீரங்க நாச்சியார், நாதமுனிகள், நிகமாந்த மஹா தேசிகன் பெரியாண்டவன் முதலான ஆசாரியாள் நியமனம்

http://acharya.org

பெற்று, ஸகல சுப மங்களத்துக்கும் ஹேதுவான கிழக்கு திக்கை நோக்கி, அன்பில் அப்பகுடத்தான்-முதலான எம்பெருமான்களை மங்களா சாஸனம் செய்து முதல் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை சக்ரவர்த்தி திருமகள் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் வடுவூர் திவ்ய தேசத்தில் நடந்தேறியது.

திருக்குடந்தை தேசிகன் என்று பிரஸித்தி பெற்ற கோபாலார்ய மஹா தேசிகன் ஆராதித்த அர்ச்சாமூர்த்தி ருக்மணி ஸத்ய பாமா ஸமேத வேணுகோபாலஸ்வாமியை அந்த திருவம்சத்தார்கள் ஆண்டவனிடம் கொண்டு ஸமர்ப்பித்து ஆச்ரமத்தில் ஆராதனத்தில் இருக்க வேணுமென்று பிரார்த்தனையின் பேரில், கிரஹஸ்தர்களைக் கொண்டு திருவாராதனம் நடக்கிறது. பிறகு ராஜமன்னார்குடி ஏளி, விசேஷ வரவேற்புடன் ராஜமன்னாரை மங்களா சாஸனம் செய்து, ஒவ்வொரு தேசத்தெம்பெருமான் களுக்கும் திருப்பரிவட்டங்கள் ஸமர்ப்பித்து, அந்தந்த எம்பெருமான்களிடத்தில் ஈடுபட்ட ஆழ்வார் ஸூக்திகளை அனுஸந்தானம் செய்து உபன்யாஸம் செய்த மஹிமை இந்த ஆண்டவனுக்கே பொருத்தம்.

ஒவ்வொரு திவ்யதேசங்களிலும் சத்ரசாமர மேளத்துடன் தேவஸ்தானஸகல பரிஜனங்களுடன் அந்தந்த திவ்ய தேச கிரமப்படி தேவஸ்தான அதிகாரிகள் மரியாதை நடத்தினார்கள்.

ஸ்ரீமதாண்டவனும் ஸ்ரீரங்கத்திலிருந்து புறப்பட்டது முதல், நேரம் மாலை 4 மணிக்குக் காவேரி முதலான புண்ய நதிகளில் தீர்த்தமாடி ஸந்தியாவந்தனாதி அனுஷ்டானம் காலத்தில் பகவதாராதனம் பாதுகாராதனம் செய்து, கோஷ்டியில் உபய வேத பாராயணம் சாற்றுமுறை செய்து, தீர்த்தம் பழங்கள் விநியோகம் ஆன உடனே ஸ்ரீ பாஷ்யகாரர் பங்குனி உத்திரதிரு நன்னாளில் ஸ்ரீரங்க நாச்சியார் அழகிய மணவாளன் முன்னிலையில் ஸாதித்த கத்யத்ரயத்தையும் எம்பெருமானார் பிரிய சிஷ்யரான கூரத்தாழ்வான் ஸாதித்த பஞ்ச ஸ்தவத்தையும், ஸ்வாமி நிகமாந்த மஹா தேசிகன் ஸாதித்ததும் ஆண்டவன் ஆச்ரமத்தில் வெகுகாலமாக நிரந்தரானுஸந்தானம் பண்ணுகிற பாதுகா ஸஹஸ்ரத்தையும் பாராயணம் செய்துவிட்டு காலக்ஷேபம் சாதித்தாகிறது. காலை 8 மணி முதல் 11-மணி வரையில் அந்தந்த அதிகாரிகளுக்குத் தகுந்தபடி ஸ்ரீபாஷ்யம், ரஹஸ்யத்ரயஸாரம், பகவத் விஷயம் ஸாதித்துவிட்டு, மாத்தியான்னிகஸ்நானம் செய்து 1-மணிக்கு மாதூகரத்துக்கு ஏள்ளி, அதிக சீக்கிரத்தில் உசிதமாக மாதூகரம் நடந்த உடனே 3-மணிக்கு மறுபடியும் காலக்ஷேபம்—ராத்திரி உபங்

http://acharya.org

யாஸம், 10-மணி வரையில் செய்து கொண்டு பாதயாத்திரையாக ஏள்ளி, நதி, தடாகம், நடபாவி முதலான இடங்களில் அவகாஹ ஸ்நானம் செய்தாகிறது.

மன்னார்குடியிலிருந்து நாகப்பட்டினம், சீர்காழி, திருவாலி, திருநகரி—திருச்சித்திரகூடம் திருவஹீந்திரபுரம் முதலான திருமங்கையாழ்வார் ஸாதித்ததும் இதர ஆழ்வார் மங்களாசாஸநம் செய்த சோழநாட்டுத் திருப்பதிகளை மங்களாசாஸனம் செய்து கொண்டு, மத்யத்தில் இருக்கப்பட்ட அக்ரஹார ஸ்ரீ வைஷ்ணவர்கள் சிஷ்யர்களுடைய பிரார்த்தனைக் கிணங்கி அந்தந்த அக்ரஹாரங்களுக்கு ஏள்ளி, ஸமாச்ரயணம், பரஸமர்ப்பணம் முதலானதுகளை நடத்தி கொண்டு (முக்திதரும் நகரேழில் முக்கியமானதும் பிரம்மாவின் யாகத்தில் ஆவிர்ப்பவித்தவரும் முதலாழ்வார்கள் பாஷ்யகாரர் நிகமாந்த மஹாதேசிகன் முதலான ஆசாரியாள் அவதரித்ததும் தொண்டை நாட்டில் சிறந்ததுதான) ஸ்ரீ காஞ்சியில் பேரருளாளன் பெருந்தேவித் தாயாரை மங்களாஸாசனம் செய்ய மார்கழி மாதம் ஏள்ளியாச்சுது.

தேவஸ்தான ஆபீஸர்கள், டிரஸ்டிகள், சத்ரசாமர யானை 'கஜேந்தரன்' குதிரை மேளம் முதலான ஸகல தேவஸ்தான பரிவாரங்களுடன்-விண்ணோர்களிலும் சீரியரான ஸ்ரீ வைஷ்ணவர்கள் சிஷ்ய கோடிகள், ஆஸ்திகர்கள் புடைசூழ-ஸ்வஸ்தி வாசனத்துடன், வரவேற்பு நடந்து-பெருந்தேவிதாயார் பேரருளாளனை மங்களா சாஸநம் செய்து-ஸ்ரீ ரங்கராஜவீதியில் அர்ச்சாவதாரமாக ஏள்ளி இருக்கிற பிருந்தாவனத்தையும் ஸேவித்து, திருப்பாவை உபன்யாஸம், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் காலக்ஷேபம் ஸாதித்து 3-மாதம் ஏள்ளிருந்து ஒரு ஸதஸ் நடத்தி, பங்குனி உத்திரம ஹோத்ஸவத்தில் திவ்ய தம்பதிகளை மங்களா சாஸநம் பண்ணி நியமனம் பெற்றுக் கொண்டு, திருமலையாத்ரை ஏள்ளியாச்சுது. மத்தியில் ஏள்ளியிருக்கும் திருப்புட்குழி விஜயராகவன் மரகதவல்லித் தாயார் மங்களா சாஸனம் செய்து, கடிகாசலம் என்று பிரசித்தி பெற்ற சோளஸிம்மபுரம் ஏள்ளி ந்ரஸிம்ஹன் அமிர்தவல்லித் தாயார் எல்லோரையும் மங்களாசாஸனம் செய்து திருமலை ஏள்ளி-தேவஸ்தான கமிஷனர்-முதலான ஸகல தேவஸ்தான நிர்வாஹஸ்தர்களுடன் ஸகல தேவஸ்தான பரிஜனங்களுடன் வரவேற்பு நடந்து-திருவேங்கடமுடையானுக்குத் திருப்பரிவட்டம் ஸமர்ப்பித்து-மங்களாசாஸனம் பண்ணி திருவேங்கடமுடையானால் அனுக்கிரகித்த-1500 ரூபாய் பெறுமான ஸாதரா-தேவஸ்தான குடை முதலான மரியாதைகளை



http://acharya.org

மடாதிபதிகளுக்கு நடந்த முதல் தரமான மரியாதைகளைப் பெற்று, 4-நாள் தங்கி மறுபடியும் பெருமாள் கோவிலுக்குப் பேரருளாளன் பிரம்மோத்ஸவத்துக்கு ஏள்ளி-உத்ஸவம் முழுவதையும் அனுபவித்து மதராஸ் நகர வாசிகள் பிரார்த்தனையின் பேரில் திருநீர்மலையிலேயே ஏள்ளியிருந்து, C. P. S. ராகவாசாரியர் நிர்வாஹத்தின் பேரில் 2-வது சாதுர் மாஸ்ய ஸங்கல்பத்தை முடித்துகொண்டு திருவல்லிக்கேணி திருவிடந்தை, திருக்கடன் மல்லை முதலான எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்து உத்திரன்மேரூர் ஏள்ளி-அங்கே கோயில் கொண்டெழுந்துருளியிருக்கும் சுந்தரவரதன் விமானத்துக்கு C. P. S. ராகவாசாரியரைக் கொண்டு கலசம் ஸமர்ப்பித்து பிரதிஷ்டை செய்துவிட்டு திருவஹீந்திரபுரம் தேசிகன் உத்ஸவத்துக்கு ஏள்ளி-ஆதிநாராயண ரெட்டியால் கட்டப்பட்ட கண்ணாடி அறையைத் திறந்து வைத்து பகல் பத்து நூதன மண்டபத்தையும் திறந்துவைத்து தேசிகன் உத்ஸவம் பகல் பத்து இராப் பத்து அத்யயன உத்ஸவத்தையும் அனுபவித்து தைமீ 5வ பெண்ணையாறு உத்ஸவமும் ஸேவித்து திருக்கோவிலூர் முதலாழ்வார்களை அனுபவித்து - திருவிக்கிரமனையும் மங்களாசாஸனம் செய்து-மேலக்கோட்டைக்கு வைரமுடி உத்ஸவத்துக்குப் புறப்பட்டு, சிரமம் பாராமல் 2-3-தினங்களில் மாதுகரம் இல்லாமலும் 20-மைல் வீதம் நடந்து பெங்களூரில் 4-நாள் தங்கி வைரமுடி முதல் உத்ஸவத்துக்கு ஏள்ளி 10-நாள் இருந்து விசேஷ வரவேற்பு முதல் தரமான மரியாதைகளைப் பெற்று-மறுபடியும் 3-வது சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை முன்னிட்டு பெங்களூர் ஏள்ளியாச்சுது. பெங்களூரில் பிரபல வக்கீல் வெங்கட்ரங்கய்யங்கார் முதன்மையில் கமிட்டியார் ஆராதித்து T. S. ராஜம் அய்யங்கார் ஸ்வாமி வெகு சிறப்பாக ஸங்கல்பத்தை நடத்திவைத்தார்.

பெங்களூரில் 4-மாதம் ஏள்ளியிருந்து சில பண்டிதர்களுக்கு ஸ்ரீ பாஷ்யம் காலக்ஷேபம் ஸாதித்து இராத்திரியில் ஸ்ரீமத்ராமாயணம் உபந்யாஸம் செய்தருளினபடி.

பிறகு ஹாஸன் டிஸ்ட்ரிக்ட்டு ஏள்ளி ஸ்ரீ பாஷ்யகாரர்தீர்த்தம் சேர்த்தஸாளக்கிராமம் ஏள்ளி நடபாவியில் தீர்த்தமாடி ஆங்காங்கு இருக்கபட்ட எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்து மைசூரில்-உள்ள சிஷ்ய கோடிகள் பிரார்த்தனையின் பேரிலும் ஸ்ரீ பரமஹம்ஸ இத்யாதி பரகாலஸ்வாமி நியமனத்தை முன்னிட்டு ஹயக்ரீவனையும்-அவரை ஆராதித்த தூப்புல் பிள்ளையையும் புரட்டாசி சிரவண உத்ஸவ தினத்தில் மங்களாசாஸனம் செய்து பரகால

http://acharya.org

ஸ்வாமி நியமனத்தின் பேரில்-நிகமாந்த மஹா தேசிகன் வைபவம் பற்றி உபன்யாஸம் செய்து பரகாலஸ்வாமி அனுக்கிரகம் பெற்று-மைசூரில்-ஸரஸ்வதீபுரத்தில்-ஏள்ளியிருந்து ஆக்கூர் ஆண்டவன் திருநக்ஷத்திரத்தை வெகு சிறப்புடன் நடத்தி விட்டு-ஸோஸலேக்கு ஏள்ளி, கொள்ளேகாலம் மார்க்கமாக-காவேரி கபிலை சங்கமான T-நரஸிம்மபுரம் ஏள்ளி-ந்ரஸிம்மனை ஸேவித்து பிலகிரி என்கிற புராதன பிரசித்தமான க்ஷேத்ரத்துக்கு ஏள்ளி ரங்கனுதனை மங்களா சாஸனம் செய்து மறுபடியும் ஸோஸலேக்கு ஏள்ளியாச்சுது.

இந்த ஸமயத்திதில் காஞ்சீபுரம் தேவப் பெருமாளுக்கு கைங்கர்யம் செய்து வந்த யானை பரமபதித்து விட்டது என்று விஷயம் கேழ்விப்பட்டு அத்திகிரி நாதனுக்கு திருவுள்ளத்துக்கு உகப்பான யானை பரிதேரின் மேல் அழகர் எம்பெருமானுக்கு அவசியம் தேவையான யானையை 6000 ரூபாய் கொடுத்து, திருவாங்கூர் யானை வாங்கி அனுப்பினபடி. திருவஹீந்திரபுரம் தேவநாதனுக்கு அபயஹஸ்தம் ஸமர்ப்பிக்க வேணும் என்று பாரித்து, சில சிஷ்யர்களைக் கொண்டு 3000 ரூபாய் பெறுமான அபயஹஸ்தம் ஸமர்ப்பித்தாச்சுது. மறுபடியும் பிலகிரிக்கு ஏள்ளி வெங்கட்ரங்கய்யங்கார் மூல்யமாக மைசூர் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்ட குட்டி யானையைப் பெற்று கொண்டு, பெங்களூர் ஏள்ளி திருப்பாவை காலக்ஷேபத்தை நடத்தி ஒரு மாதம் இருந்துவிட்டு, சேலம் மார்க்கமாக விருத்தாசலம் வந்து ஸ்ரீமுஷ்ணம் எம்பெருமான் ஸ்வயம் வ்யக்தத்தில் பிரதானமான வராஹ மூர்த்தியை மங்களா சாஸனம் செய்து காட்டுமன்னூர் கோவில் குருகைக் காவலப்பன், நாதமுனி, ஆளவந்தார் முதலான ஆசாரியாளை மங்களாசாஸனம் செய்து, திருக்குடந்தையில் வெகுநாளாக கதா, கதா என்று எதிர்பார்த்த சிஷ்யர்கள், ஆஸ்திகர்கள், பிரார்த்தனையின் பேரில் விசுவாவசு வருஷம் பங்குனி மாதம் ஏள்ளியாச்சுது. திருக்குடந்தையில் எந்தெந்த திவ்ய தேசங்களில் நடத்தின வரவேற்பைக் காட்டிலும் மிகக் சிறந்த முறையில் ஒரு மைல் தூரத்திலிருந்து வாணம், மத்தாப்பு, மேளம் கணக்கில்லாத கூட்டம் தேவஸ்தான மரியாதைகளுடன் ஸ்மார்த்த வைஷ்ணவர்கள் வேத பாராயணம் கோஷ்டியுடன் நகரப் பிரவேசம் ஏள்ளி, அமுதனுக்காக வாங்கிக்கொண்டு வந்த குட்டியானையை சார்ங்கபாணி திருவடியில் ஸமர்ப்பித்து, மங்களாசாஸனம் செய்து, 60 திவ்ய தேசத் தெம்பெருமான்கள் மரியாதைகளை ஷஷ்டி பூர்த்தி வருஷோத்ஸவ அங்கமாகப் பெற்றுக்கொண்டாச்சுது.

http://acharya.org

இதற்கு முந்தியே ஆராவமுதாழ்வான் திரு பிரதிஷ்டையில்-வேத பாராயண அத்யாபகஸ்தலத்தார் ஸ்வாமிகளுக்கும் வேஷ்டி, ஸம்பாவனே, ரயில் சார்ஜு முதலானதுகளையும் M. D. பிரதர்ஸ் சுதர்சன ஐயங்கார் மூல்யமாக நடத்தினபடி. திவ்யபிரபந்தம் அவதரித்தும் ஜன்மபூமியாயும் அர்ச்சையில் ஈடுபாட்டினுலும்-கோமளவல்லித்தாயாருக்கு 15000 ரூபாய் பெறுமான வைர அட்டிகை அனேக ஆஸ்திகர்களைக் கொண்டு ஸமர்ப்பித்தபடி அவ் விடமிருந்து நாச்சியார் கோவில், திருக் கண்ணமங்கை, நாதன் கோவில், திருச்சேரை-முதலான திவ்ய தேசங்கள் மங்களா சாஸனம் செய்துகொண்டு மதுரைக்கு ஏள்ளி-ஸ்ரீவில்லிபுத்தூர், வானமாமலை, ஆழ்வார் திருநகரி, திருக்குறுங்குடி எம்பெருமான்களை மங்களா சாஸனம் செய்து மறுபடியும் 4 வது சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை மதுரையில் நடக்க வேணும் என்று T. S. R. ஸ்வாமி பிரார்த் தனையை அங்கீகரித்து மதுரைக்கு ஏள்ளி 3-மாதம் இருந்து. ரஹஸ் யத்ரயஸாரம்-உபன்யாஸங்களை வெகு அழகாக ஸாதித்து திருமாலி ருஞ்சோலை-எம்பெருமான் ஸுந்தரபாகு ஸன்னிதியில் ஆண்டாள் பாரித்தபடி-நூறுதடா சொன்னேன்-என்று ஸாதித்ததை-நம் ஸ்ரீபெரும்பூதூர் வள்ளல் அனுஷ்டித்துக் காட்டியதை-பிரகிருதம் ஆண்டவன்-அநேக ஸ்ரீ வைஷ்ண ஸமிருத்தியுடன் 3-மைல் தூர முள்ள நூபுரகங்கையிலிருந்து திருமஞ்சனம் தீர்த்தம் கொண்டு வந்து, விசேஷ திருமஞ்சனம் நடத்தி, திருப்பரிவட்டம் சாத்தி விசேஷ தளிகையுடன்-வெண்ணை-அக்கார அடிசல்-ஸமர்ப்பித்து-அந்த-எம் பெருமான் விஷயமான ஆழ்வார்கள், ஆண்டாள் அனுபவித்த பாசுர ஸ்தோத்திரங்களைப் பரக்க உபன்யாஸம் செய்ததை எல்லாரும் கேட்டு ஆனந்தானுபவம் செய்து, பாஷ்யகாரரே அவதாரம் என்று மகிழ்ந்தார்கள். பிறகு-திருப்புல்லாணிக்கு ஏள்ளி 3-நாள் ஸேதுஸ் நானம் செய்து-முந்தி தனுஷ்கோடியில் இருந்த சக்ரவர்த்தி திருமகன் ஸீதை லக்ஷ்மணன் முதலானவர்களை ஸமுத்ரம் பொங்கி வந்து மண்மூடிவிட்டதை-திருப்புல்லாணியில் விசேஷ உபய வேத பாராயணங்களுடன் பிரதிஷ்டை செய்து வைத்து-திண்டுக்கல், பொள்ளாச்சி மார்க்கமாக கோயம்புத்தூர் ஏள்ளி-அவ்விடத்தில்-விசேஷ வரவேற்புடன் T. ராகவாசாரியார் திருமாளிகையில் வீற்றிருந்து திருப்பாவை கால க்ஷேபம் நடத்தி-மலைநாட்டு திருப் பதிகள்-ஸேவிக்க வேணும் என்று திருவுள்ளம்பற்றி-ஒவ்வொரு தினமும் 15-20 மைல் வீதம் சிரமப்பட்டு நடந்து-வித்துவக்கோடு. திருநாவாய், திருக்காட்கரை, குருவாயூர்-திருக்கடித்தானம், திரு வனவண்டூர்-திருமூழிக்குளம், திருச்செங்குன்றூர்-திருவாறன்விளை-

http://acharya.org

குட்டநாட்டுப் புலியூர்-வர்க்கலை என்கிற-ஜனார்த்தனம் எம்பெருமான்களை ஸேவித்து மேற்கு ஸமுத்திரத்தில் ஸ்நானம் செய்து திருவனந்தபுரம், திருவாட்டாறு, திருவண்பரிசாரம் முதலான எம்பெருமான்களை மங்களாசாயனம் செய்து மறுபடியும்-வானமாமலை திருக்குறுங்குடி, ஆழ்வார் திருநகரியில் உள்ள திவ்ய தேசங்களை மங்களாசாஸனம் செய்து, ஆண்டாள் அனுக்கிரஹத்தாலும் ஆழ்வார் கிருபையாலும் இவ்வளவு எம்பெருமான்கள் ஸேவை கிடைத்தது என்றும் க்ருதஜ்ஞதானு ஸந்தானத்துடன்-பரிபூர்ணமாக அனுபவித்து மனமுருகி ஆனந்தக் கண்ணீர் பெருகினதை-அடியேனைப்போல் ஸேவித்தவர்கள், தேரழுந்தூர் ஆண்டவனே மறுபடியும் அபராவதாரம் என்று சொல்லுவது ஸரியான பொருத்தம் என்று நிச்சயித்தோம்.

பிறகு பிரகிருதம் ஆண்டவன் திருக்குடந்தை வேதாந்த ராமானுஜமஹாதேசிகன் ஷஷ்டி பூர்த்தி மஹோத்ஸவத்தை வெகு அழகான முறையில் நடத்தவேணும் என்று T. S. ராஜம் ஸ்வாமி முதலான பெரிய பெரிய லௌகிக பிரபுக்களும் வைதிகர்களும் நிச்சயித்துக் கமிட்டி ஏற்படுத்தி-ஆண்டவனை, ஸ்ரீரங்கத்தில் ஏள்ள வேணும் என்று பிரார்த்தித்தார்கள். ஆசாரியார் பாதுகைகள் நியமனம் எப்படி நடக்குமோ என்று ஸாதித்தாச்சு.

இந்த ஸஞ்சாரத்துக்கு, முக்யமான பேருதவி மோட்டார், வான்-ஜீப், இதுகளை கொடுத்தும் ட்ரைவர் சம்பளம் முதலானதுகளை அவர்களே கொடுத்தும் எல்லா இடங்களிலும் அவர்களுடைய ஏஜண்டு ஆபீஸர்களை கொண்டு ஸகல சௌகர்யங்களை ஏற்படுத்திக் கொடுத்த T. V. S. ராஜம், கிருஷ்ணன், ஸந்தானம் முதலானவர்களுக்கு பகவானும் ஆசாரியாளும் ஸகல சிரேயஸ்ஸும் அனுக்கிரஹிக்கவேணும் என்று தினந்தோறும் பிரார்த்தித்தாகிறது. இதுவரையில் சுமார் 6000 மைல் நடந்து 105 திவ்ய தேச எம்பெருமான்களை மங்களா சாஸனம் செய்து மைசூர் ராஜா, திருவாங்கூர் ராஜா, எட்டையாபுரம் ராஜா, அனேக மந்திரிகள், வக்கீல்கள், பிரபுக்கள் அடிக்கடி வந்து இனிய சொற்களை கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது விஷயங்கள் அவ்வப்போது பாதுகா பத்ரிகா மூலம் வெளியாவது தெரிந்ததே. ஸ்ரீரங்கம் கோயிலில் திவ்ய தம்பதிகளின் பங்குனி மாத மஹோத்ஸவம் காரணமாக, ஸ்ரீமதாண்டவன் ஷஷ்டியப்த பூர்த்தி கமிட்டியார் ஏற்கெனவே திட்டமிட்டிருந்தபடி ஸ்ரீரங்கத்தில் விமரிசையாகக் கொண்டாட

http://acharya.org

இயலாதமையால், மதுரையில் பங்குனி புஷ்ய நக்ஷத்திரத்தில் ஜவகர் நகரில் ஸ்ரீ T. S. ராஜம் ஸ்வாமி தம பங்களாவில் யதாக்ரமம் திவ்ய தேசத்து எம்பெருமான்கள் பிரஸாதங்களுடனும், விசேஷ ததீயாராதன தக்ஷிணைகளுடனும் ஸம்பாவனைகளுடனும் ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவம் நடைபெற்றது. சென்னை, மைசூர், கேரளா முதலிய இடங்களிலிருந்து பல சிஷ்யர்களும், ஆஸ்திகர்களும், பக்தர்களும் வந்திருந்து ஸ்ரீமதாண்டவன் ஆசியைப் பெற்று கிருதார்த்தர்களானார்கள்.

ஸ்ரீரங்கம் திவ்ய தம்பதிகளுடையவும் பூர்வாசார்யார்களுடைய வும் திவ்யாநுக்ரஹங்களை முன்னிட்டு, ஸ்ரீரங்கம் பெரியாச்ரமத்தில் ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவம் திட்டமிட்டிருந்தபடி சித்திரை மாதத்தில் 9—4—'67யிலிருந்து 18—4—'67 வரை வெகு பிரபலமாக நடைபெறும். பிரதி தினமும் ஸ்ரீபாஷ்யாதி கிரந்த சதுஷ்டய பாராயணங்களுக்கும் வித்வத் ஸதஸ்ஸுக்கும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

*ப்ரக்ருதம் ஆண்டவன் ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மகாதேசிகன் தனியன்*

*ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ முனிகருணா லப்த வேதாந்தயுக்மம்*
*ஸ்ரீமத் ஸ்ரீவாஸ யோகீச்வர குருபதயோ ரர்பித ஸ்வாத்மபாரம் |*
*ஸ்ரீமத் ஸ்ரீரங்கநாதாஹ்வய முனிக்ருபயா ப்ராப்த மோக்ஷாச்ரமம்தம்*
*ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ முனிமபரம் ஸம்ச்ரயே தேசிகேந்த்ரம் ||*

பங்குனி—புஷ்யம்

சுபம்

http://acharya.org

OVILOCR MAHALAYAM
KOVILUR 630 307
NANAGIRI VIA

ஸ்ரீ:

# ஸ்ரீமத் ஆண்டவன் வேதாந்த ராமாநுஜ மஹா தேசிகன் பாத இலச்சினை பட நடந்தருளிய பிரதேசங்கள்

(டி. ஈ. கிருஷ்ணதேசிகன், வித்யார்த்தி) 307

NANAGIRI VIA

தேவாதிநாத கமலாப்ருத நேமிபூர்வாம்
தீப்தாந்தராம் வகுளபூஷண நாதமுக்யை:
ராமாநுஜப்ரபிருதிபி: பரிபூஷிதாக்ராம்
கோப்த்ரீம் ஜகந்தி குருபங்தி மஹம் ப்ரபத்யே

பங்கயக் கண்ணன், பெரிய பிராட்டியார், சேனைநாதன் முதலாக உள்ளதும், வகுளாபரணரான நம்மாழ்வாரை நாதனைக் கொண்டதால் தீபம் போல் ப்ரகாசிக்கும் ஆழ்வார்களால் நடுபாகத்தை யுடைதாயும், ராமானுசன், ராமனுச அப்புள்ளார் முதலான ஆசார்ய ச்ரேஷ்டர்களால் விசேஷமாக அலங்கரிக்கப்பட்டும், உலகையே ரக்ஷிக்கின்றதான இப்பொழுது வரையிலுள்ள ஆசார்ய கோஷ்டியை அடியேன் அடிபணிந்து நிற்கிறேன் என்று நம் தூப்புல் வள்ளல் ஆசார்யர்களுடைய பெருமையை நினைந்து போற்றிப் பேசுகிறார். அவ்வளவு பெருமை யுடையவர் ஆசார்யர்கள் என்பது இதனால் நமக்குத் தெரிகிறது. திருமாமகள் என்றும் சேரும் திருமார்பனை தேவாதி தேவன் செய்தருளும் பேரருளுக்குப் போற்றிப் பேசியோ, பல மொழிகளால் பலவிதமாக விரித்தெழுதியோ முடித்துவிடலா மென்றால் நம்மால் முடியாது. அன்றொரு நாள் இவ் வுலகை யாக்கிய எம்மீசன் இங்கே நாம் பெறுவதெல்லாம் பெற்று வாழ வகை செய்தான். பாரினில் தானும் வேண்டுருக்கொண்டு பல படியாகப் பாங்காகப் பக்தர்களுக்குப் பேரருள் புரிந்தான். பூதலங் காக்கவே பாரித்துக் கொண்டு பலபதிகளைத் தோற்றுவித்துத் தானும் அவ்விடங்களில் அர்ச்சையாக எழுந்தருளினான். அத் திருப்பதி எம்பெருமானை மங்களாசாஸனம் பண்ண வேண்டித் தானே ஆழ்வார்களாயும் ஆசார்யர்களாயும் அவதரித்தான். ஏன் இம் மாதிரி அவன் தோன்ற வேண்டும் என்றால், அதுவும் அவன் திருவருளேதான். உலகை ரக்ஷிக்கவே ஆசார்யனுடைய திருவுருவில் அவன் எழுந்தருளுகிறான் என்பதை நாம் அனேக திவ்ய ஸூக்திகளால் தெரிந்து கொள்கிறோம். அவ்விதமாக அனுக்ரஹிக்கத் திருவுள்ளங் கொண்டு தோன்றிய திரு அவதாரங்களில் ஸ்ரீமத் ராமானுஜ முனியாகிய அவதாரமும் ஒன்று. அந்த அவதாரத்தில் ஸ்ரீமத் ராமானுஜ முனி என்னும் ஸ்ரீ பாஷ்ய

http://acharya.org

காரர் நூற்றெட்டு திவ்ய தேசங்களுக்கு எழுந்தருளியும், எம் பெருமான்களை மங்களாசாஸனம் பண்ணியருளியும், பரமனடியார்களுக்குப் படிப்படியாகப் பாங்காக உபதேசங்கள் செய்தருளியும், தான் திருவவதாரம் பண்ணிய பிரயோஜனம் பூர்த்தியான படியாலே பேரானந்தம் கொண்டார். இதைக் கூரத்தாழ்வான் திருக்குமாரரான ஸ்ரீபராசரபட்டர் முக்தக சுலோகத்தில்

ஸ்ரீரங்கம் கரிசைலமஞ்ஜன கிரிம் தார்க்ஷ்யாத்ரி ஸிம்மாசலௌ
ஸ்ரீகூர்மம் புருஷோத்தம் ச பதரீ நாராயணம் நைமிசம்,
ஸ்ரீமத்வாரவதீ ப்ரயாக மதுரா யோத்யாகயா : புஷ்கரம்
ஸாலக்ராம கிரிம் நிஷேவ்ய ரமதே ராமாநுஜோயம்முனி:

என்று அருளிச் செய்திருக்கிறார்.

ஸ்ரீரங்கஸ்தல வேங்கடாத்ரி கரிகிர் தாயாதௌ சஷ்டோத்தரே
ஸ்தானேக்ராம நிகேதனேஷு ச ஸதாஸாந்நித்யமாஸேதுஷே/
அர்ச்சாரூபிணே மர்ச்சகாபிமதித: ஸ்வீகுர்வதே விக்ரஹம்
பூஜாம்சாகில வாஞ்சிதான் விதரதே ஸ்ரீசாய தஸ்மைநம:

என்று பரத்வாதி பஞ்சகத்தில், ஸ்ரீமத் வேதாந்த தேசிகனுடைய ப்ராசார்யராயும், நடாதூர் அம்மாள் என்றும் பிரசித்தராயும் எழுந்தருளியிருந்த வாத்ஸ்ய வரதுதேசிக ஸ்வாமியும், "ஸ்ரீரங்கம் முதலான திவ்ய தேசங்களிலும், கிராமம், நகரம் முதலான இடங்களிலும் அர்ச்சையாய் எழுந்தருளி, பரம கிருபையுடன் திருவாராதனம் கண்டருளி இவ்வுலகோர்களுக்கெல்லாம், அவரவர் ஆசைப்படும் பயன்கள் அனைத்தும் கொடுத் தருளும் ஸ்ரீய: பதியை ஸேவிக்கிறேன்" என்று மங்களாசாஸனம் செய்துள்ளார்.

ஸ்ரீமத் பாஷ்யகாரர் ப்ரத்யக்ஷமாய் அனுபவித்தும், நடாதூர் அம்மாளால் மங்களாசாஸனம் பண்ணப்பட்டதாயுமிருக்கிற திவ்ய தேசங்கள், புராண ஸ்தலங்கள், நகரங்கள், கிராமங்கள் எல்லாவற்றிற்கும் ஸ்ரீரங்கம் பெரியாச்ரமத்தில் எழுந்தருளி அனுக்கிரஹிக்கும் வேதாந்த ராமாநுஜ மஹா தேசிகன் என்னும் நம் திருக்குடந்தை ஆண்டவன், "நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்களுழக்கிய பாத தூளிபடுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே" என்று ஆழ்வாரால் போற்றப்படும் திருப்பதிகளுக்கெல்லாம் பாதயாத்திரையாகவே எழுந்தருளி எம்பெருமான்களை எல்லாம் மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டு ஆராமம் சூழ்ந்த திருவரங்கமாநகரில் உள்ள நம் பெரியாச்ரமத்திற்கு எழுந்தருளியாகியிருக்கிறபடி. அடியார்களுக்காக அன்றொரு நாள் அன்னமாய் அருமறை தந்தான் அரவணைத் துயில் கொள்ளும் அண்ணல். பிறகு அருமறையின் பொருள் ஆழ்வார்களாய் இன் தமிழ்மறை தந்தான். அது மறையவே அன்றொருநாள் அலைகடலைக் கடைந்து ஆராவமு

http://acharya.org

தாகிய தான் பெண்ணமுதுண்டு, விண்ணவர்க்கு அமுதூட்டிய அவ்வாரா வின்னமுதே முன்னம் மறையும் தந்து, அமுதும் அளித்து நாதமுனிகளுக்காகவும், நம்முடைய பாக்யத்தாலும் நமக்கே நாலாயிரமாம் தமிழ்மறை யென்னும் ஆராவமுதக் கடலை தந்தளித்தான் என்பதினாலேயே அர்ச்சையிலேயே தான் ஆராவமுதாழ்வாளுகி நின்றான். அவ்வாராவமுதாகிய பூங்குடந்தைக் கண்ணபிரானே இப்பொழுது குருமணியாக அவதரித்து, தன்னால் உண்டான உலகில் தன் பெருமையை நிலைநாட்டத் திருவுள்ளங்கொண்டு, ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ மஹா தேசிகனுகத் திருவவதாரம் செய்திருக்கும் பெருமை எழுத்திலும் வடிக்கமுடியாது, சொல்லாலும் கூற இயலாது. மூவரில் முதல்வனாய் ஒருவனை அவ்வெம் பெருமான் பரகால நாயகிக்கு எப்படி பஞ்சேந்திரியங்களுக்கும், அனுபவிக்கும் வகையில் திருக்குறுந்தாண்டகத்தில், கண்ணுக்கினியனுகவும், செவிக் கினியனுகவும், நாவிற் கினியனுகவும், திருமேனியைத் தொழுது அணையலாம்படி ஆசைப்படி இனியனுகவும், நாசிக்கினியனுகவும் அனுபவித்தாரோ, அம்மாதிரியே நம் ஆண்டவனும் நமக்கு அனேகவிதங்களிலும் அவனிலும் இனியனுக ஸேவை ஸாதிக்கிறபடியைக் கண்கூடாக இப்பொழுதும் நாம் காணமுடியும், "மாசற்றார் மனத்துள்ளானை வணங்கி நாமிருப்பதல்லால் பேசத்தானுவதுண்டோ" என்பதற்கேற்ப, நாம் இப்பொழுது எழுதத் தொடங்குவதும், சொல்லுவதும் நாம் ஸத்தை பெறுவதற்காகவே யல்லது, ஆண்டவன் பெருமையை உள்ளபடி அறிந்து சொல்லவே முடியாது. பெருங்காற்றிலே இழியுமவர்களைப் போலே உள்ளே அமுங்கி இருக்கலாமேயொழிய, பேசித் தலைக்கட்ட வொண்ணுது, என்றுதான் கூறத் தோன்றுகிறது.

இந்த ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவத் திருநாளில் அவ்வாசார்ய வள்ளல் பரமகிருபையுடன் எழுந்தருளி, திருப் பாத இலச்சினை தந்து, பக்தர்களை அனுக்ரஹித்து பரம பாவனமான பிரதேசங்களின் பெயர்களை எழுதி, பயன் பெறலாமே என்று திருவரங்கம் முதல் ஆரம்பித்து ஆந்திரம், கன்னடம், தமிழ்நாடு, மலையாளம் முதலான பிரதேசங்களில் எழுந்தருளியான பெயர்களை எழுதி திருவரங்கமாநகர் வந்து சேர்ந்தருளியவரை யனுபவிப்போம்.

ஸ்ரீரங்கம்
கொண்டயம்பேட்டை
உத்தமசேரி
தோஹூர்
கோவிலடி
புதுச்சத்திரம்
கோனேரிராஜபுரம்
தில்லைஸ்தானம்
ராயம்பேட்டை
கல்யாணபுரம்
வெண்ணற்றங்கரை
மாரியம்மன்கோவில்
கம்பயந்தத்தம்
வடுவூர்

http://acharya.org

மன்னார்குடி
சேனங்குளம்
லக்ஷ்மணாங்குலி
திட்டாணிவட்டம்
தாழக்குடி
திருக்கண்ணமங்கை
திருவாரூர்
கீவளூர்
நாகப்பட்டணம்
கீவளூர்
ஆமூர்
திருக்கண்ணபுரம்
உபயவேதாந்தபுரம்
சிறுபுலியூர்
மேட்டுப்பாக்கம்
மாயவரம்
செம்பேருணர்கோயில்
தலைச்சங்காடு
பார்த்தன்பள்ளி
திருநாங்கூர்
திருநகரி
சீர்காழி
ஆயங்குடிப்பள்ளம்
சிதம்பரம்
புவனகிரி
புதுச்சத்திரம்
சம்பாரெட்டிப்பாளையம்
ஆதிநாராயணபுரம்
சுப்ரமண்யபுரம்
ராமாபுரம்
திருவஹீந்திரபுரம்
கடலூர், மஞ்சகுப்பம்
நெல்லிக்குப்பம்
பன்ருட்டி
பொய்யராசூர்
கிராமம்
டி. எடையார்
ஆவியூர்
திருக்கோவிலூர்
ஆவியூர்

டி. எடையார்
கிராமம்
பேரங்கியூர்
விழுப்புரம்
பொய்கைப்பாக்கம்
விக்ரவாண்டி
கூட்டேரிப்பட்டு
சிங்கனூர்
அஸூர்
வெள்ளிமேடு
தையார்
வந்தவாசி
திருவத்தூர்
குடநகர்
வேளியநல்லூர்
ஆக்கூர்
மாமண்டூர்
காஞ்சீபுரம்
மாறல்
உத்திரன்மேரூர்
மாறல்
அரசாணிப்பாலை
காஞ்சீபுரம்
திருப்புட்குழி
தாமல்
கூரம்
சங்கரம்பாடி
அவளூர்
திருப்பாற்கடல்
பூண்டி
வாலாஜா
ராணிப்பேட்டை
லாடபுரம்
அம்மூர்
பெருங்காஞ்சி
சோளஸிம்ஹபுரம்
ராமகிருஷ்ணபேட்டை
தரணி
புத்தூர்
வடமலைப்பேட்டை

http://acharya.org

திருச்சானூர்
திருமலை
கீழத்திருப்பதி
திருச்சானூர்
வடமலைப்பேட்டை
புத்தூர்
நகரி
திருத்தணி
அரக்கோணம்
அம்மனூர்
புதுச்சத்திரம்
காஞ்சீபுரம்
பழையசீவரம்
வடக்குப்பட்டு
கரிச்சங்கால்
குரோம்பேட்டை
பல்லாவரம்
நங்கைநல்லூர்
பல்லாவரம்
குரோம்பேட்டை
திருநீர்மலை
பல்லாவரம்
திருவல்லிக்கேணி
மைலாப்பூர்
திருவல்லிக்கேணி
மூட்டைக்காரன்பேட்டை
செம்மஞ்சேரி
சிறுசேரி
திருவிடந்தை
குளத்தூர்
சிங்கப்பெருமாள்கோயில்
புலிப்பாக்கம்
பொன்விளைந்தகளத்தூர்
மணப்பாக்கம்
நெல்வாய்
உத்திரன்மேரூர்
பாதிரி
ஓரத்தி
சிங்கனூர்
விக்ரவாண்டி

வெங்கடாத்ரியகரம்
ஸவர்ணூர்
நெல்லிக்குப்பம்
திருவஹீந்திரபுரம்
மஞ்சகுப்பம்
சிங்கிரிகோயில்
பாண்டிச்சேரி
ஸ்வர்ணூர்
நெல்லிக்குப்பம்
திருவயிந்தை
புதுப்பாளையம்
அயிந்தை : புதுப்பாளையம்
சுரப்பூர்
புராணசிங்கபாளையம்
திருமங்கலம்
வளவனூர்
ஸ்வர்ணூர்
நெல்லிக்குப்பம்
மாளிகைமேடு
வெங்கடாத்ரி அகரம்
பொய்யப்பாக்கம்
விழுப்புரம்
சென்னெல்களம்
திருக்கோவலூர்
விரையூர் - மேற்கே
திருவண்ணமலை
பெரிய குளப்பாடி
செங்கம் மேல்சங்கம்
சிங்காரப்பேட்டை
சாவல்பேட்டை
மத்தூர்
தொகரப்பள்ளி
கிருஷ்ணகிரி
புளியஞ்சேரி
சூளகிரி
சாமன்தோட்டம் -
பேரண்டப்பள்ளி
ஒசூர்
கித்திகானஹல்லி
பெங்களூர்

http://acharya.org

மல்லேசுவரம்
கவிபுரம்
கங்கேரி
விடுதி
ராம்நகர்
மழூர்
மத்தூர்
மண்டியா
துக்தா
✓ மேல்கோட்டை திருநாரா
யணபுரம்
தொண்டனூர்
✓ ஸ்ரீரங்கப் பட்டணம்
மண்டியாகுப்பல்
உக்கரிக்கரை
ஸ்ரீரங்கராஜபுரம்
ஸோஸலே
டி. நரஸிப்பர்
✓ தலேக்காடு
கொள்ளேகாலம்
✓ சிவசமுத்திரம்
ககநசுக்கி
பரசுக்கி
பிளக்வாடி
கிருஷ்ணபுரம்
ஸோஸலே
உக்கரிக்கரை
கிருஷ்ணபுரம் வழியாக
ஹெம்பிகை
தலேக்காடு
குமாரபுரம்
பிளிகிரி
சம்பாமரம் பார்கவநிதி
பிளிகிரி கோயில்
குமாரபுரம்
கொள்ளேகாலம்
✓ சிவஸமுத்திரம்
மாரஹள்ளி
மரவல்லி
காளமுத்தனதொட்டி

மத்தூர்
மழுவூர்
ராம்நகர்
விடுதி
கங்கேரி
✓ பெங்களூர்
கவிபுரம்
டபிள்ரோடு
மல்லேச்வரம்
தாஸாஹள்ளி
நிலமங்கலா
த்யாமகுண்டல்
ஹீரஹள்ளி
தும்கூர்
கொல்லஹல்லி
குப்பி - ஹப்பி
கடப்பா
ஒட்டவனகட்டா
மாஹிசந்திரா
பள்ளூர்
கதபள்ளி
கிஸிஸாவே
நுக்கஹள்ளி
ஆல்தபள்ளி
சாந்திக் கிராமம்
ஹாஸன்
அகரம்
பேலூர்
மாதஹல்லி
ஹாஸன்
அம்புகா
சாந்திகிராமம்
அப்பன் ஹள்ளி
சென்னராயப்பட்டணம்
ஹிரிஸாவே
கதஹள்ளி
நெல்லிக்கரை
எடியூர்
குணிக்கல்
நாரசந்திரா

http://acharya.org

நிலமங்கலம்
பெங்களூர் மல்லேச்வரம்
கவிபுரம்
மல்லேச்வரம்
கங்கேரி
விடுதி
ராம்நகர்
மழூவூர்
மத்தூர்
மண்டியா
ஸ்ரீரங்கப்பட்டணம்
பச்சிமவாஹினீ
மைசூர்
கண்ணம்பாடி அணைக்கட்டு
கே. ஆர். ஸாகரம்
ஸாகரகட்டை
ஹம்பாபுரம்
ஸாளக்ராமம்
சிஞ்சினகட்டை
கே. ஆர். நகர் (எடத்தரை)
பிளிக்கரை
ஏலிவாலா
மைசூர் (ஒண்டிக்கப்பல்)
மைசூர் ஸரஸ்வதிபுரம்
ஸ்ரீரங்கப்பட்டணம்
மண்டியாகுப்பல்
பன்னூர்
உக்கலிக்கரை
ஸோஸலே
மோகூர்
மாரள்ளி—எலந்தூர்
குமாரபுரம்
பிளிகிரிமலே
குமாரனபுரம்
சாமராஜ நகரம்
மங்கலம்
மோகூர்
டி. நரஸிப்பூர்
ஸோஸலே
ஸ்ரீரங்கராஜபுரம்

பன்னூர்
ஸ்ரீரங்கப்பட்டணம்
தொண்டனூர்
மேல்கோட்டை
துக்தா
மண்டியா
மத்தூர்
மளூவூர்
ஸ்ரீராம்நகர்
விடுதி
கங்கேரி
பெங்களூர் கவிபுரம்
மல்லேச்வரம்
வின்ஸன்கார்டன்
எப்பார் ஸ்ரீவைஷ்ணவஸபா
ஸ்ரீனிவாஸாகாலனி
கண்டோன்மென்ட்
சித்தானஹள்ளி
ஓசூர்
காமன்தொட்டி
பழக்கோட்டை
சூள்கிரி
புளியஞ்சேரி
கிருஷ்ணகிரி
காவேரிப்பட்டணம்
காரிமங்கலம்
தர்மபுரி
பாகல்பட்டி
தொப்பூர்
பூசாரிப்பட்டி
ஓமலூர்
சேலம்
மேட்டுப்பட்டி
ஏத்தாப்பூர்
ஆத்தூர்
தலைவாசல்
நயினார் பாளையம்
அடரி
விளாங்காடு
விருத்தாசலம்

http://acharya.org

ஸ்ரீ முஷ்ணம்
தொண்டஸமுத்திரம்
காட்டுமன்னார்கோவில்
எய்யலூர்
காளி
தேரழுந்தூர்
நடுவக்கரை
நடுவக்கரை
கும்பகோணம்
திருவெள்ளியங்குடி
ஒப்பிலியப்பன்கோவில்
மாங்குடி
ஒப்பிலியப்பன்கோவில்
நடுவக்கரை
திருக்குடந்தை
நாதன்கோவில்
இன்னம்பூர்
புள்ளம்பூதங்குடி
கபிஸ்தலம்
ஆடுதுறைப் பெருமாள் கோவில்
வழுத்தூர்
கும்பகோணம்
நாச்சியார் கோவில்
திருச்சேறை
திருப்பிராஜபுரம்
நீடாமங்கலம்
மன்னார்குடி
விளக்குடி
மருதவனம்
தெம்பிறை
திருமக்கோட்டை
மதுக்கூர்
பட்டுக்கோட்டை
ஒட்டன்காடு
பேராவூரணி
ஆயன்குடி
அறந்தாங்கி
அரிமளம்
கடயக்குடி
புதுக்கோட்டை
ஆருங்கல்
திருமெய்யம்
நெடுமரம்
திருக்கோட்டியூர்
S. S. கோட்டை (சத்ருஸம் ஹாரகோட்டை)
மேலூர்
திருமோகூர்
மதுரை
ஆவணியாபுரம்
வலையங்குளம்
ஆவியூர்
கல் குரிச்சி (காரியப்பட்டி)
பாளையம்பட்டி
பந்தல் குடி
முத்தலாபுரம்
எட்டையபுரம்
எப்போதும் வென்றான்
காட்டுநாயகன்பட்டி
வாலஸமுத்திரம் (குறுக்குச் சாலை)
தூத்துக்குடி
வாகைக்குளம்
திருப்புளிங்குடி
ஸ்ரீவைகுண்டம்
பெருங்குளம்
தென்திருப்பேரை
ஆழ்வார்திருநகரி
திருக்கோளூர்
இரட்டைத் திருப்பதி
கருங்குளம்
மூலக்கரைப்பட்டி
வானமாமலை
திருக்குறுங்குடி
வானமாமலை நூல்மில்
பொன்னாக்குடி
திருநெல்வேலி
கீழநத்தம்
மானூர்

http://acharya.org


அழகிய பாண்டியபுரம்
பனைவடலிசத்திரம்
சங்கரன்கோவில்
கரிவலம்வந்த நல்லூர்
(சோலைசேரி)
ராஜபாளையம்
ஸ்ரீவில்லிபுத்தூர்
மல்லி
செங்கமல நாச்சியார்புரம்
திருத்தண்கால்
கவளூர்
விருதுநகர்
வில்லூர்
தரளி
திருநகர்
டி. வி. எஸ். நகர்
சொக்கிகுளம்
தேசிகர்கோவில்
அழகர்கோயில்
நூபுரகங்கை
மதுரை சொக்கிகுளம்
தேசிகர்கோயில்
தானப்பமுதலிதெரு
சொக்கிகுளம்
அழகர்கோயில்
மேலூர்
வெள்ளியார் கோயில்
சிவகங்கை
சுந்தரநடப்பு
மானாமதுரை
புதுக்கோட்டை
பரமக்குடி
பாண்டிக்கம்மாய்
ராமனாதபுரம் ஐயப்பன் மில்
திருப்புல்லாணி
ராமனாதபுரம்
பாண்டிக்கம்மாய்
பரமக்குடி
திருவரங்கி
மானாமதுரை
சிவகங்கை

திருமாஞ்சோலை
திருப்புவனம்
மணலூர் (சிலைமான்)
மதுரை
துவரிமான்
சோழவந்தான்
வாடிப்பட்டி
அம்மையப்பநாயக்கனூர்
காந்திக்கிராமம்
திண்டுக்கல்
ரெட்டியார் சத்திரம்
பச்சிலைநாயக்கன்பட்டி
நரஸிம்மர் கோயில்
பழனி
மடத்துக்கொளம்
உடுமலைப்பேட்டை
கோலார்பட்டி
பொள்ளாச்சி
கிணற்றுக்கடவு
ஸுந்தராபுரம்
கோயம்புத்தூர்
கோயம்புத்தூர்
பாபநாயக்கன்பாளையம்
ஆவாரம்பாளையம்
கோயம்புத்தூர்
ராமநாதபுரம்
கோயம்புத்தூர்
கந்தய கவுண்டன் சாவடி
கஞ்சிக்கோடு
பாலக்காடு பள்ளிபுரம்
ஒற்றைப்பாலம்
மங்கரை
கொளப்பள்ளி
திருவித்துவக்கோடு
பட்டாம்பி
திருநாவாய்
இடப்பால்
சாலைச்சேரி
குருவாயூர்
சுரக்காட்டுக்கரை
திருச்சூர்


நெல்லாய்
சாலக்குடி
திருமூழிக்களம்
ஆல்வாய்
திருக்காட்கரை
எர்ணாகுளம்
உதயம்பேரூர்
வைக்கம்
கருத்திருத்தி
ஏட்டுமானூர்
ஏகாட்டயம்
சிங்கவனம்
திருக்கடித்தானம் (செங்கணாச்சேரி)
திருவல்லவாழ்
திருவண் வண்டூர்
திருச்செங்கன்னூர்
திருவாறன்விளை
திருச்செங்குன்றூர்
திருப்புலியூர்
மாவலிக்கரை
கிருஷ்ணபுரம்
கருநாதப்பள்ளி (ச்யவரா)
கொல்லம்
பாரிப்பள்ளி
வற்கலை (ஜனார்த்தனம்)
ஆற்றங்கல்
குழக்கூட்டம்
திருவனந்தபுரம்
நையாற்றங்கரை
பாரசாலை
திருவாட்டாறு
புலியூர் குறுச்சி
திருவண்பரிசாரம்
பணகுடி (சத்திரம்)
கோவையிலிருந்து நாகர் கோவில் வரை உள்ள 610 மைல் ஒரு மாதத்தில் எழுந்தருளியாயிற்று
திருக்குறுங்குடி
வானமாமலை
நாங்குனேரியில்
வானமாமலை
பொன்னுக்குடி
பெருமாள்புரம்
கீழநத்தம்
கருங்குளம்
ஆழ்வார் திருநகரி
திருக்கோளூர்
ஸ்ரீ வைகுண்டம்
நத்தம் (வரகுண மங்கை)
திருப்புளிங்குடி
கிருஷ்ணபுரம்
கீழநத்தம்
திருநெல்வேலி டவுன்
சேரன்மாதேவி
அம்பாசமுத்திரம்
ஆலங்குளம்
வீரகேரளம்புதூர்
குறிஞ்சாக்குளம்
சங்கரநாராயணன் கோவில்
சோலைசேரி
ராஜபாளையம்
ஸ்ரீவில்லிபுத்தூர்
நத்தம்பட்டி
கல்லுப்பட்டி
ஸாப்பலாபுரம்
திருமங்கலம்
மதுரை சொக்கிகுளம்
கோச்சடை
சோழவந்தான்
அம்மைநாயக்கனூர்
திண்டுக்கல்
வடமதுரை
வையம்பட்டி
மணப்பாறை
ராம்நகர்
திருச்சி
ஸ்ரீரங்கம் வரை மொத்தம் 5,000 மைல்கள் இவ்வூர்கள் எழுந்தருளியபடி.

http://acharya.org

KOVILOOR MADAL... AM
KOVILUR-630 307
MANAGIRI VIA



http://acharya.org



http://acharya.org